கிளை நூலகம்

இரண்டாம் பதிப்பு

விலை: 20
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32
கதிர் 259
ஆடி 27ஆம் நாள்
சனிக்கிழமை
12 ஓகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048

## வித்தியா படுகொலை வழக்கின் சாட்சியால் அதிர்ச்சித் தகவல்

*சிஐடி அதிகாரியைக் கொல்லச் சதியாம்*

கொழும்பு, ஓக. 12
"வித்தியா படுகொலை வழக்கு உள்ளிட்ட முக் கிய குற்றச்செயல்களை விசாரிக்கும் குற்றப் புலனாய் வுப் பிரிவின் கூட்டுக் கொள்ளை >> 25

## சமுர்த்தி பெறுவோருக்கு அது நிறுத்தப்படாது

*அரச தலைவர் மைத்திரி உறுதி*

கொழும்பு, ஓக. 12
ஏற்கனவே சமுர்த்தி உதவிகளைப் பெறுவோருக்கு அது நிறுத்தப்படாது, அவர்கள் பயனாளிகளாகவே தொடர்வார்கள் என்று உறுதியளித்தார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.
சமுர்த்தி மீளாய்வின் போது, அந்தக் கொடுப்பனவைப் பெற்று வந்த பல ஆயி >> 25

## முச்சந்தி முரளி



*ஆரியக் கூத்தாடினாலும் உவையள் காரியத்தில கண்...*





கிளிநொச்சி வன்னனேரிக்குளம் பகுதியில் உள்ள வாய்க்கால் ஒன்றிலிருந்து உழவு இயந்திரங்கள் மூலம் விவசாயிகள் தமது வயல்களுக்கு நீர் பாய்ச்சுகின்றனர். மழை வருமெனக் காத்திருந்த விவசாயிகள் அது பொய்த்ததால் இவ்வாறு நீர் பாய்ச்சுகின்றனர். (வ-21)

# புதிய அரசமைப்பு உருவாக்கத்தை முத்தரப்புகள் குழப்புகின்றன

*தாமதம் தமிழருக்குப் பாதகமாகவே அமையும் என நோர்வேயிடம் சம்பந்தன் இடித்துரைப்பு*

கொழும்பு, ஓகஸ்ட் 12
"தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை முன்வைப்பதில் கூட்டு அரசும் தாமதிக்கின்றது. தாமதம் தமிழ் மக்களுக்குப் பாதகமாகவே அமையும். புதிய அரசமைப்பு உருவாக்கத்தை முப்பெரும் தரப்புகளான சிறி >> 25



## வடமாகாண சபை உறுப்பினர்களுக்கு பத்திரிகைப் படி வழங்க ஒப்புதல்

யாழ்ப்பாணம், ஓக. 12
வடக்கு மாகாண சபை செயற்பட ஆரம்பித்து 4 ஆண்டுகளின் பின்னர், மாகாண சபை உறுப்பினர்கள் புதினப் பத்திரிகை கொள்வனவு செய்வதற்கு மதாந்தம் 650 ரூபாவை வழங்கும் யோசனைக்கு வடக்கு மாகாண அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
புதினப் பத்திரிகை கொள்வனவுக்காக மாதாந்தம் 650 ரூபாவை உறுப்பினர்களின் சம்பளப்பட்டியலுடன் சேர்த்து வழங்குவதற்கான யோசனை முன்வைக்கப் >> 25

## 20ஆவது திருத்தத்துக்கு சுதந்திரக் கட்சி கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 12
ஒன்பது மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யும் வகையில் அரசமைப்பில் 20 ஆவது திருத்தத்தைக் கொண்டுவர தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த யோசனையை அடியோடு எதிர்ப்ப தற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.
"தலைமை அமைச்சர் முன்வைத் >> 25

## சத்தியலிங்கத்தின் பதவி விலகலை ஏற்றார் விக்கி

யாழ்ப்பாணம், ஓக. 12
வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்திய லிங்கத்தின் பதவி விலகலை ஏற்றுக் கொண்டதாக முதலமைச் >> 25

## ஆற அமர்ந்து ஆராய்ந்தே கூட்டமைப்பு முடிவெடுக்கும்

*சம்பந்தன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 12
"20ஆம் திருத்தச்சட்டத்தை இன்னும் முழுமையாகப் படித்துப் பார்க்கவில்லை. இந்தச் சட்டத்திருத்தம் தொடர்பில் எமது கட்சி கூடி ஆராய்ந்தே ஆதரிப் பதா? இல்லையா? என்ற முடிவை எடுக்கும்" என்று எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
9 மாகாணசபைக >> 25

## சுவாமிநாதனின் அமைச்சுக்கு 4ஆவது செயலரும் மாற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 12
கொழும்பு அரசின் மீள்குடியேற்ற அமைச்சராக டி.எம். சுவாமிநாதன் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் அந்த அமைச்சின் செயலாளர்கள் மூவர் இடமாற்றப்பட்டுள்ளனர். 4ஆவது புதிய செயலாளராக மற்றொருவர் கடந்த திங்கட்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார். பொருத்து வீட்டை அமைப்பதற்கான நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு மறுத்தமையாலேயே, அமைச்சின் செயலாளர் விக்கிரமசிங்க கடந்த வாரம் இடமாற்றப்பட்டுள்ளதாக அமைச்சு வட் >> 25

## விபத்தில் சிக்குண்ட சிறுமி சிகிச்சை பயனின்றிச் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 12
ஆரம்ப சுகாதார நிலையத்தில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்து மா எடுக்கத் தாயாருடன் சென்ற 3 வயதுச் சிறுமி விபத்தில் சிக்குண்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுப் பரிதாபமாக உயிரிழந்தார்.
அந்தச் சிறுமிக்கு தலையில் ஏற்பட்ட வலிக்கு 6 தினங்களாக தீவிர சிகிச்சை வழங்கப்பட்ட போதும், அவர் நேற்று உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் இந்த விபத்து கடந்த 4ஆம் திகதி இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த >> 25

## குடாநாட்டில் வறட்சி பாதித்தோருக்கு உடனடி உதவிகளை வழங்க ஏற்பாடு

*யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 12
"யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவும் வறட்சி காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 19ஆயிரத்து166குடும்பங்களுக்கு உடனடி உதவிகளை வழங்கும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும் 5 தண்ணீர் பவுசர்களைத் தருமாறு கொழும்பு அரசிடம் அவசர கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது" என்று யாழ்ப்பாண மாவட்டச்செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
யாழ்ப்பாண மாவட்டத்தின் >> 25

## யாழ். மாவட்டச் செயலருக்கு முதலமைச்சர் திடீர் புகழாரம்

*யாழ்ப்பாணத்தை முன்னேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார் எனவும் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 12
யாழ். மாவட்டச் செயலரை நேற்று வாயாரப் பாராட்டினார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.
மாகாண நிர்வாகத்துடன் சேர்ந்து வடக்கை முன்னேற்றுவதில் செயலர் கண்ணும் கருத்துமாக இருக்கிறார் என்று முதலமைச்சர் தெரிவி த்தார்.
கடந்த மாதம் மயிலிட்டியில் இராணுவத்தினர் ஒரு தொகுதி காணிகளை விடுவித்தனர். அந்த நிகழ்வுக்கு முதலமைச்சருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை. தனக்கு அழைப்பு விடுக்காதமைக்கு என்ன காரணம் என்று மாவட்டச் செயலாளரிடம் விளக்கம் கேட் >> 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாடிக்கையாளரை கணிக்கும் திறனை வளர்க்கவேண்டும் வடக்கு வர்த்தகர்கள்

## தொழில்முனைவோர் கண்காட்சியில் வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக.12

யாருக்கு எந்தப் பொருளை வழங்க வேண்டும் அல்லது வழங்கலாம். நீங்கள் எதைச்செய்தால் அவர்கள் உங்கள் பொருள்களை மனமுவந்து வாங்குவார்கள் என்று கணிப்பதே வர்த்தகர்களின் திறனாக இருக்க வேண்டும். வடக்கு வர்த்தகர்கள் அந்தத் திறனை மேம்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் யாழ். தொழில் முனைவோர் 2017 கண்காட்சி சங்கிலியன் பூங்காவில் நேற்று நடைபெற்றது. அங்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு அதனைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மிகவும் வளர்ச்சி அடைந்த முன்னணி வகிக்கின்ற வர்த்தக நிறுவனங்களின் தொழில் முயற்சியில் வாடிக்கையாளரை திருப்திப் படுத்துதல் என்ற விடயம் மிகக் கவனமாக ஆராயப்பட்டிருக்கும். அவ்வாறான நிறுவனங்களில் கடமை புரிபவர்கள் வேறு எந்தத் தவறுகளுக்காகவும் மன்னிக்கப்படுவார்கள். வாடிக்கையாளர்களை திருப்திப் படுத்தத்தவறின் அவரின் சேவைகள் எதுவித விளக்கமுமின்றி நிறைவுறுத்தப்படும்.

வர்த்தகம் என்பது வெறுமனே கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் கிடைக்கப் பெறுகின்ற பொருள்களை கொள்வனவு செய்து அதனை வாடிக்கையாளர்களுக்கு இங்கு கொண்டுவந்து விற்பனை செய்வது மட்டுமல்ல. மாறாக எமது பகுதிகளில் காணப்படுகின்ற மூலப்பொருள்களைப் பயன்படுத்தி பொருள்களை உற்பத்தி செய்வதும் அவற்றைச் சந்தைப் படுத்துவதும் வர்த்தகத் துறையின் மிக முக்கியமான நடவடிக்கைகள் ஆகும்.

வடபகுதி இளைஞர் யுவதிகள் அரச சேவைகள் தவிர்ந்த வேறு எந்த வேலைகளிலும் ஈடுபட மாட்டார்கள் அல்லது வேறு தொழில்கள் தெரியாது என்று பொதுவான ஒரு கருத்து நிலவுகின்றது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

பொலித்தீன் பாவனைக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு மாற்றீடாகப் பயன்படுத்தக்கூடிய உற்பத்திகளில் ஈடுபடுவதன் மூலம் விற்பனைகளைப் பெருக்கமுடியும். வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் கவனத்தில் எடுக்க வேண்டிய சில விடயங்கள் உண்டு. சிந்தனைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் தான் வர்த்தகம் வளரும்.

சிறுதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்கப்பட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு யாழ். மாவட்டத்திலும் சிறப்பாக இயங்குகின்றது. வளமான அபிவிருத்திக்கான முயற்சியாண்மை மற்றும் சிறு வியாபார அபிவிருத்தி என்ற இலக்கின் கீழ் தொழிலற்ற இளைஞர் பிரிவினரின் தொழில் முயற்சியாண்மையை விருத்தி செய்தல் உயர் கல்வியைத் தொடர முடியாத இளைஞர் யுவதிகளை வியாபாரத் துறையில் ஈடுபடச் செய்தல், வியாபாரங்களின் பலன் தரு தன்மையை அதிகரிக்கச் செய்தல், வியாபாரத்துடனான துணைச் சேவைகளை வழங்குதல் ஆகிய விடயங்களில் கூடிய கவனம் செலுத்தி உற்பத்தி மற்றும் வியாபார நடவடிக்கைகளில் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதுடன் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும் உறுதுணையாக இந்தப் பிரிவு விளங்குகின்றது - என்றார். (ற-10)

## கஞ்சாவுடன் மூவர் கைது

மன்னார், ஒக. 12

மன்னார் எழுத்தூர் சந்தியில் கேரளக் கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து சுமார் 30 கிலோ கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து. கடற்படையினருடன் கொழும்பு சிறப்புப் பொலிஸ் பிரிவினரும் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற10, ரி)

## வெளிநாட்டு குடிமகன் கஞ்சாவுடன் கைது

கொழும்பு, ஒக. 12

கஞ்சா மற்றும் அதிக கடவுச்சீட்டுகளை வைத்திருந்த வெளிநாட்டுக் குடிமகன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளுப்பிட்டி சந்திப் பகுதியில் வைத்துக் குறித்த சந்தேக நபர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. சந்தேக நபரிடம் இருந்து கஞ்சா கலந்த 70 கிராம் மாவா. 16 சட்டவிரோத சிகரெட்டுக்கள், வெவ்வேறு நபர்களின் 5 கடவுச்சீட்டுகள் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (10, ரி)

## அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றியவருக்கு தண்டம்

தென்மராட்சி, ஒக. 12

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்ற பதில்நீதிவான் பா.சுப்பிரமணியம், வாகனச் சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிளில் பயணித்த மோட்டார் சைக்கிளோட்டிக்கும், வாகன வரிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. (ற-10, 9)

## முதியோர்களுக்கான பாடல் போட்டி நிகழ்வு



கிளிநொச்சி, ஒக. 12

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களில் தெரிவு செய்யப்பட்ட முதியோர்களுக்கான மாவட்ட நிலை பாடல் போட்டிகள் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றன.

சமூக சேவைகள் அமைச்சு பன்னாட்டு முதியோர் தினத்தையொட்டி முதியவர்களிடையிலான பாட்டுப் போட்டிகளை பிரதேச மற்றும் மாவட்ட ரீதியாக நடத்துகின்றது.

மாவட்டத்தில் முதல் மூன்று இடங்களில் தெரிவு செய்யப்படுவோர் கொழும்பில் நடைபெறும் தேசிய நிலையப் போட்டியில் பங்கு கொள்ளவுள்ளனர்.

போட்டியில் பங்குபற்றியோரில் முதலிடத்தை கரைச்சி பிரதேசத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி கனகராசாவும், இரண்டாமிடத்தை கண்டாவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த செல்லையா ரட்ணகுமாரும், மூன்றாமிடத்தை பளைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கந்தையா ஆறுமுகமும், பூநகரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த திருமதி பத்திநாதர் பிரேமினியும் பெற்றுக் கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10.9)

## வர்த்தகக் கண்காட்சி நேற்றுக் கொழும்பில்

கொழும்பு, ஒக. 12

சிஆர்ரி தேயிலை, இறப்பர், தென்னை பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முற்பகல் கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது என்று அரச தலைவர் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

நாட்டின் பெருந்தோட்டத் தொழிற்துறையின் மேம்பாட்டை நோக்காகக் கொண்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சால் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கண்காட்சியில் உரிய துறை சார்ந்த பன்னாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளை சந்தித்து கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது., வெளிநாட்டு உற்பத்தியாளர்களினதும், சந்தைப்படுத்துநர்களினதும் தேவைகளை இனங்கண்டு கொள்வதற்கும், புதிய தொழில்நுட்ப வசதிகளை அறிந்துகொள்வதற்கும் அதனூடாக தேசிய உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தவும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இந்த வருடம் இந்தக் கண்காட்சி இலங்கையில் நடைபெறுவதனூடாக இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழிற்றுறை உற்பத்திகளை பல புதிய பரிமாணங்களின் ஊடாக வெளிநாட்டுச் சந்தைக்கு வழங்குவதற்கான வாய்ப்பும் கிடைத்துள்ளது.

கண்காட்சியை ஆரம்பித்த அரச தலைவர், அதைப் பார்வையிட்டதுடன், வர்த்தகர்களுடனும் உரையாடினார். அமைச்சர் நவீன் திஸாநாயக்க, பிரதி அமைச்சர் லக்ஷ்மன் வசந்த பெரேரா உள்ளிட்ட குழுவினர் நிகழ்வில் கலந்துகொண்டனர் என்று ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-10)

## கிணற்றுக்குள் விழ்ந்து சிறுவர்கள் உயிரிழப்பு

திருகோணமலை, ஒக. 12

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனந்தபுரி பகுதியில் சிறுவர்கள் இருவர் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

உயிரிழந்தவர்கள் திருகோணமலை.தேவநகர் பகுதியைச் சேர்ந்த எல்.ஹேமதரன் (வயது16) மற்றும் கே.உமாசங்கர். புவிறாஜ் (வயது15) எனத் தெரிவிக்கப்பட்டது.

நண்பர்கள் இரண்டு பேரும் பொதுக் கிணறொன்றில் குளித்துள்ளனர். ஒருவர் மேலிருந்து கிணற்றுக்குள் பாய்ந்துள்ளார். தலையோடு தலை பட்டு மோதுண்ட நிலையில் கிணற்றுக்குள் உயிரிழந்து காணப்பட்டனர் என்று கூறப்படுகின்றது. இருவரின் சடலங்களும் திருகோணமலை பொது மருத்துமவனையில் சேர்க்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பான விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-10, 40, 45)

## தேவைகளற்ற கிராமம் இலங்கையில் இல்லை

### சாந்தசோலை மக்கள் சந்திப்பில் வவு. மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டு

வவுனியா, ஒக. 12

வவுனியாவில் அல்ல, இலங்கையிலுள்ள அனைத்துக் கிராமங்களிலும் தேவைப்பாடுகள் உள்ளன. எனது கிராமத்தில் கூட தேவைகள் நிறையவே காணப்படுகின்றன.

இவ்வாறு வவுனியா மாவட்டச் செயலர் எம் பி ரோஹன புஸ்பகுமார தெரிவித்தார்.

கடந்த மாதம் 31ஆம் திகதி சாந்தசோலைப்பகுதி மக்கள் வவுனியா மாவட்டச் செயகத்துக்குச் சென்று தமது கிராமத்திலுள்ள அடிப்படைத் தேவைகள், குறிப்பாக வீட்டுத்திட்டம், வீதி, மின்சாரம் போன்ற தேவைகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கோரியிருந்தனர். அதையடுத்து சாந்தசோலை பொது நோக்கு மண்டபத்தில் நேற்று மக்கள் சந்திப்பு நடத்தப்பட்டது. அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்டச் செயலர் தலைமையில் சென்ற குழுவில் வவுனியா பிரதேச செயலாளர் திரு. கா. உதயராசா, நொச்சிமோட்டை கிராமசேவையாளர்,அபிவிருத்தி உத்தியோகத்தா, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர் ஆகியோர் சென்று அந்தப் பகுதி மக்களின் தேவைகளைக் கேட்டறிந்தனர்.

வாழ்வாதார உதவிகளை இந்தப் பகுதி மக்கள் அதிகம் பெற்றுவருகின்றனர். சமுர்த்தி உத்தியோகத்தர் பயனாளிகளின் விவரங்களையும் வழங்கிய வாழ்வாதாரத் திட்டங்களும் இதன் போது தெரிவிக்கப்பட்டது. வாழ்வாதாரம், பெண் தலைமைக்குடும்பங்கள், முன்னாள் போராளிகள் தொடர்பான விவரங்களும் கேட்டறியப்பட்டது. அவர்களுக்கான உதவிகள் அரசிடமிருந்து பெற்று கட்டம் கட்டமாக வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உலகச் சைவ இளைஞர் மாநாடு நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக.12
அகில இலங்கை சைவ மகா சபையின் ஏற்பாட்டில் மூன்று நாள்களைக் கொண்ட உலக சைவ இளைஞர் மாநாடு நேற்று இலங்கை வேந்தன் கல்லூரியில் ஆரம்பமானது.
ஆரம்ப நிகழ்வாக காலை 7 மணிக்கு நல்லை சிவன் ஆதீன முன்றிலில் ஆதீன முதல்வர்களின் அருளாசியுடன் சிவனின் உருவ வீதி வலம் ஆரம்பித்து, நகர மைய வீதிகளூடாக சமய கலாசார சங்குகள்,பறை முழங்க இலங்கை வேந்தன் கல்லூரியை வந்தடைந்தது. மாணவர்கள்.சிவன் அடியார்கள்,இந்து மத குருக்கள் .துறவிகள் சகிதம் பக்தி பூர்வமாக எடுத்து வரப்பட்டது.இதன் பின்னர் நிகழ்வுகள் அரங்கில் ஆரம்பமாகின.
மாநாடு வைத்தியர் பரா.நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. அவர் தனது உரையில் தெரிவித்ததாவது
எமது நாடு சுதந்திரம் அடையும் பொழுது மொத்த சனத்தொகையில் 24 வீதமாக இருந்த சைவத் தமிழ் குழுமம் தற்போது சரி அரைப்பங்காக குறைவடைந்து 12.5 வீதமாக காணப்படுகின்றது. சைவத் தமிழர்கள் பெரும்பான்மையாக இருந்த திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டம் 2ஆம் 3ஆம் இடங்களுக்கு தள்ளப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் பிறப்பு வீதம் குறைந்த மாவட்டமாகவும் ,அதிகளவு இடப்பெயர்வு நடைபெற்ற மாவட்டங்களாகவும் காணப்படுகின்றன.
வாள்வெட்டு கலாசாரம் எப்படித் தோன்றியது?. சிறுவயதில் இருந்து குழந்தைகளுக்கு அறநெறிகளை கற்பிக்காது விட்டதன் பலனே. ஆகவே சிறுவயதில் இருந்து அறநெறிப்பண்புகளை வளர்த்தெடுக்கும் வகையில் கிராமங்கள் தோறும் அறநெறிப்பாடசாலைகளை நிறுவ வேண்டும். வெள்ளிக்கிழமைகளில் தனியார் வகுப்புக்களை நிறுத்தி பிள்ளைகளை பெற்றோர்களுடன் கோயிலுக்குச் செல்ல வழிவகைகள் செய்யப்பட வேண்டும் - என்றார்.
மாநாட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச் சந்திரன் உரையாற்றினார். அவர் தெரிவித்ததாவது
தமிழ் மக்கள் தமது சமயம், கலாசாரம், மொழி என்பவற்றை தக்க வைத்துக்கொள்ள போராடி வருகின்றார்கள். இப்படியான காலகட்டத்தில் இந்த மாநாடு மிக முக்கியமானது. அவர் அவருக்கு அவர்களின் சமயம் மொழி என்பவற்றை பேச உரிமை இருக்கிறது. கலாசார பேரழிவை இந்த அரசு நடத்திக் கொண்டு இருக்கிறது.ஆகவே இதற்கு எதிராக நாம் போராட வேண்டும் இதற்கு எமது இளைஞர்கள் ஒன்றிணைய வேண்டும்.
விகாரை அமைப்பதுதொடர்பான வழக்கு அண்மையில் சாவகச்சேரி நீதிமன்றத்தில் நடைபெற்றது. இதன்போது இலங்கை என்பது பௌத்தத்தை முதன்மையாகக் கொண்ட ஒரு நாடு. ஆகவே அவர்கள் அங்கே விகாரை அமைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு தமிழ் மக்கள் வாழ்கின்ற இடத்தில்,சிங்கள மக்கள் இல்லாத இடத்தில் விகாரைகளை அமைப்பது என்பது எமது தமிழ் சமய கலாசாரத்தை சீரழிக்கும் செயற்பாடாகும்.
கன்னியா ஊற்று என்பது இராவணனால் உருவாக்கப்பட்டது. ஆனால் இப்போது அங்கே பௌத்த பிக்கு பிழைப்பு நடத்தும் இடமாக மாறியுள்ளது. நயினாதீவில் கடலுக்குள் 67அடி புத்தர் சிலை அமைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றது. இவ்வாறான விடயங்களை நாம் பேசும் போது இனவாதிகளாகத் தெரிகின்றோம் - என்றார்.
மாநாட்டின் தலைவர் வைத்தியர் பரா. நந்தகுமார் தெரிவித்ததாவது.
வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மாநாட்டில் உரையாற்றினார்.
"நாம் ஒரு கட்சி மாநாட்டை நடத்தி இருந்தால் கூட இந்த மண்டபத்தில் இவ்வளவு பேர் வந்திருக்க மாட்டார்கள். எமது வாழ்க்கையை வளமாகும் ஒரு நாடி என்பதால் அனைவரும் எமது சமயம், கலாசாரம் என்பதை உணர்ந்து இங்கே ஒன்றாக கூடியுள்ளார்கள். எவ்வளவு காலம் சென்றாலும் எமது சமயம் அழியாது, தோற்காது என்பதையே இவர்கள் இன்றைய தினம் உணர்த்தி இருக்கின்றார்கள். வேறு மதத் தலைவர்கள் என்ன நினைக்கிறார்களோ அதையே அரசியல் அமைப்புச் சட்டமாக வரையக் கூடியதாக உள்ள நிலையே காணப்படுகிறது. அவர்களோடு நாம் போராட முடியாமல் போனாலும் அதனை தடுப்பதற்காக நாம் ஒன்று சேர வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார். (ற-10.ரி)

## துன்னாலை சுற்றிவளைப்பில் கைதாகிய 28 பேருக்கு மறியல்


வடமராட்சி, ஒக. 12
வடமராட்சி துன்னாலையில் கைதுசெய்யப்பட்டவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி நளினி சுபாஸ்கரன் நேற்று உத்தரவிட்டார்.
கடந்த சில தினங்களாக துன்னாலைப் பகுதியில் பொலிஸாரால் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 28 பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.
கைது செய்யப்பட்டவர்கள் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போதே சந்தேக நபர்களை எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (10.26, ரி)

# ரவி மீது விரைந்து நடவடிக்கை தேவை

## வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஒக.12
ரவி கருணாநாயக்க தனது அமைச்சுப் பதவியில் இருந்து விலகியது அவர் செய்த மோசடிகளுக்குக் கிடைத்த தண்டனை அல்ல. அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை உடன் எடுக்க வேண்டும்.
இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
எவராவது ஒருவர் தவறிழைக்கும் போது அவர் அணிந்திருந்த ஆடையைக் கழற்றிவிட்டு வேறு ஓர் ஆடையை அணிந்து கொண்டவுடன் அவர் குற்றமற்றவராக மாறிவிடுவதில்லை.
மோசடிகளில் பங்கெடுத்துக்கொண்ட போது நிதி அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க, வெளிவிவகார அமைச்சராக மாறியவுடன் குற்றமற்றவராக மாறுவதில்லை.
அவர் மீது பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தும்படியான விடயங்கள், ஜனாதிபதி ஆணைக்குழு மூலம் வெளியாகியுள்ளன. அவருக்கு எதிராக உடனடியாக சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அரசிடம் கோருகின்றோம்.
ரவி கருணாநாயக்கவை முன்னுதாரணமாக எடுக்க வேண்டும் என்று அரசு கூறுகின்றது. நாம் நாட்டு பிள்ளைகளுக்கும், பொது மக்களுக்கும் கூறுகின்றோம் அவரை முன்னுதாரணமாக எடுக்க வேண்டாம் என்று.
களவு செய்துவிட்டு, நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர முயற்சிக்கும்போது பதவி விலகுவது சிறந்த அரசின் இலட்சணமல்ல.என்றார். (ற)

## சுகாதாரத் தொண்டர்கள் கவனவீர்ப்பு ஊர்வலம்




வுனியா, ஒக.12
நிரந்தர நியமனம் கோரி தொடர் போராட்டம் நடத்திவரும் சுகாதாரத் தொண்டர்கள் நேற்று உணவு ஒறுப்புப் போராட்டத்திலும், கவனவீர்ப்பு ஊர்வலத்திலும் ஈடுபட்டனர். அவர்கள் நடத்திவரும் போராட்டம் 100 நாள்களைக் கடந்துள்ளதை அடுத்தே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
"வெயில் மழை பாராது ஊதியம் இல்லாமல் பணியாற்றிய எங்களுக்கு நிரந்தர நியமனம் இல்லையா? வடக்கு மாகாண சபையே இலஞ்ச ஊழலை கைவிடு தொண்டர்களுக்கு, நியாயமான முறையில் நியமனத்தை தா!
"போன்ற பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்கு முன்பாக ஆரம்பித்த கவனவீர்ப்பு ஊர்வலம் ஏ9 வீதியூடாக வவுனியா மாவட்டச் செயலகத்தைச் சென்றடைந்தது.
சுகாதாரத் தொண்டர்கள் தமது நிரந்தர நியமனம் தொடர்பான கோரிக்கை அடங்கிய வவுனியா மாவட்ட செயலருக்கான மனுவை பிரதம கணக்காளர் அ.பாலகுமாரிடம் கையளித்தனர்.
பின்னர் ஊர்வலமாக மன்னார் வீதியூடாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குச் சென்றனர். பணிப்பாளருக்கான மனுவை பிரதிப் பணிப்பாளர் மகேந்திரனிடம் கையளித்தனர்.
அங்கிருந்து போராட்ட இடத்துக்குச் சென்று அடையாள உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்ட இடத்தில் கறுப்புக்கொடியை கட்டி நேற்று துக்க தினமாகக் கடைப்பிடித்தனர்.
கிளிநொச்சியிலும் சுகாதாரத் தொண்டர்கள் நிரந்தர நியமனம் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
அவர்களது போராட்டமும் தீர்வின்றித் தொடர்கின்றது. (ற-10)

## சட்டத்தின் முன் ரவி குற்றவாளி அல்லர்

### பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா கூறுகிறார்

கொழும்பு, ஒக.12
முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க சட்டத்தின் முன் குற்றவாளி அல்லர்.
இவ்வாறு தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது
ரவி கருணாநாயக்கவின் பதவி விலகல் புதிய சம்பிரதாயத்துக்கான முதற்படி. அது அடுத்தகட்ட விசாரணைகளுக்குச் சிறந்த தீர்வு.
முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலின் காலத்திலும் இது போன்ற பிரச்சினைகள் இருந்தன. சேமலாப நிதியம் தொடர்பிலும் பெரும் பிரச்சினைகள் இருந்தன.
அவை தொடர்பில் வாசுதேவ நாணயக்காரவால் முறைப்பாடு செய்யப்பட்டு ஒப்புவிக்கப்பட்ட போதிலும் இவற்றுக்கு எதிராக அப்போதைய ஆட்சிக்காலத்தில் சரியான தீர்வு வழங்கப்படவில்லை.
அது மாத்திரமன்றி தாஜுதீனின் உயிரிழப்பு கொலை என்று உறுதியாகிய போதும், விபத்தால் நிகழ்ந்த இறப்பாக ஒப்புவிக்க கடந்த அரசு முயற்சித்தது.
பிரதேச சபை தலைவர் ஒருவர் 100 பெண்ணுடன் பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்டு குற்றவாளியாகியபோதும் அப்படிப்பட்டவர்கள் பதவி விலகுவதையோ குற்றத்தை ஒப்புக்கொள்வதையோ காண முடியவில்லை. என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவில் வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் பயணித்த அவர் வீதியின் வலது பக்கம் திரும்ப முற்பட்ட போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதித் தள்ளியது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
(வ-37)

# சமுர்த்தி உதவிக்காக அமைதி ஊர்வலம்

தெல்லிப்பழை, ஓக.12
சமுர்த்தி உதவி வழங்கக் கோரி தெல்லிப்பழையில் நேற்று அமைதி ஊர்வலம் நடத்தப்பட்டது.
தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்கள் 6 வருடங்களாக சமுர்த்தி வங்கியின் அங்கத்தவர்களாகப் பதிவு செய்யப்பட்டனர். இதுவரை சமுர்த்தி முத்திரை வழங்கப்படவில்லை. சமுர்த்தி முத்திரை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். 27 வருடங்கள் இடம்பெயர்ந்து, மீளக் குடியமர்த்தப்பட்டு 6 வருடங்கள் ஆகின்றது. இதுவரை சமுர்த்தி முத்திரை கொடுக்கப்படவில்லை என்று ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். ஊர்வலத்தின் முடிவில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கையளித்தனர்.
(ற-10)







யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகமும், யாழ்ப்பாண மாநகர சபையும் இணைந்து யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயச் சூழலில் ஏற்பாடு செய்த புத்தகத் திருவிழாவை நேற்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் திறந்து வைத்தார். இந்தக் கண்காட்சி எதிர்வரும் 21ஆம் திகதி வரை தினமும் காலை 10 மணி முதல் இரவு 10 மணிவரை தொடர்ந்து நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.
(வ-21-101)

## பல்கலை. மாணவர்கள் பிணையில் விடுவிப்பு

மட்டக்களப்பு, ஓக.12
கிழக்குப் பல்கலைக் கழக பாதுகாப்பு உத்தியோகத்தரைத் தாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 9 மாணவர்களையும் தலா ஐம்பதாயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தது ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றம்.
சந்தேக நபர்கள் ஒன்பது பேரும் ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் வி. தியாகேஸ்வரனிடம் முற்படுத்தப்பட்டனர். அதன்போது நீதிவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.
அவர்களது வாக்கு மூலங்களை ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்யுமாறும் கட்டளையிட்டார். வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.
கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து 63 வது நாளாக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாணவர்களால் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடம் முற்றுகையிடப்பட்டது.
கடமையின் நிமித்தம் தடுக்க வந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் எச்டி.சி.டி.ரணசிங்க (வயது37) மாணவர்களால் தாக்கப்பட்டார். அவரது கையில் முறிவு ஏற்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக பல்கலைக் கழக நிர்வாகத்தால் ஏறாவூர்ப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. முறைப்பாட்டின் அடிப்படையில் 9 மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
(ற-10, 47)

## கிழக்குப் பல்கலை. மாணவர் போராட்டம் தொடர்கின்றது

மட்டக்களப்பு, ஓக. 12
கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்களுக்கான விடுதிப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை உள்பட ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நிர்வாகக் கட்டடத்தை முற்றுகையிட்டு நேற்று 4 ஆவது நாளாகப் போராட்டம் நடத்தப்பட்டது.



கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து 63 ஆவது நாளாக உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடத்தை முற்றுகையிட்டு இரவு பகலாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் இதுவரை எந்தவித சாதகமான பதிலும் வழங்கப்படவில்லை என மாணவர்கள் தெரிவித்தனர்.
போராட்டம் தொடர்பாக செய்தி சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களை அனுமதிக்க வேண்டாம் என பல்கலைக்கழக நிர்வாகத்தால் கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக நுழைவாயிலில் உள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஊடகவியலாளர்களை பல்கலைக்கழகத்துக்குள் நுழைய அனுமதிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.
"குறிப்பட்ட கால எல்லைக்குள் பட்டப்படிப்பை பூர்த்தியாக்கு, மஹாபொல புலமைப் பரிசில் பிரச்சினையை உடனே நிவர்த்தி செய், பொய்யான தீர்வுகள் வேண்டாம், விடுதிப் பிரச்சினையை உடனடியாக நிவர்த்தி செய், அசாதாரணமான வகுப்புத் தடையை நீக்கு, மாணவர்களின் சுதந்திரத்தைப் பறிக்கும் சீசீரிவி கமராக்களை உடனே அகற்று போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டம் நடத்தப்படுகின்றது.
5 மாணவர்களை இரண்டு வருடங்களுக்கும் மேலும், 5 மாணவர்களை ஒரு வருடத்துக்கும் பல்கலைக் கழகத்திலிருந்து நிர்வாகம் இடைநிறுத்தியுள்ளது. மாணவர்களுக்கு எதிரான இவ்வாறான நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்" என போராட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் தெரிவித்தனர். (ற-10, 47)



## கிழக்குப் பல்கலை. மாணவர்களை
# நிர்வாக கட்டடத்திலிருந்து வெளியேறுமாறு உத்தரவு

மட்டக்களப்பு, ஓக. 12
கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாக நிர்வாக கட்டடத்தை முற்றுகையிட்டுள்ள மாணவர்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்று ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் வி.தியாகேஸ்வரன் உத்தரவு பிறப்பித்துள்ளார்.
கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து 63 நாள்களாப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் நிர்வாகக் கட்டடத்தை அவர்கள் முற்றுகையிட்டனர்.
அதனால் பல்கலைக் கழகத்தின் நிர்வாக நடவடிக்கைகள் முற்றாகத் தடைப்பட்டன. நிர்வாக நடவடிக்கை மேற்கொள்வதற்கான சூழல் இல்லையென கல்விசாரா ஊழியர்களும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
மாணவர்கள் நிர்வாகக் கட்டடத்தை முற்றுகையிட்டு நிர்வாக நடவடிக்கைளுக்கு இடையூறு விளைவிப்பதாக இதற்கு தலைமை தாங்கும் 19 மாணவர்களுக்கு எதிராக ஏறாவூர்ப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. முறைப்பாட்டின் அடிப்படையில் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றம் இவர்களுக்கு நேற்று அழைப்பாணை அனுப்பிவைத்தது.
வழக்கை விசாரணை செய்த பதில் நீதிவான் வி. தியாகேஸ்வரன் மாணவர்கள் நிர்வாகக் கட்டடத்திலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என நேற்று உத்தரவு பிறப்பித்தார்.
(ற-10, 47)

## விபத்தில் மூவர் காயம்

திருகோணமலை, ஓக. 12
திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிகிந்தபுரத்தில் நேற்று நடந்த விபத்தில் மூவர் காயமடைந்தனர்.
காரும், வானும்மோதி விபத்துக்குள்ளாகின.



திருகோணமலை யாழ்ப்பாண வீதியில் ஒன்றன் பின் ஒன்றாக வாகனங்கள் பயணித்தன. வீதிச் சமிக்ஞையை கவனிக்காமல் முன்னால் சென்ற வாகனத்துடன் மோதுண்டு விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
வானில் வந்தவர்களில் மூவர் காயமடைந்த நிலையில் திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
(10, 40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்துபோர்ட் சு.இராசரத்தினத்தின் 133ஆவது பிறந்தநாள்விழாவும்பரிசளிப்பும்அண்மையில்இடம்பெற்றது. அதில் இல்லக விளக்கு மலர் வெளியிட இந்து போர்ட்சு.இராசரத்தினம்அவர்களின்புதல்விதிருமதி திலகவதி மாணிக்கவாசகர் பெற்றுக்கொண்டார். முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப் பீடாதிபதி கலாநிதி .கே.சுதாகர், சிறப்பு விருந்தினராக பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (4)

# சமுர்த்தி புதிய பயனாளிகளின் பெயர்ப்பட்டியல் காட்சிக்கு வைப்பு

கிளிநொச்சி, ஓக.12

சமுர்த்தித்திட்டத்தின்புதியபயனாளிகள்விவரங்கள்மக்களுடையபாவைக்காகக்காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அந்தவிவரங்கள்மீள்பரிசீலனை க்கு உட்படுத்தப்பட்டதன் பின்னரே அவர்களுக்கானஉதவிகள் வழங்கப்படும். அதுவரை தற்பொது உதவிகள் பெற்றுக் கொண்டிருக்கின்ற பயனாளிகள் பட்டியலே நடைமுறையில்இருக்கும்எனயாழ்ப்பாண மாவட்டச்செயலர்நா.வேதநாயகன்தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவரால்அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தற்போதுசமுர்த்திஉதவிகள்பெற்றுக்கொண்டிருக்கின்ற, சமுர்த்தி உதவிகள் பெற்றுக் கொள்ளாத பொதுமக்களுக்கு அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டசமுர்த்திஉதவிகள் வழங்குதல்தொடர்பானகணிப்பீட்டுப்படிவங்கள் 2015 ஆம் ஆண்டு வழங்கப்பட்டன.

அவை கிராம அலுவர்பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர் ஆகியோர் கொண்ட குழுவினரால் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று முழுமைப் படுத்தப்பட்டன. அந்தப்படிவங்கள் 2016ஆம் ஆண்டு கணினியில் பதிவேற்றம் செய்யப் பட்டு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம், இலங்கைப் புள்ளி விவரத்திணைக்களம் மற்றும் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை நிலையம் ஆகியமூன்றுதிணைக்களங்களால்வரையறுக்கப்பட்ட 29 எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டு புள்ளியிடல் மூலம் உதவிகள்ணம் பெறத்தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அந்தப் பட்டியல்கள் தற்போது மக்களின் பார்வைக்காகக்காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த உதவிகள் வழங்கல் தெரிவு தொடர்பில் தற்போது மக்கள் மத்தியில் ஒரு குழப்பமான நிலைமையும், தவறான அபிப்பிராயங்களும் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த உச்ச எண்ணிக்கையில் எது விதமாற்றங்களும்ஏற்படாதவகையில்புதிய பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப்பயனாளிகள் தெரிவில் குறைபாடுகள் இருப்பின் அந்தக் குறைபாடுகள் தொடர்பில் பொதுமக்கள் தங்கள் மேன்முறையீடுகளையும், முறைப்பாடுகளையும்அந்தந்த பிரதேச செயலாளர்பிரிவுகாரியாலயங்களில்குறித்த காலப்பகுதிக்குள் (14 நாள்களுக்குள்) ஒப்படைத்தல் வேண்டும். அவர்களது மேன்முறையீடுகள்முறைப்பாடுகள்என்பனபிரதேச செயலகவாரியாகநியமிக்கப்பட்டுள்ளபயனாளிகள் தெரிவுக் குழு மற்றும்மேன்முறையீட்டுக் குழு ஆகியவற்றால் மீள்பரிசீலனைக் குட்படுத்தப்படும். அதன் பின்னரே புதிய பயனாளிகளுக்கான நிவாரண விநியோகம் மேற்கொள்ளப்படும். அதுவரை தற்போது உதவிகள்பெற்றுக்கொண்டிருக்கின்றபயனாளிகள் பட்டியலே நடைமுறையில் இருக்கும். எனவே இந்தவிடயம் தொடர்பில் பொதுமக்கள் எதுவித குழப்ப நிலைமைக்கும் ஆளாகாமல் தங்கள் முறைப்பாடுகளை உடன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள் என்றுள்ளது. (ய-21)

# நடைப்பயிற்சியில் ஈடுபட்ட வயோதிபர் மோட்டார் சைக்கிள் மோதி படுகாயம்

## அச்சுவேலியில் அதிகாலை சம்பவம்

அதிகாலையில்நடைப்பயிற்சியில்ஈடுபட்டிருந்தவயோதிபர் ஒருவர் மோட்டர் சைக்கிளில் மோதுண்டு படுகாமடைந்த நிலையில் யாழ்ப்பாணம்போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது குறித்தவயோதிபர்அச்சுவேலிப்பகுதியில் நேற்றையதினம் அதிகாலை நடைப் பயிற்சியில்ஈடுபட்டிருந்தார். அப்போது பின்னால் வந்த மோட்டார்சைக்கிள்அவரை மோதியதாகக் கூறப்படுகின்றது.

உடனடியாகயாழ்.போதனா வைத்தியசாலைக்குகொண்டு செல்லப்பட்ட வயோதிபர் அங்கு அதிதீவிர சிகி ச்சைப் பிரி வில் சேர்க்கப்பட்டுள்ளார். அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த கந்தன் சிவபாதம் (69)என்றவயோதிபரேஇவ்வாறு படுகாயமடைந்துள்ளார். (ய.8)

# முருகனுக்கு கொடி

யாழ்ப்பாணம், ஓக. 12

எழுவைதீவு முத்தன்காடு ஈழத்து திருச்செந்தூர் முருகமூர்த்தி ஆலய வருடாந்தத் திருவிழா இன்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து எதிர்வரும் 19 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு தேர் வெள்ளோட்டமும் மறுநாள் 20ஆம் திகதி முற்பகல் 10.45 மணிக்கு தேர்த்திருவிழாவும் 21ஆம்திகதி சமுத்திர தீர்த்தமும் நடைபெறவுள்ளது. (4)

# தரம் 5 மாணவர்களுக்கு வினாத்தாள் விநியோகம்

தென்மராட்சி, ஓக.12

தென்மராட்சி கல்விவலய பாடசாலைகளில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தரம் 5 மாணவர்களுக்கான சுயகற்றலுக்குரிய வழிகாட்டல் வினாத்தாள் பொதிகள் இன்று சனிக்கிழமை மு.ப 8மணி தொடக்கம் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் வழங்கப்படும்என வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் அறிவித்துள்ளார்.

வகுப்பாசிரியர்கள்; அதனைப் பெற்று மாணவர்களைவழிப்படுத்துமாறும்அறிவித்துள்ளார். (ய-9)

# சின்மயா மிஷனின் ஆன்மிக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக.12

நல்லூர்கந்தசுவாமிஆலத்திருவிழாவைமுன்னிட்டு யாழ்ப்பாணம், சின்மயாமிஷன் நடத்தும் ஆன்மிக அருளுரைகளில் இன்று, தீவிர வேட்கை எனும் தலைப்பிலான அருளுரை இடம்பெறும்.

இந்த நிகழ்வு இன்று இரவு 7.30 மணிமுதல் 8.00மணிவரைஇல.700,பருத்தித்துறைவீதி நல்லூர்யாழ்ப்பாணத்தில்உள்ளசின்மயாமிஷனில் இடம்பெறும்.

அருளுரையை பிரமச்சாரிஜாக்ரதசைதன்யா சுவாமிகள் தொகுத்து வழங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-21)

# மோட்டார் சைக்கிளில் தவறி வீழ்ந்த இளைஞர் சிகிச்சை பயனின்றி சாவு

சாவகச்சேரி ஓக.12

மிருசுவில் வீதி விபத்தில் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந்த இளைஞர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

கடந்த ஏழாந் திகதி மாலை இவர், மிருசுவிலிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளையில் மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்து, எதிரே வந்த வாகனத்துடன் மோதி படுகாயமடைந்தார்.

இளைஞரும் அவ்வேளையில் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த நபரும் கீழே வீழ்ந்து சுயநினைவை இழந்தனர். இவ்விருவரும் சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர். காய்ச்சலால் பீடிக்கப்பட்ட மேற்படி இளைஞரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு வந்தபோதே விபத்து இடம்பெற்றது.

சாவகச்சேரி கல்லடி மூட்டுச்சந்தி வளைவில் திரும்பியவேளையில் மோட்டார் சைக்கிளிலிருந்து இளைஞர் தவறி வீழ்ந்தார். அப்போது எதிரே வந்த வாகனத்துடன் மோதியதில் காயமடைந்தார் என மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் தெரிவித்தார் என சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனத்தின் சில்லு வயிற்றில் ஏறியதுடன் இரு கை விரல்களும் பாதிக்கப்பட்டன என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இளைஞரின் உயிரிழப்பு தொடர்பாக பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிமன்ற பதில் நீதிவான் பா. சுப்பிரமணியம் பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மூலம் விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்

மிருசுவில் முதன்மைச் சாலையைச்சேர்ந்த பாலகிருஷ்ணன் விமலராஜ் (27) என்னும் இளைஞரே உயிரிழந்தவராவார். (ய.9)

# உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற வடக்கு மாணவர்களுக்கு கௌரவம்

யாழ்ப்பாணம்ஓக.1

கடந்தவருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் முதன்மைச் சித்திபெற்ற வடக்கு மாகாண மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் யாழ்.வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் முதன்மைச்சித்திபெற்ற வடமாகாணத்தின் யாழ்ப்பாணம் வவுனியா கிளிநொச்சி ஆகியமாவட்டங்களைச்சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டனர்.

கணிதம், விஞ்ஞானம், வணிகம், கலை மற்றும் விஞ்ஞான தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் முதல்நிலை பெற்ற மாணவர்களுக்குதலா 35ஆயிரம்ரூபா வீதம் வழங்கப்பட்டது.

இரண்டாம்நிலைபெற்றவர்களுக்குதலா 25ஆயிரம்ரூபாவீதம் வழங்கப்பட்டது.

வை.எம்.சீ.ஏ. நிறுவனம் இதனை ஏற்பாடு செய்திருந்தது. நிறுவனத் தலைவர் ஏ.டானியேல்ஜெயரூபன்தலைமையில்நடைபெற்றஇந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக கனடாவைச்சேர்ந்த அ.உ.பிரான்சிஸ், இலங்கை [illegible] தேசிய சங்கங்களின் தலைவர் [illegible] யாழ்.போதனா வைத்தியசாலையின்பணிப்பாளர்வைத்தியகலாநிதி க.சத்தியமூர்த்தி மற்றும் யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி அதிபர் அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர் இதன்போது 15 வருடங்களுக்கு மேலாக வன்னிப் பிரதேசங்களில் கடமையாற்றி கடந்தாண்டு இளைப்பாறிய ஆசிரியருக்கான விருதும் 50.000.00 பொற்கிழியும் திருமதி தேவராணி சிவலிங்கத்துக்கு வழங்கப்பட்டது.



இந்த நிகழ்வைச்சிறப்பிக்கும் முகமாக, உலக போக்குக்கு ஏற்பவழியமைத்துக்கொள்ள இலங்கையின் இன்றைய கல்வித்துறை உதவுகின்றது அல்லதுஉதவவில்லைஎனும் தலைப்பில்பட்டிமன்றம்நடைபெற்றது. யாழ்.சென்ஜோன்ஸ்மற்றும்யாழ்.சுண்டிக்குளி மகளிர்மாணவர்கள்கலந்துகொண்டனர். வெற்றியீட்டிய அணிக்கு பூபாலசிங்கம் பட்டிமன்ற வெற்றிக்கேடயமும் வழங்கப்பட்டது. (ய,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணவாழ்வியல் இன்று 16ஆம் நாள்

யாழ்ப்பாணம், ஓக.12
நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும்நிகழ்வுகள்அரங்கேறும்'கந்தபுராணக்கலா சாரம் இந்த மண்ணின் அடையாளம்'16ஆம்நாள்நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.
இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களக் கணக் காளர் எம்.ஜீ.காண்டீபன் த்லைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொள்ள வுள்ளார். இதில் கந்தபுராணம் தொடர்பான ஆன்மிகச் சொற்பொழிவை சி.உமாசுதனும், மாண்டலின் வி.சிவக மாரின் இசைக்கச்சேரியும் இடம்பெறும் என அறிவிக்கப்பட் டுள்ளது. (ய-21)

# தென்மராட்சி விழா இன்றுசாவகச்சேரியில்

தென்மராட்சி, ஓக.12
தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் தாயகம் மற்றும் புலம்பெயர் நாடுகளின் கிளைகள் இணைந்து வழங்கும் தென்மராட்சி விழா இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்குசாவகச்சேரிநகரசபைபொன்விழாமண்டபத்தில் நடைபெறும்.
தென்மராட்சி அபிவிருத்திச் கழகத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் நடைபெறும் விழாவுக்கு தலைமை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கி;ருஸ்ணகுமார் கலந்துகொள்வார்..
சிறப்பு விருந்தினர்களாக மருத்துவர் சா.சிவயோகன் பிரிட் டிஸ் கவுன்சில் யாழ்.கிளை முகாமையாளர் றொபேக்கா ரௌன்சன் ஆகியோரும், மதிப்புறு விருந்தினர்களாக தென்மராட்சிஅபிவிருத்திக்கழகபிரித்தானியக்கிளையின் காப்பாளர் வெ.அசோகன், பிரான்ஸ் கிளையின் தலைவர் செ.முகிர்தராஜா ஆகியோரும் கலந்துகொள்வர்.
நிகழ்வில்கலைநிகழ்வுகளும்பரிசில்கள்வழங்கலும்இடம் பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-9)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 60 | 60 |
| கத்தரி | 80 | 80 | 100 | 100 | 80 |
| மரவள்ளி | 70 | 100 | 80 | 60 | 80 |
| பயிற்றை | 100 | 120 | 160 | 100 | 140 |
| பாகல் | 180 | 100 | 240 | 160 | 200 |
| க.கிழங்கு | 140 | 130 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 130 | 90 |
| சி.வெங்காயம் | 140 | 160 | 160 | 160 | 130 |
| பூசணி | 100 | 50 | 60 | 60 | 60 |
| தக்காளி | 140 | 140 | 140 | 150 | 120 |
| வாழைக்காய் | 100 | 110 | 80 | 80 | 60 |
| கீரை | 30 | 20 | 30 | 10 | 20 |
| பொன்னாங்கானி | 25 | 30 | 30 | 30 | 20 |
| ப.மிளகாய் | 300 | 300 | 400 | 300 | 300 |
| புடோல் | 100 | 80 | 60 | 100 | 100 |
| கோவா | 120 | 160 | 120 | 120 | 120 |
| வெண்டி | 100 | 80 | 80 | 100 | 60 |
| போஞ்சி | 120 | 180 | 180 | 160 | 180 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 120 | 120 |
| தேங்காய் | 60 | 60 | 70 | 70 | 60 |
| உ.கிழங்கு | 100 | 100 | 110 | 100 | 120 |
| தேசிக்காய் | 60 | 50 | 80 | 60 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 150 | 160 | 160 | 180 | 170 |
| கரட் | 160 | 200 | 200 | 280 | 200 |
| முருங்கைக்காய் | 80 | 180 | 60 | 20 | 40 |

# பொலிஸார்முன்னிலையில் மோட்டார்சைக்கிள்திருட்டு

## அதனைப்பறிகொடுத்தவரும்பொலிஸ்உத்தியோகத்தர்

வவுனியா, ஓக. 12
போக்குவரத்துப் பொலிஸாரின் முன்னி லையில் மற்றொரு பொலிஸ் உத்தியோ கத்தரின் மோட்டார் சைக்கிள் பட்டப்பக லில் திருடப்பட்ட சம்பவம் வவுனியா, குரு மன்காட்டுச் சந்தியில் நேற்று பி.ப. 1.30



மணியளவில் இடம்பெற்றது.
வவுனியா குருமன்காட்டுச் சந்தியிலுள்ள வர்த்தக நிலையத்துக்கு சிவில் உடையில் வந்த பொலிஸார், வீதியில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வர்த்தக நிலை யத்துக்குள் சென்று மீண்டும் திரும்பியவேளையில் மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. அந்த வர்த்தக நிலை யத்துக்கு முன்பாக போக்குவரத்து பொலி ஸார் கடமையில் இருந்துள்ளனர். அவர் கள் முன்னிலையிலேயே அந்த மோட் டார் சைக்கிள் இனந்தெரியாத நபரால் திருடப்பட்டுள்ளது.
சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவின் உதவி பொலிஸ் பரிசோதகர் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற் கொண்டார். (வ-21)

## நல்லூர் ஆலய சூழலில்

# மோட்டார் சைக்கிள்களுக்கு அதிகரித்த கட்டணம் அறவீடு

## யாழ்ப்பாண மாநகர சபையிடம் முறையீடு

யாழ்ப்பாணம், ஓக. 12
யாழ்ப்பாண மாநகர சபையால் அனுமதிக் கப்பட்ட கட்டணங்களை விடவும் நல்லூர் ஆலயத் திருவிழா காலத்தின் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் அதிக ரித்த கட்டணத்தை அறவிடுவதாக அடிய வர்களால் மாநகர சபையிடம் ஆதாரத்து டன் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இது தொடர்பில் மாநகர சபை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது இந்த விடயம் நுகர்வோர் பாதுகாப்பு அலு வல்கள் அதிகார சபையின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும் என அந்த முறைப் பாட்டில் மாநகர ஆணையாளரிடம் வலியு றுத்தப்பட்டுள்ளது.
நல்லூர்க் கந்தன் ஆலயத் திருவிழாவின் போது அமைக்கப்பட்டுள்ள வாகனப் பாது காப்பு நிலையங்கள் மோட்டார் சைக்கிள்க ளுக்கு 10 ரூபாவுக்கு மேல் கட்டணம் அற விடக் கூடாது என யாழ்ப்பாணம் மாநகர சபையால் அறிவுறுத்தப்பட்டது. எனினும் சில பாதுகாப்பு நிலையங்கள் இன்றுவரை யில் மோட்டார் சைக்கிள்களுக்கு 20 ரூபா




கட்டணம் அறவிடுவதுடன் தலைக் கவசத் துக்கான கட்டணமும் தனித்து அறவிடப்ப டுவதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.
"மாநகர சபையால் அனுமதிக்கப்பட்ட கட் டணம் 10 ரூபா மட்டுமே. அவ்வாறு அச்சி டப்பட்ட சிட்டைகளுக்கு மட்டுமே மாநகரச பையும் றப்பர் முத்திரை பொறித்து வழங் கியுள்ளது. இருப்பினும் சில பாதுகாப்பு நிலையங்களில் அனுமதியின்றி 20 ரூபா சிட்டைகள் அச்சிட்டு எமது றப்பர் முத்திரை பொறிக்காது வழங்குவது தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளது. இது தொடர் பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்ப டும்" என்று யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித் தார். (வ-101)

# ஆங்கில மொழிமூல பாலர்பாடசாலைகளின் கலைவிழா இன்று

யாழ்ப்பாணம், ஓக.12
மானிப்பாய் Butter Fly pre School பண்டத்தரிப்பு Blooming budy pre School ஆகிய ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலைகளின் கலை விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பிரான்பற்று அருள்அமுதீஸ்வரி கல்யாண மண் டபத்தில் இடம்பெறும்.
பாடசாலைகளின் தலைவர் த.சிவ குமார் தலைமையில் நடைபெற வுள்ள இந்தநிழகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வடக்குமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணை யாளர் தி.விஸ்வரூபன், திருமதி மங்கயற்கரசி விஸ்வரூபன் ஆகி யோரும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவ லக முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் கே.விமலநாதன், செலான்வங்கி பி.எல்.சி இன் சங்கா னைக் கிளை கிரடிட் அலுவலர் ம.சன்சுதன், வலிகாமம் மேற்குப் பிரதேசசபை உப அலுவலகத்தின் வருவாய் அதிகாரி வை.நிர்மலன் ஆகியோர் கலந்துகொள்வர். (ய-21)

# தெய்வீக இசையரங்கு

யாழ்ப்பாணம், ஓக.12
இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் திருவிழா காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி ஆல யத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று தொட.க்கம் எதிர்வரும் 23ஆம் திகதி வரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 6.45 தொடக் கம் பி.ப 8 மணிவரை நடைபெற வுள்ளது.
இன்று பதினாறாம் திருவிழாவில் பாட்டு அ.அமிர்தலோஜனனும் அ.அமிர்தசிந்துஜனும், வயலின் கா.குகபரனும், மிருதங்கம் க.கஜ னும், கெஞ்சிரா நா.சிவசுந்தரசர்மா வும், கடம் ந.மாதவன், முகர்சிங் சி.செந்தூரனும் இசைக்கவுள்ள னர். (ய)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 1000 | 80 |
| நண்டு | 400 | 300 | 500 | 4 00 |
| கணவாய் | 600 | 700 | 800 | 800 |
| பாரை | 500 | 500 | 600 | 600 |
| சுறா | 500 | 700 | 1000 | 900 |
| சீலா | 400 | 400 | 500 | 500 |
| விளை | 500 | 400 | 450 | 500 |
| முரல் | 400 | 400 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 600 | 600 |
| ஓரா | 400 | 300 | 500 | 400 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 280 | 150 | 400 | 200 |
| சூடை | 150 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 300 |
| திருக்கை | 300 | 200 | 400 | 250 |
| மதனம் | 200 | 150 | 200 | 300 |
| கொய் | 150 | 30 | 80 | 50 |
| [illegible] | 150 | 200 | 500 | 500 |
| [illegible] | 150 | 200 | 450 | 250 |



இது புதுசு

ஆண்களுக்கான 'ரெனிம் ஜீன்ஸ்' வகைகள் தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. இவை மூவாயிரத்து 100 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதைநெல்லைத் துப்புரவு செய்வதற்கு நடமாடும் சேவை

## வடக்கு விவசாயப் பணிப்பாளர் தகவல்

அச்சுவேலி, ஓக.12

வடக்கு மாகாணத்தில் இம்முறை பெரும்போகநெற்செய்கையின்போது விவசாயிகளுக்கு நடமாடும் நிலையங்கள் மூலம் விதைநெல்லை துப்புரவாக்கும் வசதி செய்துகொடுக்கப்படவுள்ளது என வடக்கு மாகாண விவசாயப்பணிப்பாளர் எஸ். சிவகுமார் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருடம் நடமாடும் விதைநெல் துப்பரவாக்கும் பிரிவுகள் மூலம் விவசாயிகளுக்கு மானிய உதவியுடன் விதைநெல்துப்புரவுசெய்துவழங்கப் படவுள்ளன.

விவசாயிகள் இந்தச் சேவையை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

விதைநெல் துப்புரவாக்கும் சேவை வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் சமகாலத்தில் நடைபெறும். கடந்த காலங்களில் விதை நெல்லைத் துப்புரவு செய்வதற்காக விவசாயிகள் குறித்த நிலையங்களை நாடிச்செல்ல வேண்டிய நிலை இருந்தது.

இதனால் அவர்கள் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தனர். இதனைக் கருத்தில் கொண்டு இந்த வருடம் நடமாடும் நிலையங்கள் மூலம் விதை நெல்லை துப்புரவுசெய்து வழங்குவதற்குதீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தச் சேவை பதிவுசெய்யப்பட்ட இளைஞர் விவசாயக்கழகங்களின்உதவியுடன் முன்னெடுக்கப்படும்.

> “இந்த வருடம் நடமாடும் விதை நெல் துப்பரவாக்கும் பிரிவுகள் மூலம்விவசாயிகளுக்குமானிய உதவியுடன் விதைநெல் துப்புரவுசெய்துவழங்கப்படவுள்ளன. விவசாயிகள்இந்தச்சேவையை உரிய முறையில்பயன்படுத்திக் கொள்ளவேண்டும்

விதைநெல்லை உரியமுறையில் துப்புரவு செய்வதன் மூலம் முளைதிறன்வீதம்அதிகரிக்கும், விளைச்சலும் அதிகரிக்கும். எனவே, விவசாயிகள் விதைநெல்லை உரியமுறையில் துப்புர வாக்கிப் பயன்படுத்தவேண்டும். இது தொடர்பான மேலதிக விவரங்களை மாவட்ட விவசாயத் திணைக்களம், பிரதேச விவசாயப் போதனாசிரியர்கள்மற்றும்தமதுபிரதேசத்தில் உள்ள இளைஞர் விவசாயக் கழகங்களுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும்- என்றார். (ய,11)

# அரசு வழங்கிய காணிகள் அதிகாரிகளால்மீளப்பறிப்பு

## நைனாமடு மக்கள் கவலை

யாழ்ப்பாணம்ஓக. 12

வவுனியா வடக்கு நைனாமடுப் பகுதியில் மத்திய வகுப்புத் திட்டத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்ட காணிகளை வனவளத் திணைக்களத்தினர் மீண்டும்அபகரிக்கின்றனர் என பொதுமக்கள் கவலைதெரிவித்தார்.

காணிகளில் மரங்கள் வளர்ந்துவிட்டால் அவற்றை உங்களுக்குச் சொந்தமாக்குவதா என்று அந்த மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

1982ஆம் ஆண்டு நைனாமடுவில் மத்தியவகுப்புத்திட்டத்தின் கீழ் 175 குடும்பங்களுக்கு தலா 10ஏக்கர் வீதம்ஆயிரத்து750ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. அதற்கான காணி அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டிருந்தன.

அந்தக் காணிகளைத் துப்புரவாக்கிய மக்கள் அவற்றில் மேட்டுநிலப் பயிர்ச் செய்கைகளை மேற்கொண்டு பயன்பெற்று வந்தனர். பின்னர் குறுகிய காலத்தில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக அந்த இடங்களை விட்டுமக்கள்வெளியேறினர். குறித்த காணிகளும்பற்றைக்காடுகளாகின.

“இப்போது சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ள நாம் குறித்த காணிகளில் மேட்டுநிலப் பயிற்செய்கையில் ஈடுபடத் தீர்மானித்தோம். அதனால்அங்கு வளர்ந்துள்ள பற்றைக் காடுகளை அழிக்க முற்பட்டோம். ஆனால்வனவளத் திணைக்களம் தடையாக இருந்து வருகிறது. குறித்த பகுதி தமதுகட்டுப்பாட்டுக்குள் உள்ளது என்று காரணம் கூறுகின்றனர்.

இந்தப் பகுதியில் நாங்கள் நட்ட பனைமரங்கள்அமைத்த கிணறுகளும் இன்றுவரை காணப்படுகின்றன.

எனவே எமது வாழ்வாதாரநிலத்தை விடுவிக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்” என்று உரித்துடையோர் கோருகின்றனர்.

“இந்த விடயம் தொடர்பில் எமக்கும் தகவல் வழங்கப்பட்டது. காணிகளில் மரங்கள் வளர்ந்து காடாகவே காட்சியளிக்கின்றன. குறித்தகாணிகள்தம்முடையவைஎன்பதனை காணி உரிமையாளர்கள் உரிய ஆவணங்களைப் பிரதேச செயலரிடம் சமர்ப்பித்து அவற்றை உறுதிப்படுத்தி, மாவட்டச் செயலரின் ஒப்புதலும் பெற வேண்டும். பின்னர் அதனை வனவளத் திணைக்களத்தின் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி காணி விடுவிப்புத் தொடர்பில் கோரிக்கை விடுக்கலாம். தலைமை அலுவலகம் காணியை விடுவிக்கு மாறு கூறினால் நாம் விடு விப்போம்” என்றுவவுனியா வனவளத்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (ந,4,பி)

## 24 சாரதிகளிடம் ரூபா 224,000 தண்டம் அறவீடு

கிளிநொச்சி, ஓக. 12

போக்குவரத்து விதிமுறைகளைமீறியகுற்றங்களுக்காக 24 சாரதிகளிடமிருந்து கிளிநொச்சி நீதிமன்று நேற்று 2 லட்சத்து 22 ஆயிரம் ரூபா தண்டம் அறவிட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி நகர், பளை மற்றும் தர்மபுரம் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தபொலிஸாரால்வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

போக்குவரத்து விதிமுறைகளை மீறினார்கள் என்ற குற்றச்சாட்டில்ஒவ்வொருவழக்காகப் பொலிஸார் 24 பேரை கிளிநொச்சிநீதிமன்றில்நேற்று முற்படுத்தினர். சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். அதனால் அவர்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டது.

மதுபோதையில், சாரதி அனுமதிப்பத்திரம், வரி பத்திரம், காப்புறுதிபத்திரம், தலைக்கவசம் இன்றிப் பயணித்த ஒருவருக்கு நீதிமன்று 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

போக்குவரத்து விதிகளை மீறிய மற்றொருவருக்கு 15 ஆயிரம்ரூபாதண்டம்விதித்தது. சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி, வரிப்பத்திரம், மதுபோதையில் வாகனம் செலுத்திய மற்றொருவருக்கு நீதிமன்று 18 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம், , தலைக்கவசம், வாகனத்தில் கூடுதலான ஆள்களை ஏற்றிச் சென்றவருக்கு 14 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்பட்டது. அதன்படி இந்த 4 பேரிடமிருந்தும் 67 ஆயிரம் ரூபா தண்டமாக நீதிமன்று அறவிட்டது.

இவர்கள் தவிர ஒவ்வொரு குற்றச்சாட்டுடனும் சிலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட குற்றச்சாட்டுக்களுக்காகவும் ஏனைய 20 பேரிடமிருந்தும் நேற்று ஒரு லட்சத்து 55 ஆயிரம்ரூபாதண்டம்அறவிடப்பட்டது. (4,6)


## அரிசி விலையை அதிகரித்து விற்ற வர்த்தகருக்கு ரூ.5000 தண்டம்

நிர்ணயவிலையைவிடஅதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த வர்த்தகருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து நீதிமன்றால் எச்சரித்து அனுப்பப்பட்டார்.

கிளிநொச்சியைச்சேர்ந்தவர்த்தகர் ஒருவருக்கு எதிராக இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டது.

கிளிநொச்சிமாவட்டபாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் அவருக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். நேற்று இந்த வழக்கு விசாரணக்கு வந்தது.

வர்த்தகர் தன்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அரசியை மீண்டும் அதிக விலைக்குவிற்பனைசெய்யக் கூடாது என்று அவர் மன்றினால் எச்சரிக்கப்பட்டார். மீறி அதிகரித்த விலையில் விற்பனை செய்தமை தொடர்பாக மீண்டும் நீதி மன்றுக்கு வழக்கு வந்தால் தண்டனை அதிகரிக்கப்படும்என்றுமன்று அறிவுறுத்தியது. (4,6)



# 16ஆம் திருவிழா

### நீ இருப்பாய் என் மனதிலே!

வேலா வேலா கதிர்வேலா
நாம் கண்முன் காணும் வடிவேலா
நீங்கா வரம் தா எந்தன்நிழலாய் உன்
உருவம் தெரியுதையா
பூவால் புனைந்த உன்
திருவடியை நாம் துதிப்போம்
எந்நாளும் உன் ஆலயத்தை
தாங்காத கவலை வந்தாலும்
நீ இருப்பாய் என்று
நாம் நினைத்திடுவோம்
துயரம் வரும்போதிலெல்லாம்
எம் குறைகள் நீக்கி
அருள் தரும் குமரையா!

■ சுபானுஜன், தெல்லிப்பழை.

### தேரடியில் இருந்து பார்

நாளொரு வண்ணமும்
பொழுதொரு மேனியுமாக
நல்லூரான் கணந்தோறும்
எமை வளர்க்கின்றான்
ஆளொடு ஆளாக
ஆறுமுகமான பரம்பொருள்
அடியவர்களோடு
நடம்புரிகின்றதே நல்லூரில்
தேரடியில் நீ சும்மா இருந்து
பார் விளங்கும்
தேவலோகமென அது
உன்னை இழுக்கும்
நேரடியாய் அதைநீ
உணர்வாயப்பா
நல்லூர் சும்மாவல்ல
அது ஒரு மருந்தப்பா

■ கே.எஸ்.சிவஞானராஜா

### மஞ்சரதமேறி மாரெனன வருவான்

மான்மகள் குஞ்சரியோடிணைந்தருள வருவான்
தஞ்சம் தஞ்சமென்று தடம்பதிப்பார் தம்மை
தண்ணருளால் ஈர்க்கும் தாயெனவே அணைப்பான்
விஞ்சு புகழ் நல்லூரின் விழுமியமாய் அருள்வான்
வேலேந்தி வினையறுக்கும் வீரனென நிமிர்வான்
குஞ்சரத்தான் தம்பியவன் கோலாகலம் காட்டி
கோனெனவே பவனிவரும் திருநல்லை வீதி

■ தேவி. கணேஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கழிவுகளை தரம்பிரித்து அகற்றிடுவோம்!

★கழிவுகளை அதற்கான நிறக்குறியீட்டுக் கூடைகளிலோ/ பைகளிலோ சேகரித்து வினைத்திறனுடன் மீள் சுழற்சிக்கு உ விடலாம். நேரமும் மீதப்படுத்தப்படும்.

★கண்ணாடிக் கழிவுகள் சிவப்பு நிறக் கூடை.

★கடதாசிக் கழிவுகள நீல நிறக்கூடை.

★பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகள் செம்மஞ்சள் நிறக் கூடை.

★இலத்திரனியல் கழிவுகள் கறுப்பு நிறக்கூடை.

★உக்கக்கூடிய கழிவுகள் பச்சை நிறக் கூடை.

'நகர்ச் சுத்தம் நலம் தரும்'.

தகவல்
*சு.ம.அ.பண மனை,*
*யாழ்.மாநகர சபை.*


# தாதியர் கற்கையை தமிழ் மாணவர்கள் புறக்கணிப்பது ஏன்?

யாழ்ப்பாணம் ஓக.12

"வடக்கு மாகாணத்தில் நிலவும் தாதியர் வெற்றிடங்கள் முழுமையாக நிரப்பப்படவேண்டுமானால் தாதியர் கற்கை நெறிக்கு தமிழ் மாணவர்கள் அதிகமாக இணையவேண்டும். அப்படி இணைந்தால் மாத்திரமே இது சாத்தியமாகும்" என்று மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் நீண்டகாலமாக தாதியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன. எனினும், அரசு படிப்படியாக ஒவ்வொரு மாகாணத்திலும் வெற்றிடங்களை நிரப்பி வருகின்றது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் 120 தாதியர் வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படவேண்டிய தேவை உள்ளது. ஒவ்வொரு தாதியர் பிரிவும் பயிற்சிகளை முடித்து வெளியேறும்போது அந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. எனினும், இதனால் வெற்றிடங்களை முழுமையாக நிரப்பமுடியாது.

நடப்பு வருடத்திலும் எமது மாகாணத்துக்குத் தேவையான தாதியர்கள் விவரம் கொழும்பு சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அடுத்தபிரிவு தாதியர்கள் பயிற்சியை முடித்து வெளியேறும் போது, எமது மாவட்டத்துக்கும் நியமிக்கப்படவுள்ளனர்.

கூடுதலாக பெரும்பான்மை இன மாணவர்களே தாதியர் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். அதனால் நாம் அமைச்சிடம் எங்களுக்கு இவ்வளவு வெற்றிடம் உள்ளது, தாருங்கள் என்று கேட்கமுடியாது. எனவே, வடக்கு மாகாணத்தில் தாதியர் வெற்றிடங்கள் முழுமையாக நிரப்பப்பட வேண்டு மானால் தமிழ் மாணவர்கள் அதிகமாக தாதியர் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ய,ரி)

# மாடுகளைப் பதிவு செய்யுங்கள்!

## கால்நடைகள் திணைக்களம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.12

மாடுகள் திருட்டுச் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமானால் அவற்றைப் பதிவுசெய்வது கட்டாயம் என யாழ். மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாடுகள் திருட்டுப்போவது தொடர்பாக தொடர்ச்சியான முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. குறிப்பாக தீவுப்பகுதி மற்றும் வெளியான பிரதேசங்களை அண்டிய பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகமாக நடைபெற்று வருகின்றன.

திறந்த வெளியில் மேய்ச்சலுக்காக விடப்படும் மாடுகள் மற்றும் வாழ்வாதாரத்துக்காக வீட்டில் கட்டிவைத்து வளர்க்கப்படும் மாடுகள் திருட்டுபோகும் சம்பவங்கள் அதிகமாக இடம்பெறுகின்றன.

2016ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் கலப்பின மாடுகள் 34 ஆயிரத்து 272, உள்ளூர் மாடுகள் 28 ஆயிரத்து 526 ஆக காணப்பட்டன. ஆனால், இப்பொழுது இந்த எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளன. இங்குள்ள மாடுகள் திருடப்பட்டு வேறு மாவட்டங்களில் விற்பனை செய்யப்படுவதும், உள்ளூரில் இறைச்சிக்காக அறுக்கப்படுவதுமே இந்தக் குறைவுக்கான காரணமாகும். அறுக்கப்படும் மாடுகளின் எச்சங்கள் சந்திகளிலும், கிணறுகளிலும் வீசப்பட்டு வருகின்றன.

மாடுகள் திருட்டு சம்பந்தமான முறைப்பாடுகள் கிடைத்த போதிலும் அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கமுடியவில்லை. காரணம் திருடப்பட்ட மாடுகளில் அநேகமானவை பிராந்திய கால்நடை மருத்துவ நிலையங்களில் முறைப்படி பதிவு செய்யப்படாமையே.

எனவே, வளர்ப்பு மாடுகளுக்கு பதிவுகள் முக்கிய மாகும். பதிவு இல்லாவிட்டால் எம்மால் சட்டரீதியான நடவடிக்கை எதையும் எடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (ய,ரி)

# மாணவர் கைகளில் மடிக்கணினி: பாடசாலைகளுக்கு சுற்றறிக்கை

யாழ்ப்பாணம் ஓக.12

பாடசாலை மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் அரசின் திட்டத்தின்கீழ், மாணவர்களின் விவரங்களை சமர்ப்பிக்குமாறு கோரி வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் சகல பாடசாலைகளுக்கும் சுற்றறிக்கைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

நாட்டிலுள்ள அரச பாடசாலைகளில் ஜி.சி.ஈ. உயர்தரத்தில் 12ஆம் தரத்தில் கற்கும் மாணவர்களுக்கு மடிக் கணினிகளை வழங்குவதற்கு கொழும்பு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுதொடர்பாக கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதான சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்தார். இதன்படி எதிர்வரும் செப்டெம்பர் மதம் 7ஆம் திகதியன்று ஜி.சி.ஈ. உயர்தரம் 12 ஆம் தரத்தில் பயில்கின்ற மாணவர்களின் விவரங்களை தயாரித்து அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி 2017இல் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் விவரங்களை தரப்பட்ட படிவத்தில் நிரப்பி அனுப்புமாறும் கேட்கப்பட்டுள்ளது.

சகல ஆவணங்களும் செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதிக்கு கொழும்பு கல்வியமைச்சுக்கு கிடைக்கக் கூடியவகையில் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

அத்துடன், மடிக் கணினியைப் பகிர்ந்தளிக்கும்போது இந்தப்படிவங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். எனவே, இப்படிவங்கள் சரியாக நிரப்பப்பட்டு உறுதிப்படுத்தப்படவேண்டும்.

இதனைக் கருத்தில்கொண்டு பாடசாலை அதிபர்கள் மாணவர் விவரங்களை விரைவில் அனுப்பிவைக்க வேண்டும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது. (ய,ரி)

# மேல்மாகாண சபையின் நியதிச்சட்டம் வடக்கு மாகாணத்துக்கும் பொருத்தம்

## அதனை எமக்கேற்ப திருத்தம்செய்து நடைமுறைப்படுத்துமாறு தவராசா வலியுறுத்தல்

யாழ்ப்பாணம் ஓகஸ்ட் 12

"மேல்மாகாணசபை நடைமுறைப்படுத்திய கடற்றொழில் சார்ந்த நியதிச் சட்டம் வடக்கு மாகாணசபைக்கும் பொருந்தக்கூடிய வகையில் உள்ளது. அந்த நியதிச் சட்டத்தில் எமக்கேற்ற திருத்தங்களைச் செய்து நாம் வடக்கில் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளோம்".

இவ்வாறு வடக்கு மாகாணசபை எதிர்க் கட்சித்தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபையின் 101ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்ககோரி உறுப்பினர் து.ரவிகரன் பிரேரணை முன்மொழிந்தார்.

அந்தப் பிரேரணையில்,

'முல்லைத்தீவு மாவட்டத்தின் நீரியல் வளத்துறைத் திணைக்களம் சுருக்கு வலைகளுக்கான அனுமதிகளை வழங்குகின்றது.

அனுமதி வழங்கப்பட்ட சுருக்குவலை தொழில்முறைகள் சரியாகப் பயன்படுத்தப்படுகின்றதா? என்பதைக்கூட அதிகாரிகள் பார்ப்பதில்லை.

இவைகளைப் பார்க்கும்போது சட்டவிரோத செயல்களுக்கு மறைமுகமாக ஊக்குவிப்பு வழங்கப்படுவதாகவே மீனவ சமூகம் கருதுகின்றது.

மீன்பிடி முறைமைகள் தெரியாதவர்கள்தான் அந்தத் துறைகளில் நியமிக்கப்படுகின்றார்களா? அல்லது தெரிந்தும் தெரியாததுபோல் நாடகமாடுகின்றார்களா? மீனவ சமூகத்தை ஒடுக்காத வகையில் விதிமுறைகளோடு ஒத்த தொழில்முறைகளை மீனவர்கள் செய்வதற்கும், நீதியான செயல்களை முல்லைத்தீவு மாவட்ட நீரி யல்வளத் துறைத் திணைக்களங்கள் செய்வதற்கும் கடற்றொழில் நீரியல்வள அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்தச் சபை கோருகிறது' என்று பிரேர ணையில் குறிப்பி டப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணை தொடர்பில் கருத்துகளை முன்வைத்தபோது தவராசா தெரிவித்ததாவது:

கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் மேல்மாகாணத்தில் நியதிச் சட்டத்தை உருவாக்கிச் சில சட்ட ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

எமது மாகாணசபை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து முல்லைத்தீவு மாவட்டம் மற்றும் ஏனைய மாவட்டங்களில் உள்ள கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கான எந்த சட்ட ஏற்பாடுகளையும் நாம் செய்யவில்லை. சபையில் பிரேரணைகளை கொண்டுவருவதை விடுத்து நியதிச் சட்டத்தை உருவாக்க முயற்சி எடுங்கள்.

அல்லது மேல்மாகாண சபை நடைமுறைப்படுத்திய கடற்தொழில் சார்ந்த நியதிச்சட்டம் எமக்கும் பொருந்தக்கூடிய வகையில் உள்ளது.

அந்த நியதிச் சட்டத்தில் எமக்கேற்ற திருத்தங்களை செய்து நாம் நடைமுறைப்படுத்த இயன்ற ஒத்துழைப்புக்களை வழங்குகின்றேன்- என்றார்

"மாகாண சபையின் மீன்பிடி அமைச்சர் என்ற வகையில் நாம் அதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றோம். இதனையும் கவனத்தில் எடுத்து நாம் அடுத்த கட்டமாக என்ன செய்வது என்பதை ஆராய்வோம்' 'என்று வடக்கு மீன்பிடி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார். (ய,4,8)

# மைத்திரியின் பலவீனமே காடுகளை அழிக்கக் காரணம்

*ரவிகரன் சாடல்*

யாழ்ப்பாணம், ஓக. 12

"கனியவளங்களும், காடுகளும் தொடர்ச்சியாக சட்டவிரோதமாக அழிக்கப்பட்டுகின்றன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அதிகார பலவீனம் காரணமாகவே இப்படி நடக்கிறது".

இவ்வாறு வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் குற்றஞ்சாட்டினார்.

வடக்கு மாகாணசபையின் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமர்வில் கனியவளங்களைப் பாதுகாக்கும் வகையிலான பிரேரணை ஒன்றை ரவிகரன் முன்மொழிந்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கனியவளங்கள் உரிய அளவுப் பிரமாணங்களை மீறி அகழப்படுகின்றன.

அகழப்படும் இடங்கள் மீள்நிரப்பப்படாமல் விடப்படுகின்றன.

என்பன உள்ளிட்ட விடயங்களை பிரேரணையில் அவர் குறிப்பிட்டார்.

அதன்பின்னர் அவர் உரையாற்றும்போது:

அவற்றை அகழ்வதற்கு அனுமதி வழங்கும் அதிகாரிகள், கனியவளங்களை அகழ்ந்த பின்னர் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் மீது கவனம் செலுத்தாதது ஏன்?

கனிய வள அகழ்வில் விதிக்கப்பட்ட ஆழத்தை மீறி பலஅடி ஆழத்தில் கிடங்குகள் தோண்டப்படுகின்றன.

எமது மாகாணத்தில் காடழிப்பு நடவடிக்கையும் பரவலாக முன்னெடுக்கப்படுகின்றது.

தற்போது காடுகள் எரிக்கப்படுகின்ற சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

எமது மாவட்டத்தின் 80 வீத மான வளங்களை அழித்து விட்டனர். மிகுதியையாவது காப்பற்ற வேண்டும்.

இந்த நாட்டின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைச்சரும் அரச தலைவருமான மைத்திரியின் பலவீனமே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறக் காரணம்" என்று தெரிவித்தார்.

குறித்த பிரேரணையை வடக்கு மாகாணசபை உறுப்பினர் சிவநேசன் வழிமொழிய அதனை அரச தலைவருக்கு அனுப்புவதாக அவைத்தலைவர் அறிவித்தார். (ய,4,8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைமீறிய சாரதிகள்

## 128பேருக்கு எதிராக வழக்கு



கொழும்பு, ஒக. 12
ரயில் கடவைகளிலுள்ள சமிக்ஞை விளக்குகளை மீறி உள்ளே நுழைந்த 128 வாகனச் சாரதிகளுக்கு எதிராகக் கடந்த ஆறு மாதங்களில் வழக்குகள் தொடரப்பட்டிருப்பதாகக் கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்தின் தலைமைப் பாதுகாப்பு அதிகாரி அநுர பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.
ரயில் கடவைகளில் உள்ள சமிக்ஞை விளக்குகளை உதாசீனம் செய்து உள்ளே நுழையும் வாகனங்கள் பெரும் ஆபத்தை சந்திக்கவிருப்பதால் அவ்வாறான சாரதிகளைக் கைது செய்யும் நடவடிக்கை தீவிரமாக்கப்பட்டிருக்கின்றது.
இந்த நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.
இதேவேளை, இத்தகைய குற்றத்துக்கு 25 ஆயிரம் ரூபாவைத் தண்டப் பணமாக அறவிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## வாகன சாரதி தேவை

இலகுரகவாகனமும் முச்சக்கர வண்டியும் செலுத்தக்கூடிய சாரதி தேவை. 20.08.2017 ஆம் திகதிக்கு முன்னர் உரிய ஆவணங்களின் பிரதிகளுடனும் இரு நற்சான்றிதழ் பத்திரங்களுடனும் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

அதிபர்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## சேவைநலன் பாராட்டு விழா

(12.08.2017)

அந்தோனிப்பிள்ளை கிளபோடாசியஸ்
(ஜம்புள்)



அகவை 18 முதல் 60 வரை இவர் செய்த சேவைகள்

1. 1976.07.12 இல் வேலையில் இணைந்தார்.
2. 1979.03.21 இல் மாத்தறை பொஸ்காமுல்ல தொழிற்சாலைக்கு அங்கிருந்த புதிய ஊழியர்களுக்கு தொழிற்பயிற்சி கொடுப்பதற்காக அனுப்பப்பட்டார்.
3. 1982.04.05 இல் வென்னப்புவ தொழிற்சாலை ஊழியர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்குவதற்காக அனுப்பப்பட்டார்.
4. 1987.08.20 இல் இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் இருந்த வேளை தொழிற்சாலை மூடப்பட்டிருந்த சமயம் ரூபா 26 இலட்சம் பெறுமதியான வலைகள் களவாடப்பட்ட போது அவை கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் பாதுகாப்பாக வைக்கப்பட்டது.
5. 1990.12 மாதமளவில் யாழ். மாவட்டத்தில் மின்தடை ஏற்பட்டு தொழிற்சாலை இயங்காத நேரத்தில் பாதுகாப்பாளராகக் கடமையாற்றினார்.
6. 1997 இல் வன்னியில் இருந்து வந்து தொழிற்சாலை முழுவதும் மீள் திருத்தம் செய்யும் வேலையைப் பொறுப்பேற்று செய்தமை.
7. 1998 இல் தொழிற்சாலை திருத்த வேலைக்கு தடைகள் ஏற்பட்ட வேளை அமைச்சர் திரு.K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்களை சந்தித்து அவரின் உதவியுடன் திருத்த வேலைகள் செய்து முடிக்கப்பட்டமை.
8. 2001 ஆம் ஆண்டில் சீநோர் என்ற பெயர் மாற்றப்பட்டு வடகடல் நிறுவனம் என்ற பெயரில் கிளபோடாசியஸ் அவர்களின் முயற்சியால் பணிப்பாளர் சபையும் உருவாக்கப்பட்டு திரு. K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்களின் அமைச்சின் கீழ் தொழிற்சாலை முன்னைய 19 தொழிலாளர்களுடன் மீள வெற்றிகரமாக இயங்கவைக்கப்பட்டது.
9. இவரின் உத்வேக திறமையினாலும் தொழிற்சாலையை மீண்டும் இயக்கவேண்டும் என்ற கடும் முயற்சியினாலும் ஆரம்பிக்கப்பட்ட இந் நிறுவனம் இன்று பரிணாம வளர்ச்சி கண்டு மொத்தம் 65 ஊழியர்களுடன் தொழிற்சாலை மிகவும் திறம்பட இயங்கிக்கொண்டிருக்கின்றது. இவர் சேவைகாலத்தில் 25 தலைவர்கள் 18 பொது முகாமையாளர்களுடன் கடமைபுரிந்துள்ளார்.

இவ்வாறான சேவையாளனை ஓய்வுகாலத்தில்
சீரும் சிறப்புடனும் வாழ்கவென மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

ஊழியர்கள், நோத் சீ நிறுவனம் (வடகடல்),
வலைத்தொழிற்சாலை, குருநகர், யாழ்ப்பாணம்.

## வீடு விற்பனைக்கு

இணுவில் கிராமத்தில் இணுவில் சந்தியில் இருந்து 100 M தூரத்தில் அன்னாங்கை வீதியில் ஒரு பரப்புக் காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட புது வீடு விற்பனைக்குண்டு.

076 993 1229

## வருமானவரிக்கணக்கு திரும்பட எழுதிக் கொடுக்கப்படும்

நீண்டகால அனுபவமுள்ள கணக்காளரால் உங்கள் வருமான வரிக்கணக்கு திறம்பட எழுதி பட்டயக் கணக்காளரால் ஒழுங்செய்து கொடுக்கப்படும்.

077 889 7983

## The Royal College of Jaffna

சுபமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில ஆசிரியர்
ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி. பிளாக்வீதி.
சங்கானை. 424/3. K.K.S வீதி. யாழ்ப்பாணம்.

077 675 1649

## பஷன் ரெயிலறிங் பார்க்
## உயர்தர தையல் பயிற்சி நிறுவனம்

RGE.No :- GA-2698
114/1, டச்சுறோட், சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.

**21.08.2017 முதல் தையல் வகுப்புக்கள் ஆரம்பம்**



- நவீனதையல் இயந்திரங்களில் பயிற்சிகள்
- கனிணி முறையிலான வடிவமைப்பு பயிற்சிகள்
- சிறப்புத் தேர்ச்சிமிகு கட்டிங் பயிற்சிகள்
- குறுகிய காலத்தில் நிறைவான பயிற்சிகள்
- துறைசார் தேர்ச்சிமிக்க பல ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்
- அரச அங்கீகாரம் பெற்றசான்றிதழ் வழங்கப்படும்
- உடனடி வேலைவாய்ப்புகளும் வழங்கப்படும்

தொடர்பு
0774118808 0214928904 0766941854

குறிப்பு : தையல்கலை கற்க விரும்புவோர் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை பதிவு-செய்யவும் (ஆண் /பெண் இருபாலரும்)
தையல் வேலை தெரிந்தோர் நேரில் வரவும் அல்லது தொடர்பு கொள்ளவும். உடனடி வேலை வாய்ப்பு வழங்கப்படும். (ஆண் /பெண் இருபாலரும்)

சு.பரணன்
பஷன் ரெயிலறிங் பார்க் (யாழ் மாவட்டமுகாமையாளர்)
076 694 1854

## ஆரோக்கியமான வாழ்வுக்கு
## அம்மா வடகம்

வெளிநாடுகளுக்கு கொண்டு போக கூடிய முறையில் இப்பொழுது காற்றுப்புகாத பைக்கெட்டில் அடைத்து விற்கப்படுகிறது.

021 223 0480



## நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எல்லா மதம். எல்லா இனம். வெளிநாடு. உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும். நல்லூர் 25நாள் திருவிழாவை முன்னிட்டு பதிவுக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

இல.303,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வி.ஜெயந்தி
T.P: 077 9733 183
021 227 1468

## கடைத்தொகுதி வாடகைக்குண்டு

இல. 210 ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் கடைத்தொகுதி (கீழ்ப்பகுதியில் ஒரு கடையும். மேற்பகுதியில் 3கடைகளும்) வாடகைக்குண்டு. களஞ்சிய வசதி செய்யக்கூடிய இடமும் உண்டு.

076 831 3674

## வீடு வாடகைக்குண்டு

ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்களுக்கு மட்டும்

077 343 2422, 075 777 2158

## இன்று யாழ் மாநகரில் முதன் முறையாக
## சினிமா பாடல்களுடன்



பிரபல தென்னிந்திய பாடகர்
கலைமாமணி
உன்னிகிருஷ்ணன்
மற்றும் பாடகி உத்ரா உன்னிகிருஸ்ணன்
இணைந்து வழங்கும் மாபெரும் இசை நிகழ்ச்சி

இடம் : யாழ்/ஸ்ரான்லி வீதி , லிங்கம் கூல்பார் சந்தியில்
(வெலிங்டன் தியேட்டர் மைதானம்)
காலம் : இன்று 12 ஆம் திகதி (12.08.2017)
மாலை 6.00 மணிக்கு
300/=, 500/=, 1000/= டிக்கெட்

டிக்கெட்டுகளைப் பெற்றுக் கொள்ள
The Phone Shop
நெல்லியடி 077 285 0285
நிகழ்ச்சி நடைபெறும் இடத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.
பூபாலசிங்கம் புத்தகசாலை 021 222 6693

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் : K.T. பிரசாத்
தொடர்பு 077 550 4910
Ceylon Art Creation

## தங்கம்மா முதியோர் இல்லம்
## திறப்பு விழா

தான்தோன்றி முருகன் கோயில் ஆரம்ப விழா
(முருகன் இல்ல வளவின் நிலத்தின் கீழ் கண்டெடுக்கப்பட்டது)
இருநூறுக்கும் மேற்பட்ட உயிர் நீத்தவர்களுக்கான ஈகைச்சுடர் ஏற்றல்
நூல் வெளியீடு -இலங்கையில் தமிழர்
ஒரு முழுமையான வரலாறு - (கி.மு.300- கி.பி.2000)
ஆசிரியர்:- கலாநிதி முருகர் குணசிங்கம்

| இடம் :- | காலம் :- | நேரம் |
|---|---|---|
| அம்மா முதியோர் இல்லம் இல.01, புதுக்குளம் வீதி, புதுக்குளம், கனகராயன் குளம் | 13.08.2017 (ஞாயிறு) | மு.ப 10.00- பி.ப 4.00 மணி |

பிரதம விருந்தினர் :- வடமாகாண முதலமைச்சர் கௌரவ C.V. விக்னேஸ்வரன்
சிறப்பு விருந்தினர்கள்:- பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவஞானம் சிறிதரன்
வடமாகாண சுகாதார அமைச்சர் கௌரவ பத்மநாதன் சத்தியலிங்கம்
மற்றும் கல்விமான்களும் பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.
மதியபோசன விருந்துபசாரம் இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
குறிப்பு:- முதியோர் இல்லத்தில் சேரவிரும்புபவர்கள் மேற்படி முகவரிக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். — நிர்வாகம் —

## செவிப்புலனுக்கான முழுமையான தீர்வுகள்

"இலவச செவிப்புலன் பரிசோதனை மற்றும் காது கேட்க வைக்கும் கருவிகளைப் பொருத்தி பரீட்சித்தல்"
நவீன தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட கேட்க வைக்கும் கருவிகள்






நல்லூர் உற்சவ தினத்தை முன்னிட்டு....
இலவச கண்பரிசோதனை மற்றும் தெரிவு செய்யப்பட்ட மூக்குக் கண்ணாடிகள், காதுகேள் கருவிகளுக்கு விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

J.M. விக்கிரமராச்சி அன்ட் கம்பனி
No.178, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9288 / 021 222 8109

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Nedunkerny palm recourses development co-operative society invites eligible local and national manufacturers, authorized dears and or distributors to submit quotations for the following on an urgent basis.

| Item no | Description of goods | Quantity | Delivery location |
|---|---|---|---|
| 1 | Packing Machine powder filling and sealing Machine | 1 nos | NEDUNKERNY VAVUNIYA |
| 2 | Water bath<br>A)thermal control<br>B) 200 bottles (190 ml)/batch | 2 nos | |
| 3 | Bottle(190ml) | 50000 nos | |

The technical specifications, price schedule, delivery locations and term /conditions can be obtained from our office located in main street nedunkerny by paying non refundable fees of rs 1,000.00. Any suppliers who submit a quotation without confirming to the bidding documents will be considered as technically non responsive and the offer will be rejected. All quotation must be clearly marked with on the top left corner of the envelope.The dead line for submission of the quotations is 25thof August 2017 12.00 pm. All the quotations are opened thereafter immediately and all quotations must be sealed and delivered to the addressed below. All the late offers will be rejected. Nedunkerny palm recoursesdevelopment co-operative society reserves the right to accept or reject thebid.

The president
Nedunkerny palm recoursesdevelopment co-operative society
Main Street
Nedunkerny
Vavuniya

# பதவியைத் தொடர அனுமதி கேட்கிறார்

## ஏற்கனவே பதவி நீடிப்பு பெற்ற கடற்படைத் தளபதி

கொழும்பு, ஓக. 12


கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன மேலும் ஆறு மாத சேவை நீடிப்பை வழங்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியுள்ளார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன 55 வயதை எட்டியதையடுத்து, கடந்த பெப்ரவரி 22 ஆம் நாள் ஓய்வு பெறவிருந்தார். அவருக்கு அரச தலைவர் ஆறுமாத சேவை நீடிப்பை வழங்கியிருந்தார்.

இந்தச் சேவை நீடிப்பு ஓகஸ்ட் 22ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. இந்த நிலையிலேயே மேலும் ஆறு மாதகால சேவை நீடிப்பைக் கோரியுள்ளார்.

வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவுக்கு மீண்டும் ஆறு மாத கால சேவை நீடிப்பு அளிக்கப்பட்டால், றியர் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா மற்றும் சிறிமேவன் விஜேசிங்க ஆகியோர் சிறிலங்கா கடற்படைத் தளபதி பதவியைப் பெறும் வாய்ப்பை இழக்க நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

(5)



4ஆம் வருட நினைவஞ்சலி

அமரர் செல்வன்

சண்முகநாதன் பிரசாத்

மண்ணில்
05.11.1993

விண்ணில்
27.07.2013

எங்கள் செல்வமே பிரசாத் !
இன்றுடன் ஆண்டுகள் நான்கு முடிந்தாலும்
எங்களுடன் வாழ்ந்து கொண்டே
இருக்கும் எங்கள் செல்வமே!!
அலைகள் கூட ஒரு தடவை ஓய்ந்து விடலாம்
எங்கள் பாசத்தின் நினைவலைகள்
ஒரு நிமிடம் கூட ஓய்வதில்லை
கண்களில் உன் புன்சிரிப்பு ஜொலிக்கிறது!
காதுகளில் உன் குரல் கேட்கிறது
நேரில் பேச முடியாமல் எங்கள் இதயம் துடிக்கிறதே
அதை நீ அறிவாயா எங்கள் உயிரே "பிரசாத்"
உனது ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
சிறியதாய் (சோதிமலர்)
பெற்றோர், சகோதரர்கள்.

பத்திரகாளி கோயிலடி,
பொலிகண்டி.

# முதலீட்டாளர்களுக்கு மசிந்து கொடுத்தது மகிந்த அரசு

## குற்றம் சுமத்துகிறார் பிரதி அமைச்சர்

கொழும்பு, ஓக. 12

கடந்த காலங்களில் சுற்றாடலைப் பாதுகாக்கும் நோக்குடன் பல சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருந்தாலும், அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. முதலீட்டாளர்கள் தொடர்பில் கரிசனை செலுத்தியதாலேயே, சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் போனது. இவ்வாறு சுற்றாடல் பிரதி அமைச்சர் அநுராதா ஜயரட்ன தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் சகல முடிவுகளிலிருந்தும் எந்தச் சந்தர்ப்பத்திலேனும் பின்வாங்கும் நிலை ஏற்படாது. சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக அரசுக்கு பல்வேறு தடைகள் உருவான போதும், பொலித்தீன் மற்றும் எஸ்பெஸ்ட்டோஸ் பாவனை தொடர்பாக எவ்வித தளர்வும் வழங்கப்பட்மாட்டாது.

கடந்த காலங்களில் சுற்றாடல் தொடர்பாக நாம் பல்வேறு முடிவுகளை எடுத்தோம். அவை அனைத்தின் பின்னாலும் பெரிய வர்த்தக முதலீட்டாளர்கள் இருந்தனர். அவர்கள் முதலீடுகளை மேற்கொண்டிருந்தனர். இதனால் நாம் எடுத்த முடிவுகளை மீள் பரிசீலிக்க வேண்டி ஏற்பட்டது.

பொலித்தீன் பாவனை தொடர்பான தடைச்சட்டம் 2006ஆம் ஆண்டு மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் சட்டமாக்கப்பட்டது. அவற்றை நடைமுறைப்படுத்த முடியாமல்போனது.

இப்படியான துறைகளில் முதலீடு செய்தவர்கள் பாதிக்கப்படாத வகையில் அவர்களுக்கு ஏதும் சலுகை வழங்கி மேற்படி கைத்தொழிலை தடைசெய்ய அரசு திட்டமிட்டுள்ளது. அவர்களுக்கு மாற்றுவழிகளைக் காண்பிக்க உள்ளோம் - என்றார். (5)

அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் திருமதி

மகேஸ்வரி நாகப்பர்

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

கடந்த 15.07.2017 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவிக்கு நேரடியாக அஞ்சலி செய்தோர், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோர், மலர் வளையம், பனர் மூலம் அஞ்சலி செலுத்தியோர் மற்றும் துண்டுப் பிரசுரம் விநியோகித்தோர், ஆகாரம் பானம் வழங்கியோர் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவிப்பதுடன் அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (13.08.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 4.00 மணிக்கு தெனியம்மன் அந்தியேட்டி மடத்திலும் சபிண்டீகரணக் கிரியைகள் அன்னாரின் இல்லத்திலும் முற்பகல் 11.00 மணிக்கு இடம்பெறும். இவ் இரு நிகழ்வுகளிலும் கலந்துகொள்வதுடன் அவரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*அனைவருக்கும் தனிப்பட்ட அழைப்புகள் வழங்க முடியதிருப்பதாலும் இதை தனிப்பட்ட அழைப்பாக ஏற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

ஓடை அல்வாய் தெற்கு, அல்வாய்.
021 226 4671

குடும்பத்தினர்.

45 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
21 . 02 . 1987



மறைவு
29 . 06 . 2017

கடந்த 29.06.2017 வியாழக்கிழமை இறைபதமடைந்த
எமது சிரேஷ்ட புத்திரன்

அமரர் சக்திவடிவேல் நிருபராஜ்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (12.08.2017) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்த அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கல்ந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்*

கணபதியப்புலம்
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடி ஓடி உழைக்கும் நான் திருடனல்லன்

## நான்கு மணித்தியாலங்களே நாளாந்தம் ஓய்வெடுக்கிறேன் என்கிறார் மனோ

கொழும்பு, ஓக. 12

நான் ஒரு திருடன் அல்ல. ஒரு நாளில் இருபது மணித்தியாலங்கள்வரை உழைக்கும் ஒரு அரசியல்வாதி. இதனை எத்தனை அரசியல்வாதிகளுக்குச் சொல்ல முடியும் என்று எனக்குத் தெரிய வில்லை. இவ்வாறு அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அவர் அனுப்பி வைத்துள்ள பத்திரிகை அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முன்னணி அமைச்சர், கூட்டு அரசின் பிரதான கட்சியின் உப தலைவர் ரவி கருணாநாயக்க, அரசால் அமைக்கப்பட்டுள்ள விசாரணை ஆணைக் குழுவுக்கு அழைக்கப்பட்டு, விசாரிக்கப்படுகிறார். சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் அமைச்சரை துளைத்து எடுக்கிறார்கள். கடந்த காலங்களில் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாத அளவில் காரியங்கள் நடைபெறுகின்றன. இது நல்லாட்சி அரசாங்கம் என்பது இன்று நிரூபிக்கப்பட்டு விட்டது.



மகிந்த அணிக்குத் தேவைப்பட்டது ரவியின் பதவி விலகல் அல்ல. நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டு வந்து, அதற்கு ஆதரவு அளிக்கவும், எதிர்க்கவும் முடியாத நிலைமையை அரசில் உள்ள சிறிலங்கா சுதந்திர கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்படுத்தி, அரசை ஆபத்தில் தள்ள வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு. இன்று, இவர்களின் எதிர்பார்ப்பில் மண் விழுந்து விட்டது.

ஊழல் மற்றும் பிழைகளை நாட்டிலிருந்து முழுமையாக ஒழிக்க எம்மால் இன்னமும் முடியாமல் இருந்தாலும் கூட, இன்று நாடு முழுக்க ஊழலுக்கு எதிராக ஒரு மக்கள் எழுச்சி ஏற்பட்டுள்ளதைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த நாட்டின் வரலாற்றில் ஒரு போதும் இல்லாத முறையில் ஊழலுக்கு, திருட்டுக்கு, அதிகார மீறலுக்கு எதி ரான எழுச்சியும், அது தொடர்பில் நாடு முழுக்க மகிழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

நான் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களுக் காக, சொந்த நிதியைப் பயன்படுத்தி பல்லாண்டுகளாகக் கட்சி நடத்தி வரும் எமக்கு இது பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது.

நான் ஒரு திருடன் அல்ல. இந்த நாட்டில் பேசப்படும் மூன்று மொழிகளையும் பேசி, எழுத, படிக்கத் தெரிந்த அரசியல்வாதி. ஒரு நாளில் இருபது மணித்தியாலங்கள்வரை உழைக்கும் ஒரு அரசியல்வாதி. இவற்றை எத்தனை அரசியல்வாதிகளுக்குச் சொல்ல முடியும் என எனக்குத் தெரியவில்லை.

தேர்தல் காலங்களில் வந்தவனுக்கும், போனவனுக்கும் வாக்குகளை அளிக்கும் எமது மக்கள், என்னைப்பற்றி, எங்கள் கட்சியைப் பற்றி, எந்தளவு அறிந்து வைத்துள்ளார்கள் என்பதை எண்ணிப்பார்க்கும் போது துயரமாகவும் இருக்கிறது என்பதையும் இங்கே சொல்லியாக வேண்டும். இனி எதிர்காலத்தில் துயரங்களை எல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு, ஒட்டு மொத்த மகிழ்ச்சியை பெருக்கிடும் பணியை, நமது கட்சிக்குள் சனநாயக இளைஞர் இணையம் செய்திட வேண்டுமென விரும்புகிறேன் என்றுள்ளது. (5)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
24.09.1955

உதிர்வு
13.08.2016

### பிலிப் யோகராஜா சவிரிமுத்து
(ரஞ்சன்)
" பிரான்ஸ் "

பாதி வாழ்க்கையினில் கண்ணிமைக்கும் முன்னே
மறைந்து விட்ட உமதுறவின் நீங்காத நினைவுகளும்
உதிர்ந்து விட்ட உமதன்பின் உலராத வாசனையும்
ஆண்டுகள் பல கோடி ஆனாலும் அகலாது எம்மை விட்டு

இல.08,
இராசாவின் தோட்டம் லேன்,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10 . 02 . 1926



மறைவு
04 . 08 . 2015

### அமரர் செல்லையா தில்லைநாதன்

திதி : ஆடி மாத தேய்பிறை பஞ்சமி

ஆண்டிரண்டு ஆனதுவே அரனடியில் நீர் சேர்ந்து
ஈசன் கழலடியில் இளைப்பாறிக் கொண்டீரே...
ஊர் போற்ற வாழ்ந்தவரே, உம் உறவுகள் இப்புவியில்
ஏக்கம் கொண்டும்மை எண்ணாத நாளில்லை...
ஒரு மிடியுமின்றி ஐயா நீர் சாந்தி கொள்வீர்.. ஓங்காரன் கழலடியில்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

உடுவில் தெற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கமுத்து விநாயகமூர்த்தி



பிறப்பு 29.10.1932
இறப்பு 09.08.2017

யாழ். சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், லண்டன் Walthamstow வை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து விநாயகமூர்த்தி 09.08.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அருமைப் புதல்வியும், வண்ணார் பண்ணையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (ஆசிரியர்) - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், விநாயகமூர்த்தியின் பாசமிகு மனைவியும், பிரித்தானியாவைச் சேர்ந்தவர்களான பவானி, ரோகினி, ரஜினி, குமுதினி, ஷங்கர் (நோர்வே), வசந்தினி, கிரிசாந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான காங்கேசு, கயிலாயபிள்ளை மற்றும் நவரத்தினம்(லண்டன்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், ரஞ்சன், ராஜ்குமார், சபேதரன், ரமணி, அப்புலிங்கம், அன்பழகன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சரோஜினிதேவி, மங்கையற்கரசி, தேவயானி, காலஞ்சென்றவர்களான தட்சணாமூர்த்தி, பாலசுந்தரமூர்த்தி மற்றும் சாந்தநாயகி, சௌந்தரநாயகி, இரங்கநாயகி, கமலநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ரகோபன், மயூரி, வருண், விதுலன், யதுஷயன், தரண்யா, ஹரிஷ்வரன், அக்ஷரன் ஆகியோரின் ஆசை அம்மம்மாவும்,சௌமியா, யாதவன் ஆகியோரின் ஆசை அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 - 1.30 பி.ப City of London Cemetery & Crematorium, Aldersbrook Rd, Manor Park, London E12 5DQ, UK இல் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

84/1, தபாற்கந்தோர்லேன்,
வண்ணார்பண்ணை.

தகவல்:
குடும்பத்தினர்.

விநாயகமூர்த்தி - 004 4747 422 2115/ 021 222 6005

தோற்றம்
03 . 05 . 1919



மறைவு
09 . 08 . 2017

### கந்தையா கணபதிப்பிள்ளை

(ஓய்வு பெற்ற மத்திய வங்கி கணக்காளர்)

காரைநகர் இடைப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கணபதிப்பிள்ளை (சிறாப்பர்) 09.08.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா வள்ளியம்மை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற காமாட்சிபிள்ளையின் அன்புக் கணவரும் புஷ்பகாந்தி, சந்திரகாந்தி, சந்திரராஜா, சுந்தரகாந்தி, இந்திராகாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான தங்கமுத்து, சிவகாமன், விநாசித்தம்பி, கனகம்மா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற பரமானந்தம், விவேகானந்தன், மனோன்மணி, பரஞ்சோதி, பத்மநாதன் ஆகியோரின் மாமனாரும் உஷாநந்தினி, சுதாஸ்தினி, கௌரி, பிரதீபன்,ஜதீபன், கஜேந்திரன், அனோஜன், குகதாசன், ராதிகா, சுகந்தன், தர்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் அமிர்தசாகரன், அமிர்தவர்ஷினி, ஸ்ருதி, அஸ்வின்,கனிஷ்கன், கிருஷா, ஜஸ்வினி, பவித்ரா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

0777449362 / 0771538885

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயதாஸவை தூக்குவதில் ஐ.தே.கவினர் விடாப்பிடி

## கட்சியின் மையக் குழு விரைவில் கூடுகின்றது

கொழும்பு, ஓக. 12
நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுப்பதற்கு தயாராகி வருகின்றது என்று அந்தக் கட்சி வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.
இது தொடர்பில் ஆராய்வதற்காகக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் அடுத்தவாரம் கொழும்பில் கூடவுள்ளது. இதன்போது விஜயதாஸ ராஜபக்சவிடமிருந்து அமைச்சுப் பதவியைப் பறிக்கும் யோசனை முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தத் தீர்மானம் அரச தலைவரிடம் கையளிக்கப்படும்.
ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச அரசின் கொள்கைகளைக் கடுமையாக விமர்சித்து வருகின்றார்.
அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கிய அரசின் திட்டத்துக்கு எதிராக அவர் போர்க்கொடி தூக்கினார்.
மகிந்த அரசு மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் மந்தகதியில் இடம்பெற்று வருகின்றன. இதற்கு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவே காரணம் என்ற குற்றச்சாட்டும் இருக்கின்றது. அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பையும் அவர் மீறிச் செயற்பட்டு வருகின்றார் என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியின் தலைவரும் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வருகின்றனர்.
நம்பிக்கையில்லாப் பிரேரணை ஊடாக நீதி அமைச்சர் விஜயதாசவைப் பதவி நீக்கம் செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்திருந்தாலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அவருக்கு சார்பாக இருப்பதாலும், மேலும் சில நடைமுறைக் காரணிகளைக் கருத்திற்கொண்டுமே அரச தலைவரிடம் கோரிக்கை விடுக்கும் முடிவை ஐக்கிய தேசியக் கட்சி எடுக்கவுள்ளது. (5)



# ‘குசி’யில் மகிந்தானந்த

## புது மனைவியுடன் ஊர்சுற்றுகிறார்

கொழும்பு, ஓக. 12
முன்னாள் அமைச்சரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்தானந்த அளுத்கமகே தனது புதிய குடும்பத்துடன் நியூயோர்க் சென்றுள்ளார்.
இந்தப் பயணத்தின் போது புதிய குடும்பத்துடன் எடுத்த ஒளிப்படத் தொகுப்பை தனது முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்துள்ளார்.
மகிந்தானந்த அளுத்கமகே, அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவின் முன்னாள் மனைவியை இரண்டாம் தாரமாக அண்மையில் திருமணம் செய்து கொண்டார். (5)

# மின்தேவை அதிகரிப்பை ஈடுசெய்வதற்கு அரசு தயார்

## *13 புதிய திட்டங்கள் ஊடாக ஆயிரம் மெகாவோற் உற்பத்தி*

தேசிய மின்கட்டமைப்புக்கு மேலும் ஆயிரம் மெகாவோற் மின்சாரத்தை சேர்ப்பதற்காக 13 புதிய திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திகள் அமைச்சு தெரிவித்துள்ளது.
நாளாந்தம் அதிகரித்துவரும் மின்சாரத் தேவைக்கு நீண்டகால அடிப்படையில் நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே இந்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்காக இலங்கை மின்சார சபை முன்வைத்த பிரேரணைக்கு மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவும் அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டங்களுக்காக உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டிருப்பதாகவும் அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.
காலியில் நிர்மாணிக்கப்படவுள்ள 'பாஜ் மவுண்ட்' திட்டம், பொலந்றுவை மற்றும் வாழைச்சேனை பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படவுள்ள சூரியஒளி மின்திட்டம், மன்னாரில் நிர்மாணிக்கப்படவுள்ள காற்றாலை மின்திட்டம் உட்பட 13 புதிய திட்டங்கள் மூலம் மொத்தமாக ஆயிரம் மெகா வோற் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டிருப்பதாகவும் இத்திட்டங்களை ஆராய்வதற்கான தொழில்நுட்பக் குழுவொன்று இப்போது நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (5)



# கற்குவாரி வெடிப்பு பிரான்ஸ் குடிமகன் காயம்

கொழும்பு, ஓக. 12
பதுளை - பண்டாரவளை முதன்மை வீதியில் தெமோதரயிலுள்ள கற்குவாரியில் ஏற்பட்ட வெடிப்பால், பிரான்ஸ் நாட்டுக் குடிமகன் படுகாயமடைந்த நிலையில் பதுளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றுள்ளது.
சாலி றொப்ரோ (வயது-24) என்ற பிரான்ஸ் குடிமகனே இதனால் காயமடைந்துள்ளார்.
இவருடன் பயணம் செய்த பெண் அதிர்ச்சியடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
கற்குவாரியில் வைக்கப்பட்ட வெடிபொருள் வெடித்ததால், கல்லொன்று சுமார் 300 மீற்றர் தொலைவில் தூக்கி வீசப்பட்டுள்ளது. அந்தக் கல்லானது, கற்குவாரிக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த மேற்படி நபர் மீது பட்டதால், அவர் காயமடைந்துள்ளதாக, விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். (5)

# நிதி அமைச்சு ஆலோசகராக மனோதித்தவெல்ல நியமனம்

கொழும்பு, ஓக. 12
நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் மூத்த ஆலோசகராக மனோ தித்தவெல்ல நியமிக்கப்பட்டுள்ளார். கூட்டு அரசின் நிதி அமைச்சின் நிதி மற்றும் அபிவிருத்தி கொள்கைத் திட்டத்தின் நிகழ்ச்சி நிரலை கண்காணிப்பதற்கே அவர் மூத்த ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.
நல்லிணக்க பொறிமுறை தொடர்பான அலுவலகத்தில் பொதுச் செயலாளராக செயற்பட்டுவரும் மனோ தித்தவெல்ல நீதிக்கான பொறிமுறை மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்கான இணைப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

# மனைவியை அடித்துக் கொன்ற இராணுவ கோப்ரலுக்குத் தூக்கு

## *10ஆண்டுகளின் பின் கிடைத்தது நீதி*

கொழும்பு, ஓக. 12
தனது மனைவியைப் பொல்லால் தாக்கிக் கொலைசெய்த முன்னாள் இராணுவ கோப்ரல் ஒருவருக்கு வடமத்திய மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுளா திலகரத்ன தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.
நொச்சியாகம, காலதிவுல்வெவ பிரதேசவாசியான ஜயசேனகே ஜானக என்பவருக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.
2007ஆம் ஆண்டு செப்ரெம்பர் 22ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த காலப்பகுதியில் நொச்சியாகம பிரதேசத்தில் தனது மனைவியான சுஜாதா வீரசேகரவை பொல்லால் தாக்கிக் கொலை செய்தபின் சடலத்தை குழிதோண்டிப் புதைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் சட்டமா அதிபரால் இந்த வழக்கு அநுராதபுரம் மேல்நீதிமன்றத்தில் தொடரப்பட்டது.
கடந்த பத்து வருடங்களாக நடந்துவந்த இந்த வழக்கு விசாரணையின் முடிவில் எதிராளி மீது சுமத்தப்பட்ட கொலைக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டிருப்பதால் அவருக்கு உச்சபட்ச தண்டனையாக தூக்குத் தண்டனை விதிக்கப்படுவதாக நீதிபதி தீர்ப்பளித்தார். (5)

## வர்ண மீன்கள் விற்பனைக்கு

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க **பூங்கன்றுகள், பயன்தரு மரங்கள், பூச்சாடிகளுடன் அலங்கார மீன்கள்** விற்பனையையும் ஆரம்பித்துள்ளோம்.
ஆரம்பத்தினை முன்னிட்டு மலிவு விலையில் விற்பனை இடம்பெறுகின்றது. **புதிய இன செம்பரத்தைகள் பூக்களுடன்** விற்பனைக்குண்டு.

**பவிசாரு பூங்கனிச் சோலை**
**311/1, பலாலி வீதி, கோண்டாவில், யாழ்ப்பாணம்.**
**077 397 6203/ 021 222 8199**

## தரம் 5 தேசிய ரீதியான முன்னோடிப்பரீட்சை

(பெறு பேற்றுச் சான்றிதழ்கள் தபால் மூலம் அனுப்பப்படும்)

இதுவரை காலமும் மாதாந்தம் சிங்கள மொழிபெயர்ப்பு வினாத்தாள்களை வழங்கிவந்த ஒளிஅரசி சஞ்சிகையானது இறுதி முன்னோடிப்பரீட்சை ஒன்றை ஆகஸ்ட் மாத ஒளிஅரசி ஊடாக நடத்துகின்றது. நாளை மறுதினம் வெளிவரவுள்ள இவ்வினாத்தாளை பெற விரும்புவோர் கீழ்வரும் இலக்கங்களுடன் தொடர்புகொண்டு வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

வடக்கு - (0776569617) கிழக்கு- (0718724057) வலிகாமம் (0774023746)
மலையகம் - (0718724056). பொது- (0714273035)

# ஒகஸ்ட் பதினேழு சனிபிடித்த நாள்

## பிரகடனப்படுத்தியது மகிந்த அணி

கொழும்பு, ஓக. 12
கூட்டு அரசின் இரண்டு வருடப் பூர்த்தியை இலங்கைக்கு சனிபிடித்த நாளாகப் அறிவித்து நாடளாவிய ரீதியில் போராட்டத்தை முன்னெடுக்க பொது எதிரணியான மகிந்த அணி தீர்மானித்துள்ளது.
2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையான அரசு மலர்ந்தது. அதே ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அதிக ஆசங்களைப் பெற்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கூட்டு அரசை நிறுவியது.
ஐ.தே.கவுடன் இணைந்து ஆட்சியில் பங்குகொள்ள முடியாது எனத் தெரிவித்து முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொது எதிரணி சுயாதீனமாகச் செயற்பட ஆரம்பித்தது. அன்றுமுதல் இன்றுவரை கூட்டு அரசுக்கு எதிராகப் போராடிவரும் பொது எதிரணியான மகிந்த அணி எதிர்வரும் 17ஆம் திகதி, கூட்டு அரசு அமையப்பெற்று இரண்டு வருடப் பூர்த்தி தினத்தை இலங்கைக்கு சனிபிடித்த தினமாகப் பிரகடனப்படுத்தி நாட்டின் பல்வேறு இடங்களில் போராட்டங்களை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது. (5)

# அலைபேசிக்காக மாணவி எடுத்த தவறான முடிவு

கொழும்பு, ஓக. 12
தனது அலைபேசி பாடசாலை அதிபரிடம் சிக்கியதையடுத்து பெற்றோரை பாடசாலைக்கு அழைத்துவருமாறு நிர்ப்பந்திக்கப்பட்டதால் மனமுடைந்துபோன மாணவி தவறான முடிவு எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
வகுப்பறைக்கு அவர் கொண்டுவந்திருந்த அலைபேசி அதிபரிடம் சிக்கியதையடுத்து அடுத்தநாள் அவரது பெற்றோருடன் பாடசாலைக்கு வரவேண்டுமென அதிபர் நிர்ப்பந்தித்துள்ளார்.
இதனாலேயே மாணவி தவறான முடிவை எடுத்திருக்கலாம் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்சத்துக்கு வருகிறது நாமலின் டுபாய்க் கணக்கு

கொழும்பு, ஓக. 12
நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் டுபாய் வங்கிக் கணக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அந்தக் கணக்கில் கோடிக்கணக்கில் பணம் இருப்பது தெரியவந்துள்ளது. இவ்வாறு கூட்டு அரசின் அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய வங்கி மோசடியை மகிந்த அணியினர் பெரிதாகத் தூக்கிப் பிடித்துக்கொண்டு எமக்கு எதிராகப் பரப்புரை செய்கின்றனர். இவர்கள் செய்த மோசடிகளைத் திருட்டுக்களை மறந்துவிட்டனர். இவர்கள் செய்த திருட்டுக்களை நாம் ஆதாரத்துடன் வெளியிடுவோம். அதற்கான விசாரணைகள் தொடர்கின்றன.

மகிந்த ஆட்சியில் இருந்த திருடர்களைப் பிடிப்பதில் தாமதம் ஏற்படுவது குறித்து மக்கள் அதிருப்தி வெளியிடுகின்றனர். இது தாமதமாவதை நாமும் விரும்பவில்லை. இவர்கள் விரைவில் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே எமது விருப்பமும்கூட. அதற்காகச் சட்டத்தை மீறி நாம் எதையும் செய்யமாட்டோம். சட்டப்படிதான் எதுவும் நடக்கும்.

பலரது வங்கிக் கணக்குகள் விசாரிக்கப்படுகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் டுபாய் வங்கிக் கணக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அந்தக் கணக்கில் கோடிக்கணக்கில் பணம் இருப்பது தெரியவந்துள்ளது. மிக விரைவில் இந்தத் தகவல் ஆதாரத்துடன் வெளியிடப்படும். அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (5)



# வறட்சியிலும் விளைச்சல் அமோகம்

## திருகோணமலையின் நிலமை இது

திருகோணமலை, ஓக. 12
திருகோணமலை மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சிறுபோக நெல் அறுவடை அமோகமாக நடைபெற்றுவருகின்றது. கடும் வறட்சிக்கு மத்தியிலும் குளத்து நீரை நம்பி மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை நல்ல விளைச்சலை தந்துள்ளதாக விவசாயிகள் மகிழ்சியுடன் தெரிவித்தனர்.

ஏக்கருக்கு 30 முதல் 35 நெல் மூடைகள் அறுவடை பெறப்படுகின்றது. நெல் அறுவடை செய்யும் இயந்திரம் மூலம் பரவலாக அறுவடை இடம்பெறுகிறது. கூலியாள்கள் மூலம் அறுவடை செய்ய ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபா செலவாவதாகவும், இயந்திரத்தைப் பயன்படுத்தி அறுவடை செய்ய 6 ஆயிரம் ரூபாவே செலவாவதாகவும் விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

விவசாயிகளிடம் நெல்லை வயல்களுக்கு வந்தே தனியார் வியாபாரிகள் கொள்வனவு செய்கின்றனர்.

ஒரு மூடை நெல், 2 ஆயிரத்து 700 ரூபா தொடக்கம் 2 ஆயிரத்து 800 ரூபா வரையில் விற்பனையாவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (5,45)

# ரவியின் பதவி விலகல் மக்களின் வெற்றியாம்

## கூறுகிறார் மகிந்த அமரவீர

கொழும்பு, ஓக. 12
ரவி கருணாநாயக்கவின் பதவி விலகல் எதிரணியினருக்கோ அல்லது அரசதரப்பினருக்கோ கிடைத்த வெற்றியல்ல. அது மக்களுக்கு கிடைத்த வெற்றி. இவ்வாறு அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.



மத்திய வங்கியின் பிணை முறி மோசடி தொடர்பில் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டிருந்த ரவி கருணாநாயக்க தனது பதவியிலிருந்து விலகுவதாக நேற்று முன்தினம் அறிவித்திருந்தார். இந்தப் பதவி விலகல் தொடர்பில் நாடாளுமன்றத்தில் மகிந்த அமரவீர தெரிவித்ததாவது:

ரவியின் பதவி விலகலை நான் மதிக்கின்றேன். அதே நேரத்தில் இதனை யாரும் தமக்கானதாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஊழல் மோசடிகளால் வெறுப்படைந்த மக்கள் 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்திற்காக வாக்களித்தனர். மக்கள் ஆணைக்கு ஏற்பவே அரசு செயற்பட வேண்டும். அதுவே சனநாயக பண்பாகும். இந்த விடயத்தில் மக்களே வெற்றி பெற்றுள்ளனர்.

**ஊழல் மோசடிகள் விடயத்தில் அரச தலைவர் மிகவும் பொறுப்புடன் செயற்படுகின்றார். இனிவரும் காலங்களிலும் அரசு நேர்மையுடனேயே செயற்படும் - என்றார்.** (5)

# போகிற போக்கில் கச்சதீவையும் கூட தாரைவார்ப்பார்கள்

## கூட்டு அரசின் செயற்பாடு குறித்து அமைச்சர் சுசில் விசனம்

> “நாம் அரச சொத்துக்களை விற்பனை செய்தல் என்ற கொள்கைக்கு எதிரானவர்கள். இன்று கட்சியிலுள்ள சிலர் கட்சியின் கொள்கை தெரியாது செயற்பட்டு வருகின்றனர். எனக்கு இவற்றைப் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது.”

கொழும்பு, ஓக. 12
கூட்டு அரசில் தொடர்வதா இல்லையா என்று விரைந்து முடிவெடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளேன். நாட்டின் ஒவ்வொரு இடங்களையும் தாரைவார்ப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இப்படியே போனால், கச்சதீவை இந்தியாவுக்கும் தாரைவார்த்து விடுவார்கள். இவ்வாறு கூட்டு அரசில் அமைச்சராக இருக்கும் சுசில் பிரேமஜயந்த கட்சியின் மையக் குழுக் கூட்டத்தில் கொந்தளித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் கலந்து கொண்டிருந்தார். இந்தக் கூட்டத்திலேயே சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நான் கூட்டு அரசில் ஏமாற்றத்துடன் உள்ளேன். கூட்டு அரசில் தொடர்ந்தும் இருப்பதா? இல்லையா என்பது குறித்து விரைவாக தீர்மானம் எடுக்கவுள்ளேன். நான் சொல்லும் கருத்துக்களைக் கூட ஏற்றுக் கொள்ளாத ஒரு நிலமை கட்சிக்குள் உருவாகியுள்ளது. கூட்டு அரசுக்குள்ளும் பல்வேறு கருத்து முரண்பாடுகள் உள்ளது. அவை தீர்த்து வைக்கப்பட வேண்டும்.

நாட்டிற்குள் சனநாயகத்தை நிலைநாட்டுவது அரசின் பொறுப்பாகும். இந்த அரசு நாட்டு மக்களின் பிரபல்யத்தன்மையையும் இழந்துள்ளது. இதனை எதிர்வரும் தேர்தலின் போது காணலாம்.

அரச சொத்துக்களை விற்பனை செய்வது என்ற கொள்கையுடன் அரசு செயற்பட்டு வருகின்றது. அரச நிறுவனமொன்றை லாபம் உழைக்கச் செய்யத்தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுத்து விட்டு இறுதித் தீர்வாக அதனை குத்தகைக்கு கொடுப்பதைத் தீர்மானிக்கலாம். அரசு எடுத்த எடுப்பிலேயே விற்பனை செய்யவே பார்க்கின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் காரியாலயத்திற்குள் இருந்து இதனைக் கூறுகின்றேன். நாம் அரச சொத்துக்களை விற்பனை செய்தல் என்ற கொள்கைக்கு எதிரானவர்கள். இன்று கட்சியிலுள்ள சிலர் கட்சியின் கொள்கை தெரியாது செயற்பட்டு வருகின்றனர். எனக்கு இவற்றைப் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. விரைவில் முக்கியமான தீர்மானம் எடுப்பேன் - என்று கூறியுள்ளார். (5)

# சிராந்தி ராஜபக்ச 15ஆம் திகதி கைதாவார்?

கொழும்பு, ஓக. 12
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் பாரியார் சிராந்தி ராஜபக்ச சில நாள்களுக்குள் கைது செய்யப்படுவதற்கான சாத்தியம் இருப்பதாகச் சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் கொலை வழக்குத் தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக் கொள்வதற்காக, சிராந்தி ராஜபக்ச எதிர்வரும் 15ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டுள்ளார். விசாரணைகளில் பின்னர் அவர் பெரும்பாலும் கைது செய்யப்படக் கூடும் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

# மெச்சிய சம்பந்தனுக்கு மெய்சிலிர்த்து நன்றி சொன்ன ரவி

கொழும்பு, ஓக. 12
அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதாக ரவி கருணாநாயக்க நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார். இதன் பின்னர் உரையாற்றிய எதிர்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன், ரவி கருணாநாயக்கவைப் பாராட்டினார். அவர் எடுத்த முடிவு துணிச்சலானது என்றும் வர்ணித்திருந்தார். இதற்கு, ரவி கருணாநாயக்க நன்றி தெரிவித்துள்ளார். (5)

# 50 கோடிக்கு குழந்தைப் பால்மா விற்பனை தாய்பாலூட்டல் குறைந்ததன் விளைவு இது

## விழிப்புணர்வு தேவை என்கிறார் சுகாதார மருத்துவ அதிகாரி பஸாஸ்

அம்பாறை, ஓக. 12
ஆண்டுக்கு 50 கோடி ரூபாவைப் பொது மக்கள் குழந்தைகளுக்கான பால்மாவுக்குச் செலவிடுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எமது பிராந்திய மக்களிடையே தாய்ப்பாலூட்டலின் மகத்துவம் குறித்து விழிப்புணர்வு இல்லாமையாலேயே இந்த நிலை ஏற்படுகின்றது. இது தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும். இவ்வாறு கல்முனைப் பிராந்திய தாய், சேய் நலன் சுகாதார மருத்துவ அதிகாரி எம்.ஏ.சீ.எம்.பஸாஸ் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில், தாய்ப்பால் ஊட்டல் வாரம் தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கில் சிறப்புரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெரும் பலாபலன்களும், மகத்துவமும் மிக்க தாய்ப்பாலூட்டல் தொடர்பில் எமது ம்க்களிடையேயும் பெரும் அசமந்தமே காணப்படுகின்றது. குழந்தைகளுக்குத் தாய்ப்பால் ஊட்டுவது மிக அவசியமாகும். குழந்தையின் வளர்ச்சிக்குத் தாய்ப்பாலின் அவசியம் குறித்து வலியுறுத்தியுள்ள உலக சுகாதார நிறுவனம் முதல் ஆறுமாதங்கள் வரைக்கும் தாய்ப்பால் அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளது. பிறந்த குழந்தை ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் வளர்வதற்கு தாய்ப்பால் அவசியமென்பதைத் தாய்மார் உட்பட அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

**முன்பள்ளி**

தாய்ப்பாலூட்டல் மூலம் சுவாசத் தொற்றுக்கள் குறைவது மட்டுமன்றி, தாய்ப்பால் உலகில் சிறந்த நோய் எதிர்ப்பு சக்தியாகவும் திகழ்கின்றது. தாய்ப்பால் மூலம் குழந்தைக்குச் சிறந்த போசனை கிடைப்பதும் முக்கியமாகும். பாலூட்டும் தாயின் மடி ஓர் சிறந்த முன்பள்ளிப் பாடசாலையாகவும் திகழ்கின்றது. இந்த அளவுக்குத் தாய்ப்பாலூட்டல் முக்கியத்துவம் பெறுகின்றது. நாட்டின் கொள்கை, செயற்பாடுகளில் தாய்ப்பாலூட்டல் செயற்திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.


**கொலைக்கான அனுமதிப்பத்திரம்**

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி கூடுதலாகத் தாய்ப்பாலூட்டும் நாடாக இலங்கை திகழ்வதுடன், முதலிடமும் வகிக்கின்றது. புட்டிப்பாலூட்டல் ஒரு கொலைக்கான அனுமதிப்பத்திரம் என்று வர்ணிக்கப்பட்டு தாய்ப்பாலின் மகத்துவம் தெளிவுபடுத்தப்பட்டுள்ள போதிலும் எமது பிராந்திய மக்களிடையே இன்னும் விழிப்புணர்வூட்டப்படவேண்டியதன் அவசியம் மேற்பட்டுள்ளது - என்றார். (5,30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரியாவுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை

### 48 மணிநேர இடைவெளியில் இரண்டாவது தடவையாக




வொஷிங்டன், ஓக. 12

"அமெரிக்காவையோ, அமெரிக்காவின் குவாம் தீவையோ அல்லது அமெரிக்காவின் நட்பு நாடுகளையோ வடகொரியா இலக்குவைத்தால் அந்த நாடு நினைத்துப் பார்க்க முடியாத பேரழிவைச் சந்திக்கும்" என்று தெரிவித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

நியூஜெர்சியில் உள்ள பெஸ்ட்மினிஸ்டர் என்ற இடத்தில் தனது விடுமுறையைச் செலவிட்டு வருகிறார் ட்ரம்ப். அங்கு நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் உரையாற்றுகையிலேயே ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார்.

"வடகொரியாவின் மிரட்டலை எப்படி கையாள்வது என்பது குறித்து அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அதைப்பற்றி பேச வேண்டியதில்லை. நான் ஏனைய அதிபர்களைப் போன்று இல்லை. கொரியத் தீபகற்பத்தில் அமெரிக்க இராணுவம் முகாமிட்டுள்ளது. இது குறித்து நான் எதுவும் பேசவில்லை. ஆனால் அங்கு நடக்கபோவது என்ன என்பதை பார்ப்போம். வடகொரியாவைப் பொறுத்தவரை அதன் நடவடிக்கைகள் எமக்கு கடும் கோபத்தை அதிகரிக்கும் என்பதை என்னால் உறுதியாக கூறமுடியும். அமெரிக்காவையோ அல்லது அதன் நட்புநாடுகளையோ வடகொரியா தாக்க நினைத்தால், நினைத்து பார்க்க முடியாதபடி இழப்புகளை அந்த நாடு சந்திக்கும்" என ட்ரம்ப் மேலும் தெரிவித்தார்.

1945ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இந்தக் காலப்பகுதிகளில்தான் ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாகி நகர்கள் மீது அமெரிக்காவால் அணுகுண்டு வீசப்பட்டது. அந்த வாரத்தை நினைவுகூரும் இந்தக் காலகட்டத்தில் மூன்றாம் உலகப் போருக்கான போர்ப் பதற்றம் கொரியத் தீபகற்கத்தில் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



# அமெ
# 4 ஏவ

### ட்ரம்புக்கு

பியாங்யாங், ஓக. 12
"அமெரிக்காவைத் தாக்க
என்ற எண்ணம் வடகொ
இருந்தால், அந்த நாடு வரலா
பேரழிவைச் சந்திக்கும்" என்று
அதிபர் ட்ரம்ப் எச்சரித்திருந்த
அமெரிக்காவைத் தாக்க தம்மி
மேம்பட்ட ரகத்தை உடைய க
டுக் கண்டம் பாயும் ஏவுகலை
ளன என்று தெரிவித்தது வட
பன்னாட்டு சட்டதிட்டங்களை
ளையும் மீறி வடகொரியா தெ
ஏவுகணைச் சோதனைகள
வருகிறது. அண்மையில் அந்
டம் விட்டுக் கண்டம் பாயும்
களை வெற்றிகரமாகச் சோதி
சோதனைகள் அமெரிக்காவு
னவை என்று வடகொரியா ப

# மறைந்தார் ரூத் பாவ்

### பாக். அன்னை திரேசா என்று புகழ் பெற்றவர்



இஸ்லாமபாத், ஓக. 12

பாகிஸ்தானின் அன்னை திரேசா என அழைக்கப்படும் மருத்துவர் ரூத் பாவ், வயோதிபம் காரணமாக நேற்று மறைந்தார். யாருமே தொடுவதற்கு கூட அருவெறுப்பு அடையும் நிலையில் உள்ள தொழுநோயாளிகளை தொட்டு அவர்களுக்கு அன்புடனும், ஆதரவு டனும் சிகிச்சை அளித்தவர் அன்னை திரேசா. இவரைப் போலவே, சேவை மனப்பான்மை கொண்ட ஒரு மருத்துவரே ரூத் பாவ்.

ஜெர்மனியில் பிறந்த இவர் 1960ஆம் ஆண்டில் முதல் முதலாக பாகிஸ்தானுக்குச் சென்றார். அங்கு சென்ற அவர் தொழுநோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்தார். பாகிஸ்தானின் அன்னை திரேசா என்று அழைக்கப்படும் வகையில் ரூத் பாவ் அருமையான சேவைகளை ஆற்றினார். 87 வயதான ரூத் பாவ், கடந்த சில வாரங்களாக வயது முதிர்வினால் ஏற்பட்ட உடல்நலக் குறைவால் கடும் அவதிப்பட்டு வந்தார். சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார். (ம)

# வடகொரியாவு
# மத்திய டோக்கி

அமெரிக்காவின் குவாம் தீவையோ அல்லது ஜப்பானையோ தாக்கும் வகையில் வடகொரியாவின் ஏவுகணைகள் சென்றால் அவை டோக்கியோவை அடையும் முன்னர் வான் பரப்பில் வைத்து அழிக்கும் விதத்தில் ஏவுகணைத் தடுப்பு அமைப்பை மத்திய டோக்கியோவில் நிறுத்தியுள்ளது ஜப்பான்.

இந்தத் தகவலை பன்னாட்டு ஊடகமான டெய்லி மெய்ல் வெளிப்படுத்தியது.

குவாம் தீவை நான்கு ஏவுகணைகள் மூலம் தகர்க்கப்போவதாக வடகொரியா விடுத்துள்ள மிரட்டல் உலக அரங்கை அதிர வைத்தள்ளது. வடகொரியாவிடம் அவ்வாறு மேம்பட்ட ரக ஏவுகணைகள் உள்ளமை தற்போது



தெரியவ
முயற்சி
கச்சிதம
வடகொா

# எடப்பாடியின் தமிழ
# நம்பிக்கை இல்லாத்

சென்னை, ஓக. 12
அ.தி.மு.க. மூன்று அணிகளாகப் பிரிந்துள்ளதா
சூழல் நிலவுகிறது என்று தெரிவித்த எதிர்க்கட்சி
தேவைப்பட்டால் தமிழக அரசு மீது சட்டப்பேரவ
யில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படும் என்று
சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று தி.மு
கூட்டம் நடைபெற்றது. செயல் தலைவர் மு.க.ஸ
பெற்ற இந்த கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறை
உரையாற்றுகையிலேயே அவர் இவ்வதறு குறி

# சுவருடன் மோ

சீனாவின் சான்சி மாகாணத்தில் பேருந்து சுரங்கப் பாதைச் சுவரில் மோதி விபத்துக்குள்ளானதில் 36 பேர் உயிரிழந்தனர். இந்தத் துயரச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

செங்கடு நகரில் இருந்து மத்திய சீனா
வில் உ
சுமார்
பேருந்
ளானது
இழந்த
ணம்



தென்னமரிக்க நாடுகளில் ஒன்றான மெக்சிக்கோவில் உள்ள, வெராகுருஸ் நகரில் நேற்று கடும்புயல் வீசியுள்ளது. இது தொடர்பான செய்திகளும் ஒளிப்படங்களும் பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸால் வெளியிடப்பட்டுள்ளது. உயிரிழப்புத் தொடர்பிலும், பொருட்சேதம் தொடர்பிலும் உத்தியோகபூர்வத் தகவல்கள் எதுவும் நேற்று மதியம் வரை வெளியிடப்படவில்லை. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...ரிக்காவைத் தாக்க ...வுகணைகள் தயார்

## ...தப் பதிலடி

...க்கவேண்டும் ...கொரியாவுக்கு ...ரலாறு காணாத ...ன்று அமெரிக்க ...ந்த நிலையில், ...ம்மிடம் நான்கு ...டய கண்டம்விட் ...கணைகள் உள் ... வடகொரியா. ...ளையும், விதிக ... தொடர்ந்து பல ...களை நடத்தி ... அந்த நாடு கண் ...யும் ஏவுகணை ...சாதித்தது. தமது ...காவுக்கு எதிரா ...பா பகிரங்கமாக அறிவிக்கவும் செய்தது. வடகொரியாவிடம் இத்தகைய ஏவுகணைகள் இல்லை என்று தெரிவித்துக் கொண்டிருந்த அமெரிக்காவுக்கு, வடகொரியாவின் இந்தச் சோதனை பெரும் தலைவலியைக் கொடுத்தது.

இந்தப் பின்னணியில் கருத்துத் தெரிவித்திருந்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப், “வடகொரியா கடுமையான ஊழிக்காலப் பேரழிவைச் சந்திக்க நேரிடும். அமெரிக்க இராணுவ முகாமின் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் இந்த உலகம் இதுவரை காணாத தீயையும் சீற்றத்தையும் வடகொரியா சந்திக்கும்” என எச்சரிக்கை விடுத்திருந்தார்.

ட்ரம்பின் இந்தக் கருத்துக்கு வடகொரிய இராணுவத் தளபதி, கம் ராக் கயாம் பதிலடி கொடுத்துள்ளார். “அமெரிக்காவையும், பசுபிக் கடலில் அமெரிக்காவுக்குச் சொந்தமாக உள்ள குவாம் தீவையும் வடகொரியா எந்த நேரத்திலும் தாக்கலாம். ஹவசாங் - 12 ரகத்தைச் சேர்ந்த 4 ஏவுகணை கள் எப்பொழுதும் அமெரிக்காவுக்கு எதிராகச் சிறிப்பாயலாம்” என அவர் மேலும் குறிப்பிட்டார்.

குவாம் தீவு வடகொரியாவில் இருந்து 3 ஆயிரத்து 350 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. இது 541 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்டதாகும். இதில் ஒரு லட்சத்து 63 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். இந்தத் தீவு அமெரிக்காவின் முக்கிய இராணுவத் தளமாகவும் உள்ளது. தீவின் கால் பங்கு பகுதியை இராணுவத் தளமாக பயன்படுத்துகின்றனர். 6 ஆயிரம் பேர்கொண்ட வலுவான விமானப்படையும் அங்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



# தென்சீனக் கடல் பரப்பில் அமெரிக்கப் போர்க் கப்பல்

வொஷிங்டன், ஓக. 12


சர்ச்சைக்குரிய தென்சீனக் கடல்பரப்பில், அமெரிக்கப் போர்க் கப்பல் சென்றுள்ளமை தற்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தென்சீனக் கடல்பரப்பை சீனா, தைவான், பிலிப்பைன்ஸ், வியட்நாம் உள்ளிட்ட பல நாடுகள் சொந்தம் கொண்டாடி வருகின்றன. சீனா சற்று கூடுதல் கரிசணை காட்டியது. இதனால் பன்னாட்டு தீர்ப்பாயத்தில் சீனாவுக்கு எதிராக பிலிப்பைன்ஸ் வழக்குத் தொடர்ந்தது. அதில் தென்சீனக் கடல்பரப்பில் சீனாவுக்கு உரிமையில்லை என்று முடிவாகியது.

இதற்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்து குறித்த பகுதியில் தொடர்ந்தும் தனது இராணுவ நடவடிக்கைகளை நகர்த்தி வருகிறது. சீனாவின் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா எதிர்ப்புத்தெரிவித்துள்ளது. தென்சீனக் கடல்பரப்பு பொதுப்போக்குவரத்துக்கு உடைய பாதை. அவற்றில் சீனா தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதை ஏற்க முடியாது என்பது அமெரிக்காவின் கருத்தாக அமைந்துள்ளது.

சீனாவின் ஆக்கிரமிப்பிற்குச் சவால் விடும் வகையில் அமெரிக்காவின் ஜான் எஸ். மெக்கெய்ன் என்ற போர்க் கப்பல் தென் சீனக் கடற்பகுதியில் அமைந்துள்ள சீனாவின் செயற்கைத் தீவுக்கு அருகே நேற்று நெருங்கிச் சென்று சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (ம)

# ...வுக்கு எதிராக ஏவுகணைத் தடுப்பு ...க்கியோவில் நிறுத்தியது ஜப்பான்




...ரியவந்துள்ளதால் தற்காப்பு ...யற்சிகளை அமெரிக்கா கன ...சிதமாகச் செய்து வருகிறது. ...கொரியாவுக்கு அயல்நாடான தென்கொரியா, அமெரிக்காவின் நட்பு நாடு. எனவே ஏவுகணைகளைத் தாக்கியழிக்கும் தாட்ட என்ற ஏவுகணைத் தடுப்பை தென்கொரியாவில் நிலை நிறுத்தியுள்ளது அமெரிக்கா. இதன்மூலம் தென்கொரிய வான்பரப்பில் வைத்து வடகொரியாவின் ஏவுகணைகளை அழித்துவிடலாம் என்பது அமெரிக்காவின் திட்டம். இதேபோல் ஜப்பானும் தனது தற்காப்பு நடவடிக்கைகளில் அதிகம் கவனம் செலுத்துகிறது. வடகொரியாவின் தெற்குப் பக்கமாக ஏவப்பட்டு தென்கொரியாவில் இருந்து தப்பிவரும் ஏவுகணைகளையும், கிழக்குப் பக்கமாக தம்மை நோக்கி ஏவப்படும் ஏவுகணைகளையும் வானில் வைத்து தாக்கி அழிக்க மத்திய டோக்கியோவில் ஏவுகணைத் தடுப்புக்களை ஜப்பான் நிறுத்தியுள்ளது. (ம)

# டோக்லாம் விவகாரத்தில் சமரசத்துக்கு இடமில்லை

பீஜிங், ஓக. 12

சிக்கிம் - டோக்லாம் விவகாரத்தில் சமரசப் பேச்சுக்கு இடமில்லை என்றும், அங்கிருந்து இந்தியா தனது படைகளைத் திரும்பப் பெறவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது சீனா.




இந்தியா - பூட்டான் சீனா ஆகிய நாடுகளின் எல்லைகள் சந்திக்கும் இடம் சிக்கிம். இந்தப் பகுதியில் உள்ள டோக்லாம் என்ற இடம் தமக்குத்தான் சொந்தம் என்று மூன்று நாடுகளும் வலியுறுத்துகின்றன. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்தப் பகுதியில் சாலை அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்தது சீனா. இந்தியா எதிர்ப்புத் தெரிவித்தது. இந்தியாவின் எதிர்ப்பைக் கண்டுகொள்ளாத சீனா, இந்திய இராணுவத்தின் இரண்டு பதுங்கு குழிகளை அகற்றிவிட்டு சாலை அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்தது. இதையடுத்து ஏராளமான சிப்பாய்களை அங்கு குவித்தது இந்தியா. இந்தப் பின்னணியிலேயே இருநாடுகளுக்கும் இடையில் சிக்கிம் விவகாரத்தில் பதற்றம் தோற்றம் பெற்றது. சிக்கிம் விவகாரத்தில் இந்தியா தனது சிப்பாய்களை திரும்பப் பெறவேண்டும் என்று சீனா பல தடவைகள் வலியுறுத்தி வருகிறது. தற்போது மீண்டும் ஒரு தடவை கருத்துத் தெரிவித்துள்ளது.

இது குறித்து இராணுவ மூத்த அதிகாரி ஸோபோ, ‘சீனா ஆக்கிரமிப்பு’ என்ற வார்த்தையைக் கூட இதுவரை பயன்படுத்தியதில்லை. ‘அத்துமீறல்’, ‘ஊடுருவல்’ போன்ற வார்த்தைகளைத்தான் நாங்கள் பயன்படுத்துகி றோம். இதுதான் சீனாவின் நல்லெண்ணம். டோக்லாம் விவகாரத்தில் நல்லதே நடக்கும் என நம்புகிறோம். இந்த விவகாரத்தில் எந்தவொரு சமரசத்துக்கும் சீன அரசும், இராணுவமும் தயாரில்லை. இருநாட்டு மக்களின் நலன் மற்றும் நல்லுறவை கருத்தில் கொண்டு எந்தவொரு நிபந்தனையுமின்றி இந்தியா படைகளை நிச்சயம் திரும்பப் பெற வேண்டும்” என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# ...ிழக அரசுமீது ...ாத் தீர்மானம்

...ளதால் தமிழகத்தில் அசாதாரண ...கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின், ...பேரவையில் மீண்டும் நம்பிக்கை ...ன்றும் குறிப்பிட்டார்.


...து தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் ...க.ஸ்டாலின் தலைமையில் நடை...றைவேற்றப்பட்டன. இதன் பின்னர் ... குறிப்பிட்டார். (ம)



# ...ாதியது பஸ்: சீனாவில் 36 பேர் சாவு

...ில் உள்ள லுயாங் நகரை நோக்கி ...மார் 50 ஏற்றிக்கொண்டு சென்ற ...பருந்தே அவ்வாறு விபத்துக்குள் ...ானது. ஓட்டுநரின் கட்டுப்பாட்டை ...ழந்தமையே விபத்துக்கான கார...ணம் என்று முதல் கட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. உயிரிழந்தவர்களைத் தவிர 13 பேர் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் சிலரின் நிலை தொடர்பில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் ஆண்டுதோறும் சுமார் 2.6 லட்சம் பேர் சாலை விபத்துகளால் உயிரிழக்கின்றனர் என்று உலக சுகாதார அமைப்பு ... தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ரவியின் பதவி துறப்பு பெருமைக்குரியதன்று

இலங்கைக்கு இது அமைச்சர்கள் பதவி விலகும் காலம் போலும். வடக்கு மாகாண சபையில் மூன்று அமைச்சர்கள் பதவி விலகினார்கள். மற்றையவரை விலக்குகிறேன் பிடி என்று நிற்கிறார் முதலமைச்சர். இப்போது கொழும்பு அரசின் அயலுறவுத்துறை அமைச்சரும் முன்னாள் நிதி அமைச்சருமான ரவி கருணாநாயக்கவும் தனது பதவியை துறந்திருக்கிறார்.

மத்திய வங்கியின் பிணை முறி விவகாரத்தில் தனது பதவியை இழந்திருக்கும் முதலாவது நபர் ரவி. அவர் நிதி அமைச்சராக இருந்த காலத்தில் நடந்த பிணை முறி விற்பனையில் தொடர்புபட்டது என்று கூறப்படும் அலோசியஸ் மகேந்திரனின் நிறுவனத்திடம் இருந்து தான் தங்கியிருந்த அதிசொகுசு வீட்டுக்கான பணத்தைப் பெற்றுக்கொண்டார் என்பதை மறைக்க முடியாமல் போனமை காரணமாகவே ரவி பதவி விலகவேண்டி வந்திருக்கிறது.

அரசியல்வாதி ஒருவருக்கு அந்த வீட்டைக் கொடுக்க உரிமையாளர்கள் மறுத்ததன் காரணத்தால் வங்கியில் தான் கடன் எடுத்த பணத்தை அலோசியஸின் நிறுவனம் ஊடாக அந்த வீட்டுக்குச் செலுத்தினார் என்றும் இந்த விவகாரத்துடன் தனது மனைவியும் மகளும்தான் தொடர்புபட்டிருந்தார்கள் என்பதால் தனக்கு அது பற்றித் தெரியாது என்றும் ரவி கருணாநாயக்க தனது தரப்பு நியாயத்தைத் தெரிவித்திருக்கிறார்.

அவரது நியாயத்தை ஏற்றுக்கொள்வதற்கு யாரும் இல்லாத காரணத்தால் அவர் பதவி விலகவேண்டும் என்ற அழுத்தம் கடுமையாக இருந்தது. பொது அமைப்புகளும் அரசசார்பற்ற நிறுவனங்களும் அவர் பதவி விலகுவது கட்டாயம் என்று வலியுறுத்தின.

ஊழல், மோசடியில் ஊறித் திளைத்திருந்த முன்னைய ஆட்சியை அகற்றி நல்லாட்சியைத் தருவோம் என்ற முழக்கத்துடன் பதவிக்கு வந்த இன்றைய மைத்திரி – ரணில் கூட்டு அரசின் அமைச்சர் ஒருவர் மீது இப்படிப்பட்ட ஊழல் குற்றச்சாட்டு எழுந்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே அந்த அமைப்புகள் முன்வைத்த நியாயமாக இருந்தது.

ரவி கருணாநாயக்க குற்றவாளியோ இல்லையோ தன் மீது குற்றச்சாட்டு ஒன்று ஏற்படும் அளவிற்குக்கூட அவர் நடந்துகொண்டிருக்கக்கூடாது என்பதையே பொது அமைப்புகள் தீவிரமாக வலியுறுத்தி நின்றன. அவர் பதவியில் நீடித்தால் அது இந்த அரசு கூறிவரும் அதன் நல்லாட்சிப் பண்புக்குத் தீங்கு என்று அவர்கள் கருதியதே அதற்குக் காரணம்.

ஆனால், இந்த விடயத்தில் தனக்கு எதிரான நடவடிக்கைகள் அனைத்தும் திட்டமிடப்பட்ட சதி என்று ரவி கூறுகின்றார். மகிந்தவிற்கும் அவரது சகாக்களிக்கும் எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கடந்த இரு வருடங்களில் நடவடிக்கை எடுக்காத சட்டமா அதிபர் திணைக்களம் தன்னுடைய விடயத்தில் மட்டும் விரைந்து செயற்பட்டது என்று குற்றஞ்சாட்டுகிறார். அப்படி அந்தத் திணைக்களம் செயற்பட்டதற்குப் பின்னணியில் தனக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கும் எதிரான சதி இருக்கிறது என்பதே அவரது வாதம்.


எப்படியிருந்தாலும் அவரது பதவியைக் காப்பாற்ற முடியவில்லை. அவர் பதவி விலகியிருப்பது ஒரு முன்மாதிரி நடவடிக்கை என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும் ஒரே குரலில் பாராட்டியிருக்கிறார்கள். முன்னைய அரசின் காலங்களில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மீது இத்தகைய குற்றங்கள் சுமத்தப்பட்டபோது அவர்கள் பதவி விலகியிருக்கவில்லை என்றும் சாடியிருக்கிறார்கள்.

கடந்த ஆட்சியில் அப்படி நடக்கவில்லை என்பது உண்மைதான். அதனால்தான் பெரும்பான்மையான மக்கள் முன்வந்து அந்த ஆட்சியை அகற்றினார்கள். நல்லாட்சி வேண்டும் என்றே இந்த அரசைப் பதவியிலும் அமர்த்தினார்கள். மக்களின் எதிர்பார்ப்புகளைச் சிதைக்கும் வகையில் ஊழல் குற்றச்சாட்டுக்களில் சிக்கிக்கொண்டுவிட்டு, பதவி விலகல் ஒரு முன்மாதிரி என்று பெருமைப்பட்டுக்கொள்வதற்கு எதுவும் இல்லை. இனிவரும் காலங்களிலாவது ஊழல் அற்ற ஆட்சியை வழங்க அரசு திட சங்கற்பம் பூண வேண்டும்.



கட்டுரை

# நாளைய உலகம் இளையோர் கைகளில்



ஐ.நா. சபையால் ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி பன்னாட்டு இளைஞர் தினமாக அறிவிக்கப்பட்டு 1999ஆம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதனையொட்டி இந்த ஆக்கம் பதிப்பாகிறது.

மு.ஈழத்தமிழ்மணி

நாளைய உலகம் உங்கள் கைகளில்; நீங்களே எதிர்கால நட்சத்திரங்கள். இந்த நாட்டின் எதிர்காலத் தலைவர்கள் இளைஞர்களே. நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளமிடக் கூடிய சக்தி படைத்த இளைஞர்களின் ஆற்றல்கள், திறமைகள் அளப்பரியவை; ஆண்களும். பெண்களும் இன்று சகல துறைகளிலும் சரிநிகர் சமானமாகச் சாதனைகள் படைத்து வருகின்றனர்.

ஒரு நாட்டின் எதிர்காலமே இளைஞர்கள் கைகளில் தான் உள்ளது. இளைஞர்களின் வளர்ச்சிக்கு ஏற்பவே நாட்டின் வளர்ச்சியும் அமைகிறது. இத்தகைய வலிமை படைத்த இளைஞர்களை ஒவ்வொரு அரசுகளும் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்த வலியுறுத்தும் விதமாக ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி பன்னாட்டு இளைஞர்கள் தினமாக ஐக்கிய நாடுகள் சபையினால் அறிவிக்கப்பட்டு 1999 ஆம் ஆண்டு முதல் இளைஞர்கள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

15 வயது தொடக்கம் 24 வயதுக்குட்பட்டவர்களை இளைஞர்கள் என ஐக்கியநாடுகள் சபை வரையறுத்துள்ளது. உலக மொத்த சனத்தொகையில் ஆறில் ஒரு பங்கினர் இளைஞர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பின்மை இளைஞர்களுக்கு பிரச்சினைக்கு காரணமாகிறது**

இளைஞர்கள் மத்தியில் இன்றுகாணப்படுகின்ற மிக முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக வேலையில்லாப் பிரச்சினையே உலக நாடுகள் அனைத்திலும் தலைதூக்கியிருக்கின்றது.

தாங்கள் கற்ற கல்வித் தகுதிக்கேற்ற வேலைவாய்ப்புக் கிட்டாமை, இளைஞர்களை விரக்திக்கு உள்ளாக்கி வேலைவாய்ப்புக் கோரிப் போராட்டம் நடத்தும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

**இன்றைய பல இளைஞர்கள் தீயவழிகளிலும், தப்பான எண்ணங்களோடும் தங்களது கனவுலக வாழ்க்கையில் மிதக்கின்றனர். கொலை, களவு, திருட்டுப் போன்ற குற்றங்களுக்கும் ஆளாகியிருக்கின்றனர். உலகின் பல்வேறு நாடுகளிலும் இளைஞர்கள் மத்தியில் வன்முறைப்போக்கு அதிகரித்துச்செல்வதை ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.**

இலங்கை அரசுக்கு இது வோர் தலைவலியாக இருந்துவருகின்றது.

வேலைவாய்ப்பற்றவர்கள் என்ற அடை மொழிக்குள் உள்ளடக்கப்படும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வேலை தேடி அலைகின்றனர்.

தேசியரீதியில் சமூகத்துக்காகவும், வீட்டுக்காகவும் உள்ள பங்களிப்பானது இளைஞர்களுக்கு இன்றியமையாதது.

எதையும் சாதிக்க வேண்டும்; சமூகத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டும் என்ற துடிப்புணர்வு, அக்கறை இளைஞர்களிடம் இருக்கவேண்டும். எத்தனையோ இளைஞர்கள் இன்று இத்தகைய குறிக்கோள்களுடன் வாழுகின்றனர்.

அதே வேளை வேறு பல இளைஞர்கள் குறிக்கோள்களைத் தூக்கியெறிந்து விட்டுத் தங்கள் விருப்பம்போல் வாழுகின்றனர்.

முன்மாதிரியாக சமூகத்தில் இளைஞர்கள் விளங்க வேண்டும் எனில், அவர்கள் மத்தியில் நல்லொழுக்கத்திலும் நடத்தைகளிலும் கவனமிருக்க வேண்டும்.

பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றிலும் இளைஞர்களுக்குரிய பங்களிப்பு இன்று மேன்மை நிலையில் இல்லாதிருப்பது கவலைக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இன்றைய இளைஞர்களில் ஒரு தரப்பினர் வன்முறையாளர்களே

இளைஞர் தினத்தைக் கடைப்பிடிக்குமாறு ஐ.நா சபை அறிவித்திருப்பினும், உலகளாவிய ரீதியில் ஆறில் ஒருபங்கினர் இளைஞர்கள் எனக் கணக்கிடப்பட்டிருப்பினும், இவர்களில் ஒரு தரப்பினர் தீவிர வன் முறையாளர்களாகவும், போதைவஸ்துக்கு அடிமையானவர்களாகவும், புகைத்தல் வழக்கத்தைக் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர்.

இன்றைய பல இளைஞர்கள் தீய வழிகளிலும், தப்பான எண்ணங்களோடும் தங்களது கனவுலக வாழ்க்கையில் மிதக்கின்ழனர். கொலை, களவு, திருட்டுப் போன்ற குற்றங்களுக்கும் ஆளாகியிருக்கின்றனர். உலகின்பல்வேறுநாடுகளிலும் இளைஞர்கள் மத்தியில் வன்முறைப்போக்கு அதிகரித்துச் செல்வதை ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. அதேவேளை, பல இளைஞர்கள் தங்களது அறிவுத்திறனைப் பயன்படுத்தி போட்டி போட்டுக்கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். புதியபுதிய கண்டுபிடிப்புக்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர். இலட்சியங்கள், குறிக்கோள், சமூகச் சிந்தனை, தொழிற்துறைக் கல்வியோடு தங்களது முயற்சிகளை உயர்த்திக்கொள்வது என்பதற்கமைய விஞ்ஞானம் வளர்ச்சி கண்டுள்ள இருபத்தியோராம் நூற்றாண்டில் வெற்றிக்கொடி நாட்டும் செயற்திட்டங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்.

### இளைஞர்கள் அளப்பரிய ஆற்றல் படைத்தவர்கள்

இளைஞர்களின் ஆற்றல் அளவிட முடியாதது. இன்றைய இளைஞர்கள் எதையும் புரிந்துகொள்ளும் திறமைமிக்கவர்கள். புதியபுதிய விடயங்களைக் கற்றுக்கொள்வதிலும், ஆராய்வதிலும் மிக்க ஈடுபாடு கொண்டவர்கள்.

விஞ்ஞானக் கல்வியறிவில் முன்னேற்றம் கொண்ட தங்களுக்கான கல்வித்துறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதில் போட்டியாளர்களாக இருக்கின்றனர்.

கணினித் தொழில்நுட்ப யுகத்தில் இன்றைய உலகத்தின் பார்வை இறுக்கமடைந்து விட்டதாலும் கணினித் தொழில் நுட்பத்தில் தேர்ச்சி பெற்று விட்டதாலும், உலகில் எந்தவொரு நாட்டிலும் தொழில் செய்யக்கூடிய திறமைபடைத்த இளைஞர்கள் உலகம் முழுவதில் பல்லாயிரக்கணக்கானோர் உருவாகி வருகின்றனர்.

தமக்குரிய அந்தஸ்தும் அங்கீகாரமும் கிடைக்கப் பெறாத நிலையில் இளைஞர்கள், இன்றைய அரசியலோடும், சமயத்துடனும் நேர் எதிர்மறையான கருத்துக்களோடு போட்டி போடமுனைகின்றனர். சிலநாட்டு அரசுகள்கூட இளைஞர்களை வன்செயல்களிலும் தீவிர வாதத்திலும் ஈடுபடுகின்ற நிலைக்குத் தள்ளிவிடுகின்றனர்.

உலக நடைமுறைகளிலுள்ள அரசியல் மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புக்கள், பெருமளவில் இளைஞர்களை தொழில்களில் உள்வாங்கக் கூடியவாறு உருவாக்கப் படவில்லை. பொறுத்துக் கொள்ளல், தாங்கிக்கொள்ளல், சகிப்புத் தன்மை, என்பவற்றால் பயனில்லை என்று உணரும்போது, இளைஞர்கள் பயங்கரவாதமே தமக்கான பாதை என்று தேர்ந்தெடுக்கின்றனர்.

அதேசமயம் ஒடுக்க முறைகளுக்கு எதிராகக் கிளந்தெழும் இளைஞர்களை ஒடுக்குதல் செயற்பாடுகளும் பெரும்பாலான நாடுகளில் இடம்பெற்று வருகின்றன. இலங்கையில் வாழுகின்ற மூவினத்தைச் சேர்ந்த படித்த இளைஞர்களின் பிரச்சினைகள் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளன. 1971ஆம் ஆண்டு சிறிமாவோ அரசினாலும், 1989ஆம் ஆண்டு பிரேமதாச அரசினாலும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் அரசியல் ரீதியில் ஒடுக்குமுறைக்குள்ளானார்கள். ஐம்பது ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் படுகொலைசெய்யப்பட்டிருந்தனர்.

### இளைஞர் எழுச்சிகளை ஒடுக்கும் அரசுகள்

அரசுகள் தமது மேலாதிக்க இராணுவபலத்தால் இளைஞர் எழுச்சிகளை அழித்திருந்தன. 1999 ஆம் ஆண்டுக்கு முன்னர் சிங்கள இளைஞர்கள் இந்த நிலைக்குள்ளான வரலாறுண்டு. 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ் இளைஞர்கள் மீதான உயர்கல்வி பாதிக்கப்பட்டு வீதியில் இறங்கிப் போராடிய எழுச்சி, பின்னர் ஆயுதப் போராட்டமாக மாறியதுடன் 30 ஆண்டுகள் பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் ஒடுக்குமுறைக்கும், இனத்தின் உரிமைக்காகவும் போராடிய வரலாற்றுக்கு மத்தியில், இளைஞர் தினம் கடைப்பிடிக்கப்படுவதானது பல்வேறு சிந்தனைகளைத் தோற்றுவிக்கின்றது.

இன்று எமது இளைஞர்கள் போதைவஸ்துக்கு அடிமையாதல், கொலை, கொள்ளை, வாள்வெட்டு, பெரியோர்களை மதியாமை, பாலியல் வன்கொடுமை, வழிப்பறி, திருட்டுக்கள் என இளைஞர்கள் குழுக்களாக இயங்கி சமூகக் கட்டமைப்பைச் சீரழித்து வருகின்றனர். இதற்கான பலமான பின்தளம் மறைமுகமாக இன்றுவரை இயங்கி வருகின்றது..

கல்வியையும், வாழ்க்கையையும் அழித்துக்கொண்டு தமது சட்டவிரோத நடவடிக்கைகளால் எமது இளைஞர்களில் பலர், சிறைச்சாலைகளில் காலம் கழிக்கவும் நேர்ந்துள்ளது எமது தமிழ்ச் சமூகம் வெட்கித் தலைகுனிகின்ற அவலநிலையை சில இளைஞர் குழுக்கள் உருவாக்கியிருக்கின்றன.

30 வருடகாலத்தில் சிங்கள அரசுக்களுக்கு எதிராக தாயக மண்ணை மீட்பதற்காக பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் தங்களது சுகபோகங்களை மறந்து இளமைக்காலத்தை துறந்து தமிழின விடுதலைக்காக உழைத்தனர்.


அதுமட்டுமன்றி இளையோர்கள் அலைபேசிப் பாவனை, தொலைக்காட்சிப் பாவனை இணையத்தளத்தின் மீதான அதீதபாவனை, புகைத்தல், மதுபாவனை என்பவற்றுக்கு அடிமையாகியுள்ளதனால், குறிப்பாக கலாசாரம், பண்பாட்டின் குறியீடான யாழ்ப்பாணத்தில் இளைஞர்களது செயற்பாடுகள் எல்லைமீறிப்போயிருக்கின்றன.

தமிழர் அரசியலில் இளைஞர்கள் பெருமளவில் இணைந்திராமையும், உள்வாங்கப்படாததும் பெரும் குறைபாடாகும். சமூக அமைப்புக்களிலும் இளைஞர்களின் பங்களிப்புக்கள், செயற்பாடுகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு இல்லை என்றே கூறவேண்டும்.

இளைஞர் தினமான இன்றைய நாளில் எமது தமிழ் இளைஞர்களை நல்வழிப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளில் நாம் ஈடுபட உறுதி எடுத்துக் கொள்வோம். ஒவ்வொரு அரசியல் கட்சிகளிலும் தங்களது அரசியலுக்காக இளைஞர் அணி என்ற அடைப்புக் குறியுடன் இளைஞர்களைக் கூடவே வைத்துக் கொண்டுள்ளனர்.

பரந்துபட்ட அளவில் உள்ள இளைஞர்களின் செயற்பாடுகள் அரசியல், சமயம், சமூகம், பொதுவுடமை, மொழி என்பவற்றுள் உள்ளடக்கப்பட்டு, இன்றைய தமிழ் அரசியற் கட்சிகள் இளைஞர்களை உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

இளைஞர்களைத் தூர விலத்தி வைத்துள்ளமை தமிழ்க் கட்சிகளில் உள்ள குறைபாடு என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு அவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இன்றைய இளைஞர்கள் அவர்களது தீய நடவடிக்கைகளிலிருந்து மீட்கப்பட வேண்டும். பண்பட்ட, பண்பாடுள்ள இளைஞர்களாக அவர்கள் உருவாக்கப்பட்டு ஆளுமை மிக்கவர்களாக சமூகத்தில் மிளிர வேண்டும். இது இன்றைய காலத்தின் தேவை.





## ஆசிரியருக்கான கடிதம்

### பாராட்டுக்கள் கலைஞர்களுக்கு ஊக்க மருந்து

யாழ்.குடாநாட்டில் இந்த நாள்களில் சைவ ஆலயங்களில் வருடாந்த உற்சவங்கள் சிறப்புற இடம்பெற்று வருகின்றன. இன்னும் இருமாதங்கள் வரை சிறிய பெரிய கோயில்களில் திருவிழாக்களும் நிறைவில் கலைநிகழ்வுகள், இசைக்கச்சேரிகள் என்பன களைகட்டும்.

இன்று சமூக நிகழ்வுகளில் மக்கள் கூடுவதென்பது மிக குறைந்து விட்டது. பாராட்டு விழாக்கள் அரங்கேற்றம் என்பவற்றில் கூட சொற்ப மாணவர்களே கலந்து கொள்கின்றனர்.

வீட்டைவிட்டு எல்லோரும் வெளிச்செல்வது திருடர்களுக்கு வாய்ப்பாக அமைந்துவிடுகின்றது என்ற நியாயமான காரணத்துக்கு அப்பால் தொலைக்காட்சித் தொடர் மக்களை கட்டிப் போட்டுள்ளது. என்பதுதான் உண்மை இதனால் நல்ல நிகழ்வு களில்கூட மக்கள் கூடுவது குறைந்துவிட்டது.

எனவே மக்கள் கூடும் ஆலயத் திருவிழாக்களைப் பயன் உள்ள செயற்பாடுகளாக ஆக்க இரவு நிகழ்ச்சிகளுக்கு மத்தியில் சிறு நேரத்தை ஒதுக்கி உள்ளூர்க் கலைஞர்களை கற்கையில் சாதனைபுரிந்த மாணவர்களை மற்றும் இளைஞர்களைக் கூட நல்வழிப்படுத்தும் நோக்கில் பாராட்டி ஊக்குவிக்கும் வகையில் மக்கள் மத்தியில் சிறப்பிக்க ஆலய நிர்வாகத்தினரும் விழா உபயகாரர்களும் முன்வர வேண்டும்.

கலைஞர்கள் பணத்தை பரிசை விட நாட்டையும் கௌரவிப்பையுமே அதிகம் விரும்புகிறார்கள். இளைஞர்கள் வழி தவறிச்செல்வதை தடுக்கவும் தலைமைத்துவப் பண்பை அவர்கள் மத்தியில் வளர்க்கவும் இத்தகைய முயற்சிகள் உதவக்கூடும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் நிர்வாகச் செயற்பாட்டை இதற்கு முன்னுதாரணமாகக் கொள்ளலாமே?


நா. துஷாந்
வரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## கட்டட நிர்மாணிப்பாளர் சங்கத்தின் வருடாந்த நிகழ்வு



பதுளை மாவட்ட கட்டட நிர்மாணிப்பாளர் சங்கத்தின் வருடாந்த நிகழ்வுகள் பதுளை கெரிடெஜ் உல்லாசவிடுதியில் அண்மையில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் சிறந்த கட்டட நிர்மாணிப்பாளர்களுக்கு விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன. மேற்படி நிகழ்வின் முதன்மை விருந்தினராக ஊவாமாகாண சபை முதலமைச்சர் சாமரசம்பத் தசநாயக்க கலந்துகொண்டார். (ஒ -10,47)

# பன்னாடுகளின் முதலீட்டை ஊக்குவிப்பதே அரசின் நோக்கம்

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



நாட்டின் இறையாண்மையை பாதிக்காதபடி பன்னாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதே அரசின் முக்கிய நோக்காகக் காணப்படுகிறது என்ற தகவலை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளிப்படுத்தியுள்ளார்.
குறிப்பாக ஒரு நாட்டில் முதலீட்டு ஒப்பந்தம் நிறை வேற்றப்படும் பொழுது நாட்டின் நிலப்பகுதிக்கு எந்தவொரு உரிமையும் வழங்கப்படாது. முதலீடு என்பது தனித்து தேவைகளை நிறைவேற்றுவதற்கு மாத்திரமே என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவின் 60 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே இந்த விடயங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
"கடந்த இரண்டரை வருட காலப் பகுதியில் நாட்டில் இருந்த கடன்களைக் குறைக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் பயனுள்ள விளைவுகளைத் தந்துள்ளது. அதனை அவதானிக்க முடிகிறது. கடந்த இருபது ஆண்டுகளில் சீன இலங்கை இடையேயான உறவுகள் உறுதியாக இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.
குறித்த உறவை மேலும் பலம் வாய்ந்ததாக கட்டமைத்துக் கொள்ள அரசு கடமைப்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகளை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வோம்" - என மேலும் தெரிவித்தார். (ஒ)

## மே மாத காலப்பகுதியில் அனைத்து வெளியார்ந்த செயலாற்றுகைகளின் நிதிப்பெறுமான அமைவு

| வகைப்பாடு | மே 2016 (யு.எஸ்.டொலர் மில்லியன்) | மே 2017 (யு.எஸ்.டொலர் மில்லியன்) | மாற்றம் (%) | ஜன-மே 2016 (யு.எஸ்.டொலர் மில்லியன்) | ஜன-மே 2017 (யு.எஸ்.டொலர் மில்லியன்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதி | 780.1 (b) | 841.2 | 7.8 | 4,229.7 (b) | 4,410.2 | 4.3 |
| இறக்குமதி | 1,589.8 | 1,726.8 | 8.6 | 7,645.2 | 8,610.1 | 12.6 |
| வணிக இருப்பு (நிகர) | -809.7 (b) | -885.6 | - | -3,415.5(b) | -4,199.9 | - |
| சுற்றுலாத்துறை வருமானம் | 214.5 (b) | 209.1 | -2.5 | 1,451.8(b) | 1,521.9 | 4.8 |
| ஊழியர்களுக்கான பணச் செலுத்துகை | 597.2 | 575.4 | -3.7 | 2,968.6 | 2,797.0 | -5.8 |
| பங்குப்ப ரிவர்த்தனைக்கான உள்ளீடு (நிகர) (c) | -17.8 | 34.7 | - | -37.3 | 191.1 | - |
| அரசுக்கான உள்ளீடு (d) | 300.2(b) | 2,252.0 | 650.2 | 837.6(b) | 3,040.3 | 263.0 |
| திறைசேரி உண்டியல் மற்றும் முறி | 189.7 | 186.8 | -1.6 | 407.4 | 572.0 | 40.4 |
| பன்னாட்டுத் தனியுரிமை முறிகள் | - | 1,500.0 | - | - | 1,500.0 | - |
| வணிக மன்றக் கடனளிப்பு | - | 450.0 | - | - | 450.0 | - |
| நீண்டகால கடனளிப்பு | 109.8 (b) | 115.2 | 5.0 | 419.4(b) | 510.4 | 21.7 |
| பன்னாடுகளின் நேரடித் தன்மை வாய்ந்த முதலீடு (e) | - | - | - | 129.4 | 146.5 | 13.2 |

நடப்பாண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரையான காலப்பகுதி, கடந்த ஆண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரையான காலப்பகுதி மற்றும் தனித்து கடந்த ஆண்டின் மே மாத காலப் பகுதி, நடப்பாண்டின் மே மாத காலப்பகுதி வரையான அனைத்து வெளியார்ந்த செயலாற்றுகைகளின் நிதிப் பெறுமான அமைவுகள் பின்வருமாறு அமைந்துள்ளது என்ற தகவலை மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வு மையம் வெளிப்படுத்தியுள்ளது. இதனை வெளியார்ந்த ஆய்வு அறிக்கையிடலாக மத்திய வங்கி தந்துள்ளது.
தேயிலை, மசாலா, பெற்றோலியம் பொருள்கள் மற்றும் கடல் உணவுப் பொருள்களின் ஏற்றுமதியால் அதிக வருவாய் கிடைத்துள்ளது. நடப்பாண்டின் முதல் ஐந்து மாதங்களில் பன்னாடுகளின் நேரடித் தன்மை வாய்ந்த முதலீட்டு செயற்பாடுகள் மூலமான வருவாய் ஆண்டு அடிப்படையில் 13.2 வீதமாக அமைந்துள்ளது. வருமான ஈட்டமானது 146.5 மில்லியன் அமெரிக்க டொல்களாக பதிவாகியுள்ளது.
இதே காலப்பகுதியில் சுற்றுலாத்துறை மூலமான வருவாய் ஆண்டு அடிப்படையில் 4.8 வீதமாக அமைந்துள்ளது. வருமான ஈட்டமானது ஆயிரத்து 521.9 மில்லியன் அமெரிக்க டொல்களாக பதிவாகியுள்ளது.
தகவல் மூலம் : இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை
(a - தற்காலிக மதிப்பீடு. b - திருத்திய மதிப்பீடு) (ஒ)



# கொமர்ஷல் வங்கியுடன் இணைந்து ஐ.எவ்.சி இலங்கைக்கு நிதி உதவி

100 மில்லியன் தொகை மதிப்பை வழங்கத் தீர்மானம்

உலக வங்கிக் குழுவின் உறுப்பினரான ஐ.எவ்.சி (IFC) கொமர்ஷல் வங்கியுடன் இணைந்து 100 மில்லியன் தொகை மதிப்பீடுடையதான நிதியுதவியை இலங்கைக்கு வழங்கவுள்ளது.
இதன்படி குறித்த நிதி உதவிச் செயற்றிட்டமானது இலங்கையில் உள்ள புதுப்பிக்கத்தக்க திட்டங்களான அபிவிருத்திக்காக வழங்கப்படவுள்ளதுடன் இலங்கைக்கு கிடைக்கப்பெறவுள்ள மிகப்பெரிய தொகையாகவும் இது அமைந்துள்ளது.
இது குறித்துக் கருத்துரைத்துள்ள கொமர்ஷல் வங்கியின் நிர்வாக அதிகாரி ஜெகன் துரைரட்ணம், "வாடிக்கையாளர்களுக்கான நிதியுதவி காலநிலை மாற்றத்துக்கான அபாயங்களை தடுக்கவும், தூய்மையான பங்களிப்புக்கும் உதவுவதாக அமையும். உலக வங்கிக் குழுவின் உறுப்பினரான ஐ.எவ்.சி கொமர்ஷல் வங்கிக்கு நீண்ட கால ஆலோசனை மற்றும் முதலீட்டுப் பங்காளியாக செயற்பட்டு வருகிறது. நாட்டில் நிலைபேறான வளர்ச்சியை ஒரு மித்த இலக்குடன் கொண்டு செல்வதற்கு பெரிதும் உதவுகிறது. அதேபோன்று இலங்கையின் நிதியியல் துறையானது ஒரு தொடர்ச்சியான நிதித் திட்டமொன்றை அபிவிருத்தி செய்வதற்கான கரணியாக அமைய வேண்டும்" - என்றார். (ஒ)

CSE
COLOMBO STOCK EXCHANGE
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455
11/8/2017
www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -23.63 | 6,492.69 | 6,516.32 |
| S&P SL20 | -13.73 | 3,724.21 | 3,737.94 |
| வியாபாரப்புரள்வு | | 395,979,552 | 306,587,93C |
| உள்நாடு- கொள்வனவு | | 195,194,112 | 165,239,616 |
| விற்பனை | | 200,148,864 | 263,691,920 |
| வெளிநாடு- கொள்வனவு | | 200,785,440 | 141,348,336 |
| விற்பனை | | 195,830,688 | 42,896,028 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 163.00 | 1,112,224 | 181,311,098 |
| சேவ்ரோன் லூப்ரிக்கன் | LLUB.N | 134.50 | 205,944 | 29,300,512 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.N | 71.50 | 304,328 | 22,158,092 |
| பலாங்கொட பெருந்தோட்டம் | BALA.N | 21.80 | 821,806 | 17,339,406 |
| சம்பத் வங்கி | SAMP.N | 282.50 | 37,408 | 10,649,475 |
| ரிச்சட் பீறிஸ் | RICH.N | 12.00 | 641,306 | 7,844,842 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.X | 190.00 | 40,282 | 7,653,580 |
| மடுள்சமா பெருந்தோட்டம் | MADU.N | 10.90 | 672,673 | 6,944,550 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 231.00 | 30,005 | 6,931,160 |
| ரெக்ஸ்யேட் பெர்ஷீ | TJL.N | 40.50 | 167,429 | 6,812,481 |

சம்பத் வங்கி Right issue 1 for 6 @ Rs.245
பங்குலாபம்
[illegible] - ரூபா 1.65 சதம்
சேவ்ரோன் லூப்ரிக்கன் - ரூபா 2.00

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 250 |
| விலை உழைப்பு | 10.05 |
| புத்தகப்பெறுமதி | 1.4 |
| பங்குலாப விலை | 3.1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா

# மானுடம் சிறப்புற சிந்தனை கொள்ளுங்கள்

## பெண்களை வலுவூட்டுவதான சமூகப் பொறுப்பு



1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி பீஜிங் மாநகரில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் உலக பெண்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முக்கியமான முடிவானது பன்னிரண்டு விடயப்பரப்புக் களை வலுவூட்டியுள்ளது. அதில் பெண்களின் சாதக, பாதக மேதகு விடயங்கள் நன்றாக ஆராயப்பட்டிருந்தன. பாதக நிலமைகள் சுட்டிக்காட்டப்பட்டு அதிலிருந்து மீண்டெழுவதற்கான உபாயங்கள் வலுவூட்டப்பட்டன. அந்தவகையிலே மானுடத்தை வலுப்படுத்திவிட ஐ.நா எடுத்த முயற்சி அனைத்து நாட்டுப் பெண்களிடையேயும் விழிப்புணர்வினை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகு நிலை என்பது பெண்களுக்குக் கிடைத்த வெற்றி என்றே கூற வேண்டும். நாளும் பொழுதும் உலகமானது பெண்களுக்காக இரங்கி இறங்கி வருவதான பண்பு மேலோங்கி நிற்கிறது. அதனைப் பார்க்கும் போது ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோரிக்கை ஒரு காலத்தில் வெல்லப்படலாம் என்றே தோன்றுகிறது.

**பெண் சமத்துவம்**

இற்றைக்கு இருபத்தியிரண்டு வருடங்களுக்கு முன்னதாகவே பெண்கள் மாண்புடன் வாழ வேண்டுமென்ற தூரநோக்கு ஐக்கிய நாடுகள் சபையிலே ஒருமித்த குரலாக ஒலித்தமை நோக்குதற்குரியது. குறிப்பாக நூற்றித் தொண்ணூறுக்கும் மேற்பட்டதான நாடுகளும் பெண்கள் சமத்துவமாக வாழ வேண்டும் என்ற நோக்கின் பால் இரங்கின என்றே சொல்லலாம்.

*"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்*
*பரந்து கெடுக உலகியற்றியான்"*

எந்த உயிரும் எதற்காகவும் இரந்து வாழ்தல் ஆகவே ஆகாது. அப்படி வாழ்ந்தால் அவற்றைப் படைத்த இறைவனே சும்மா



அல்ல பரந்து கெடுக என்று வள்ளுவம் அடித்துக் கூறுகிறது. இந்நிலையில் பெண்கள் அனுபவிக்கின்ற துன்பம் தொடர்பாகக் கவனம் செலுத்தி விடுதலை அளிப்பது காலத்தின் கடமையாகும். அந்தப் பன்னிரண்டு விடயப்பரப்புக்கள் தொடர்பாக நோக்குதல் நன்று.

**கருதுகோள்கள்**

1. **பெண்களும் வறுமையும்**
வெளியில் சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் அதிகரித்துச் செல்லும் பொருளாதார வறுமையால் ஏற்படும் இடர் நிலை. இவை அதிகம் உண்டு என்றே கூறலாம்.
2. **பெண்களின் கல்வி மற்றும் பயிற்சி**
சமத்துவமற்ற அணுகுமுறைகளும் பற்றாக்குறைகளும். இவை உண்டு என்றே கூறலாம்.
3. **பெண்களும் சுகாதாரமும்**
பராமரிப்பும், சேவைகளும், போதுமானதாக இல்லாத தேவைகள். இவை அதிகம் உண்டு என்றே கூறலாம்.
4. **பெண்களுக்கெதிரான வன்முறை**
வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ நடைபெறுகின்ற வன்முறைகளுக்கு எதிராகப் போராட வேண்டிய உறுதியான நடவடிக்கைகள் வேண்டப்படும் நிலை.
5. **பெண்களும் ஆயுதமோதலும்**
ஆக்கிரமிப்புக்களும் அத்துமீறலும் மற்றும் பலாத்காரமும், அடிமைப்படுத்தலும் பரவலடையாது அவற்றை தடுத்தலில் முகங்கொடுத்தல்.
6. **பெண்களும் பொருளாதாரமும்**
சமத்துவமற்ற வேதன முரண்பாடு, பாரபட்சமான பொருளாதாரப்பளு, கவனிக்கப்படாத கடின உழைப்பு, பின்தங்கிய சேமிப்புக்கள், ஊக்கமளிக்கப்படாத தொழில் முயற்சிகள், ஓய்வூதியத்திற்கு உதவாத தனிப்பட்ட சுயதொழில்களுடன் போராட வேண்டியநிலை.
7. **அதிகாரம் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளலில் பெண்கள்**
பின்தள்ளப்படும் அபாயநிலையும், முரண்பாடுகளும், பேதங்களும் நிலவுதல்.
8. **பெண்களின் முன்னேற்றத்துக்கான பொறிமுறை காணப்படாமை**
உரிய பொறிமுறை இயங்காமை
9. **பெண்களும் மனித உரிமைகளும்**
போதிய பாதுகாப்பின்மையும், மேம்பாடு அடைவதற்கு நிலவும் பற்றாக்குறையும்.
10. **பெண்களும் ஊடகமும்**
முன்னேற இடமுண்டு. அதேநேரம் வாய்ப்பும் உண்டு. பயன்படுத்துவதில் நிலவும் பெண்களின் தயக்கம். நோக்குதற்குரியது.
11. **பெண்களும் சுற்றாடலும்**
இயற்கை வளங்களை முகாமை செய்வதில் பால்நிலை வேறுபாடும், ஊதிய ஏற்றத்தாழ்வும் செலுத்தும் ஆதிக்கம்.
12. **பெண்பிள்ளை**
வீடு தொடக்கம் நாடுவரை ஏற்பட்டுள்ள பாரபட்சம் பாலியல் ரீதியாகச் சேதாரம் விளைவித்து தப்பித்துக் கொள்ளும் ஆணாதிக்க நடைமுறையில் சமூகப் பாதுகாப்பு

**சமூகப் பொறுப்பு**

ஆக, மேற்போந்த பன்னிரண்டு பிரகடனங்களும் பெண்கள் பாதுகப்பாகவும், ஆரோக்கியமாகவும் உரிமையோடும் நிம்மதியாகவும் வாழ்வதற்கு வேண்டிய அடையாளங்களும் விடைகாணப்பட வேண்டிய சுட்டிகளாக அமைந்துள்ளன. மேலும் சமூகமானது பெண்கள் விடயத்தில் தூரமாக ஒதுங்கி நிற்பதான கருத்து ஒரு சிலரால்

> இற்றைக்கு இருபத்தியிரண்டு வருடங்களுக்கு முன்னதாகவே பெண்கள் மாண்புடன் வாழ வேண்டுமென்ற தூரநோக்கு ஐக்கிய நாடுகள் சபையிலே ஒலித்தமை நோக்குதற்குரியது. குறிப்பாக நூற்றித் தொண்ணூறுக்கும் மேற்பட்டதான நாடுகளும் பெண்கள் சமத்துவமாக வாழ வேண்டும் என்ற நோக்கின்பால் இரங்கின என்றே சொல்லலாம்.

எண்ணப்பாடாகக் காணப்படுகிறது. உண்மையில் சட்டம் பெண்களுக்கு இருபத்தி நான்கு மணிநேரமும் பாதுகாப்புக் கொடுத்தல் என்பது எப்படிச் சாத்தியப்படும் என்ற வினாவுக்கு ஏற்ற விடை காணல் இப்போதைக்கு இல்லை என்று தான் கூறமுடியும். இந்தச் செயல்நிலைகள் சரிதானா..? பெண்களை வலுவூட்டி மானுடத்தை வலுப்படுத்துவதே எமக்குள்ள சமூகப் பொறுப்பாகும். பெண்கள் நாட்டின் கண்கள். புரிந்து கொள்வோம். அதன், வழி நடந்திடச் சிந்தனைகளை ஒருமுகமாய் பணிந்து கொள்வோம்.

முறிகண்டி லக்சிதரன்

# விபத்து

## உயிர்பறிக்கும் பேராபத்து



விபத்து என்பது எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத இடத்தில், கணப்பொழுதில் நிகழ்ந்து விடுவதான காரண காரியமாக அமைந்துள்ளது.

மனித உயிர்களைக் காவு கொள்கின்ற புதியதொரு பரிணாம வடிவமாய் வளர்ச்சி கண்டுள்ளது. அன்றாடம் நிகழும் விபத்துக்கள் இதனை மெய்ப்பித்திருக்கின்றன.

ஓய்தலின்றி ஏதோ ஒரு இடம் நோக்கியதாய் விபத்துக்கள் நகர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இழப்புகளை ஏற்படுத்தியும் விடுகின்றன.

இலங்கையில் நான்கரை மணித்தியாலங்களுக்கு ஒரு விபத்து என்ற வீதத்தில் இடம் பெறுவதாக சுகாதார அமைச்சின் அறிக்கை ஒன்று கூறுகின்றது. மோட்டார் வாகன விபத்துக்களே அதிகம் இடம்பெறுவதாகவும், விபத்துக்கு முக்கிய காரணமாக "வேகத்தை கட்டுப்படுத்த முடியாமை" என்ற வியாக்கியானங்களே அதிகம் சொல்லப்படுவதாகவும் அவ் அறிக்கை மேலும் குறிப்பிடுகின்றது.

**வீதி விபத்துக்கான காரணங்கள்**

- வீதிப் போக்குவரத்து விதிகளை சாரதிகள் சரியான முறையில் அறியாமை.
- கவனயீனமாக அல்லது குழப்பமான மன நிலையில் வாகனங்களைச் செலுத்துதல்.
- வீதிகளில் ஓட்டத் தகுதியற்ற வாகனங்கள்.
- அதிக வேகத்தில் வாகனங்களை செலுத்துதல்.
- பாதுக்காப்பான இடைவெளியில் வாகனங்களை செலுத்தாமை.
- பாதுகாப்பான முறையில் வாகனங்களை முந்திச் செல்லாமை.
- போட்டித் தன்மையோடு வாகனங்களைச் செலுத்துவது.
- இதற்கு முன் விபத்துக்களை சந்திக்கவில்லை என்ற மனநிலையோடு வாகனத்தைச் செலுத்துதல்.
- வாகனத்தில் அதிக சுமையினை ஏற்றுவது.
- பாதசாதரிகள் மஞ்சள் கோட்டில் கடக்காமை. அதாவது கவனயீனம், அவசரம், இலகுவாய், வேகமாய் வீதியை கடக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருத்தல்.
- சாரதி அனுமதி பத்திரம் பெறுவதில் காணப்படும் முறைகேடுகள்.
- மதுபோதையில்வாகனங்களைசெலுத்துதல்.
- அலைபேசியில் கதைத்தபடி வாகனங்களை செலுத்துதல்.
- சில நேரங்களில் போக்குவரத்து பொலிஸார் இலஞ்சம் வாங்கி கொண்டு குற்றவாளிகளை தப்பிக்க விடுவதால் மீண்டும் இவ்வாறான விபத்துக்கள் இடம்பெற வாய்ப்புக்கள் உண்டு.
- இலங்கையில் காணப்படும் கட்டுபாடற்ற வாகன இறக்குமதி காரணமாக வாகனப் பாவனையும், நுகர்வும் அதிகரித்தமை.

**வீதி விபத்துகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள்**

- கடுமையான வீதிப் போக்குவரத்துச் சட்டங்களைநடைமுறைப்படுத்துதல்.
- பாடசாலை மட்டத்திலிருந்தே வீதிப் போக்குவரத்துச் சார்ந்த விழிப்புணர்வு வேலைதிட்டத்தை கட்டாயப்படுத்தல்.
- சாரதிகளுக்கு செயல்முறை மூலமாக அறிவுறுத்துதல்.
- கடுமையான தண்டனைகளை விதித்தல்.
- தொழில்நுட்ப சமிக்கைகளை பொருத்துதல்.
- போக்குவரத்துத் துறையில் இடம் பெறும் முறைகேடுகளை முற்றாக ஒழித்தல்.

ஆக, வாகன ஓட்டுநர்களே மேற்போந்த விடயங்களை கவனத்தில் கொள்ளுங்கள். "வேகத்தால் நாம் சாதிக்க போவது எதுவுமில்லை" என்பதை புரிந்துகொள்ளுங்கள். மாறாக உயிரையும், உடல் பாகங்களையும், உடமைகளை இழந்து தவிக்கிறோம். இது தேவை தானா...? உணர்ந்துகொள்ளுங்கள். மிக அவதானமாய் செயற்படுங்கள். சாலையில் நல்ல முடிவுகள் எடுக்கும் போது நீங்கள் நீதீபதி. பாதுகாப்புப் பணி மேற்கொள்ளும் போது நீங்கள் இராணுவம். தீய பக்கங்களை தவிர்த்து உயர்வான எண்ணங்களுடன் வாகனம் ஓட்டும் போது நீங்கள் மகாத்மா. தெரிந்து கொள்ளுங்கள். வாழ்வில் சாதிக்க வேண்டிய விடயங்கள் இன்னும் நிறையவே உள்ளன. சிந்தனை கொள்ளுங்கள். செயற்படுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓகஸ்ட் மாத பலன்

## துலாம்

சித்திரை 3, 4 பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3ஆம் பாதம்

துணிச்சலாக காரியங்களில் ஈடுபடும் அதே வேளை நியாயமாகவும், நேர்மையாகவும் அதனைச் செய்து முடிக்கும் குணமுடைய துலாம் ராசியினரே! இந்தக் காலகட்டத்தில் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். பயணங்கள் மூலம் இலாபம் கிடைக்கும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும்படியான காரியங்கள் நடக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் உண்டாகும். மனோ தைரியம் அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டாகும்.

தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். தொழில் தொடர்பான விடயங்கள் அனுகூலமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும்.

குடும்பத்தில் சந்தோஷமான நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பிள்ளைகள் மனம் மகிழும் படி தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். விருப்பங்கள் கைகூடும். அக்கம் பக்கத்தினருடன் அனுசரித்துச் செல்வது நன்மை தரும்.

**பெண்களுக்கு:** மனம் மகிழும்படியான காரியங்கள் நடக்கும். ஆன்மிக நாட்டம் ஏற்படும்.

**அரசியல்வாதிகள்:** கட்சிப் பிரச்சினைகளில் இருந்து ஒதுங்கி இருப்பது நல்லது. எதிர்க்கட்சியினரின் உதவி கிடைக்கும். கட்சித்தலைமை உங்களை நம்பி சில இரகசியப் பொறுப்பை ஒப்படைக்கும்.

**கலைத்துறையினர்:** புதிய வாய்ப்புகளில் வெற்றி அடைவர். உங்களை உதாசீனப்படுத்திய நிறுவனமே அழைத்துப் பேசும். மூத்த கலைஞர்களிடம் சில நுணுக்களை கற்றுத் தெளிவீர்கள்.

**மாணவர்களுக்கு:** கல்வியில் முன்னேற்றம் காண்பீர்கள். நண்பர்கள் மத்தியில் மதிப்பு கூடும்.

**சித்திரை 3, 4 பாதம்:**
இந்த மாதம் குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகளை தலை தூக்கச் செய்யும். எனவே சாதுரியமாக பேசி எதையும் சமாளிப்பது நல்லது. பொதுவான காரியங்களில் ஈடுபடும் போது கவனமாக இருப்பது நல்லது. வாகனங்களைப் பயன்படுத்தும் போது எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**சுவாதி:**
இந்த மாதம் எந்த ஒரு விவகாரத்தையும் எதிர் கொள்ளும் மன வலிமை உண்டாகும். எதிலும் கூடுதல் கவனத்துடன் இருப்பது நல்லது. எதிர்பாராத சம்பவங்களால் இழுபறியாக நின்ற காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். சந்திரன் சஞ்சாரம் உடல் ஆரோக்கியம் மனதில் உற்சாகத்தை தரும்.

**விசாகம் 1, 2, 3ஆம் பாதம்:**
இந்த மாதம் அவ்வப்போது ஏதாவது தடங்கல் ஏற்பட்டு நீங்கும். தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சற்று கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். கடன் பிரச்சினைகள் குறையும். போட்டிகள் நீங்கும். வரவேண்டிய பழைய கடன்கள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். திறமையான செயல்கள் மூலம் பாராட்டு கிடைக்கும்.

**பரிகாரம்:** மகாலட்சுமியை வணங்க கடன் பிரச்சினை தீரும். மன நிம்மதி கிடைக்கும்.

# வரலாற்றில் இன்றைய தினம் 12.08.2017

1944-போலந்து வோலா மாகாணத்தில் நாசி ஜேர்மனிய துருப்புக்கள் மனித வேட்டையில் ஈடுபட்டன. இதன் போது 40 ஆயிரம் பேர்வரை ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டனர்.

1960 -நாசாவின் முதலாவது தொடர்பாடல் விண்கலம் எக்கோ-14 வெற்றிகரமாக ஏவப்பட்டது.

1964-இனவெறிக் கொள்கைகளுக்காக ஒலிம்பிக் தொடர்களில் தென்னாபிரிக்கா கலந்து கொள்வது தடைசெய்யப்பட்டது.

1976-லெபனான் போரில் ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரத்து 500 வரையான பலஸ்தீனர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

2015-சீனாவில் இடம்பெற்ற மிகப் பெரிய குண்டு வெடிப்பில் 145 பேர் உயிரிழந்ததுடன் 800 பேர் வரை காயமடைந்தனர்.

2005-ரூபவாஹினியின் பிரபல அறிவிப்பாளர் ரேலங்கியும் அவரது கணவரும் பம்பலப்பிட்டியில் சுட்டுக் கொலை.

2006-பளையை நோக்கி செல் தாக்குதல் காயமடைந்த 17 பேர் மருத்துவமனையில்.

2006-செல் மற்றும் வானூர்தி குண்டு வீச்சில் 152 தமிழர்கள் உயிரிழப்பு. 200 பேர் காயம்.

2016-கோத்தாவின் ஆள்கள்தான் எனது கணவரைக் கடத்தினர் என கருத்தறியும் செயலணியின் முன் காணாமல் ஆக்கப்பட்டவரின் மனைவி தெரிவிப்பு.

2016-நீரியல் வளத் திணைக்களத்துக்கு உதவிப் பணிப்பாளர்கள் 3 பேர் வடக்கில் புதிதாக நியமனம்.

2016-முன்னாள் போராளிகள் மர்மச் சாவு தொடர்பில் பன்னாட்டு விசாரணை வேண்டும் என பிரிட்டன் தலைமை அமைச்சரிடம் வலியுறுத்தி லண்டனில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்.



*1985-ஜப்பான் வானூர்தி123 ஜப்பானின் ஒசுராக்காவில் விபத்துக்குள்ளாகியதில் 520 பேர் உயிரிழந்தனர். தனிஒரு வானூர்தி விபத்தில் இவ்வளவு பேர் சாவடைந்தமையே அதிகபட்ச உயிரிழப்பாகும்.*

## நாளை

**13.08.2017**

ஞாயிற்றுக்கிழமை

**ஆடி - 28**

திதி: ஷஷ்டி மு.இ. 08.26 வரை
நட்சத்திரம்: அச்சுவினி பி.இ.04.41
சுபநேரம்: 09.05 - 10.35 வரை
இராகுகாலம்: 04.35 - 06.05 வரை

# பத்தி எழுத்து

## வாகன விபத்துக்களை தடுப்பதற்கு பொருத்தமான பொறிமுறை அவசியம்

போக்குவரத்துக் குற்றங்களுக்கான தண்டம் அதிகரிக்கப்பட்டுள்ளது. வாகன உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளைப் பொறுத்தவரையில் இதுவொரு கசப்பான செய்திதான்.

தினமும் ஏராளமான வாகன விபத்துக்கள் நாட்டில் இடம்பெற்று வருகின்றன. இதில் பலர் உயிர் துறந்தும், காயங்களுக்கு உள்ளாகியும் வருகின்றனர். வாகனங்களும் சேதமடைகின்றன.

தற்போது வீதிகளில் பயணிப்பதற்கு அச்சமானதொரு சூழ்நிலை காணப்படுகின்றது. வாகனங்களின் அதிகரிப்பு ஒருபுறமிருக்க வாகன சாரதிகளின் தவறான செயற்பாடுகள் காரணமாகவும் அதிகளவான வீதி விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன.

தூக்கத்தில் வாகனங்களை செலுத்துதல், மதுபோதையுடன் சாரத்தியம் செய்தல், அலைபேசியில் கதைத்தவாறு வாகனங்களை ஓட்டிச் செல்லுதல், அளவுக்கு மீறிய வேகத்தில் வாகனங்களைச் செலுத்துதல் ஆகிய காரணங்களால் அதிகளவில் வாகன விபத்துக்கள் ஏற்படுகின்றன.

அரச பேருந்துகள், தனியார் பேருந்துகளும் போட்டிபோட்டுக்கொண்டு அதிக வேகத்தில் செல்வது வழக்கமானதொரு காட்சியாகவே மாறிவிட்டது. இதன் போது விபத்து ஏற்படுமாயின் அதனால் பயணிகளே பாதிக்கப்படுகின்றனர்.

வாகனங்களை ஓட்டுவதற்குத் தகுதியில்லாதவர்களுக்கும் சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுவது விபத்துக்கள் ஏற்படுவதற்கான பிறிதொரு காரணமாகும்.

அநேகமான வீதி விபத்துக்கள் மோட்டார் சைக்கிள்களுடன் தொடர்புபட்டனவாகவே காணப்படுகின்றன. வயது குறைந்த சிறுவர்களும் மோட்டார் சைக்கிள்களை வீதிகளில் ஓட்டிச் செல்கின்றனர். இவர்கள் கட்டுப்படுத்த முடியாத அளவு வேகத்தில் மோட்டார் சைக்கிள்களை ஓட்டிச் செல்லும் போது விபத்துக்கள் ஏற்படுமாயின் இவர்களும் பாதிக்கப்பட்டுப் பிறரையும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றனர்.

போக்குவரத்துக் குற்றங்களுக்கான தண்டத்தை அதிகரிப்பதால் வீதி விபத்துக்கள் குறையுமென எதிர்பார்க்க முடியாது ஏனென்றால் குற்றமிழைப்பவர்கள் தண்டப் பணத்தைச் செலுத்திவிட்டு மீண்டும் அதே குற்றத்தைச் செய்வதற்கு முனைவார்கள் ஆகவே இதைத் தடுப்பதற்குத் தீர்க்கமானதொரு பொறிமுறை வகுக்கப்படல் வேண்டும்.

எதிர்காலத்தில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது விதி விபத்துக்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கவே செய்யும். ஆகவே உரிய அதிகாரிகள் சகல விடயங்களையும் கருத்தில் கொண்டு விபத்துக்களைத் தடுப்பதற்கான செயற்திட்டங்களை இப்போதே வகுக்க வேண்டும். இதைச் செய்யத் தவறினால் வாகன விபத்துக்களை ஒருபோதும் தடுக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பணிகளில் குளறுபடி ஏற்படலாம் கவனம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைப்பதில் தாமதம் உண்டாகும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை நிலைக்கும். இடையூறுகளை சமயோசிதமாகச் சரிசெய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக் கும். நிலுவைப் பணம் அதிர்ஷ்டவசமாகக் கிடைக்கும்.

**மிதுனம்:** திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் படிப்படியாக உயரும். சேமிக்க வாய்ப்புண்டு. பணியாளர் கள், சக ஊழியர்களின் ஆதரவைப் பெறுவர்.

**கடகம்:** சுய கௌரவத்துக்கு பாதிப்பு உரு வாகலாம் கவனம். சொந்த பணியில் மட்டும் கவனம் செலுத்தவும், தொழில், வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும்.

**சிங்கம்:** குடும்பத்தேவை நிறைவேற தாமத மாகலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் முயற்சி தேவைப்படும். இலாபம் சுமா ராக இருக்கும். உடல்நிலை சீராக இருக்கும்.

**கன்னி:** குடும்ப பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். கூடுதல் பணியை முழுமனதுடன் ஏற்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற் றம் உருவாகும். தாராள பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்வில் வளம் பெற புதிய வாய்ப்பு உருவாகும். தொழில், வியாபாரத்தில் நிர்ண யித்த இலக்கு எளிதில் நிறைவேறும்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட செயல் நிறைவேறுதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. செலவுக்கு பணமின்றித் தவிப்பர்.

**தனுசு:** மற்றவர்களின் அவதூறு கருத்துக்களை பொருட்படுத்த வேண்டாம். தொழில், வியாபா ரத்தில் கூடுதல் உழைப்பு தேவைப்படும். இலாபம் சுமார். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும்.

**மகரம்:** மற்றவர் நலனில் அக்கறை கொள்வீர் கள். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். சராசரி வருமானத்துடன் நிலுவைப் பணமும் கிடைக்கும். கடனுதவி கிடைக்கும்.

**கும்பம்:** தேவையற்ற விடயத்தில் தலையிட வேண்டாம். தொழில், வியாபாரம் மந்தகதியில் இயங்கும். இலாபம் சுமாராக இருக்கும். பணி யாளர்கள் பணியிடத்தில் வேலைப்பளு அதிகம்.

**மீனம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப் பீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் அபரிமிதமான இலாபம் கிடைக்கும்.

**நான் 'பிக் பாஸ்' பார்ப்பதை வீட்டம்மாக்கள் விரும்புவதில்லை!**



**தன்னைவிட யார் பெரிய பிக் பாஸ் என நினைத்திருக்கக் கூடும்!**

**பிச்சை எடுக்கிறது எவ்வளவு கேவலம் தெரியுமா?**



**சார் நான் உங்களை பிச்சை எடுக்கச் சொல்லலேயே பிச்சை போடத்தானே சொன்னேன்**

**பல சண்டைகளுக்கான காரணம் மறந்துவிட்ட பிறகும்**




**பகைமை மட்டும் தொடர்ந்து கொண்டே இருப்பது ஏனோ!**

அம்மா : டேய் கல்யாணத்துக்குப் பிறகு, கடைக் குப்போறது, மார்க்கெட்டுக்குப் போகிற வேலையெல்லாம் நீ செய்யாதே.. உன் மனைவியைச் செய்யச் சொல்லி ஆரம் பத்திலேயே உன் கண்ட்ரோலில் வை.

மகன் : சரிம்மா..

அப்பா : இந்த அட்வைஸ என் கல்யாணத்தப்ப என் அம்மா சொன்னாங்க நான் கேட் கலை. அதான் இப்ப பையும் கையுமா அலையுறேன். நீயாவது ஜாக்கிரதையா இரு!




# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3 | | 5 | | | |
| | 5 | 2 | | 7 | | 4 | 3 | |
| 7 | | | | | | | | 1 |
| | | 6 | 4 | | 7 | 9 | | |
| | | | 9 | | 3 | | | |
| | | 4 | 8 | | 1 | 7 | | |
| 4 | | | | | | | | 2 |
| | 8 | 3 | | 1 | | 6 | 9 | |
| | | | 5 | | 8 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 1 | 8 | 6 | 7 | 9 | 5 | 3 |
| 8 | 6 | 5 | 3 | 4 | 9 | 1 | 2 | 7 |
| 3 | 9 | 7 | 5 | 2 | 1 | 6 | 8 | 4 |
| 6 | 5 | 4 | 9 | 1 | 3 | 8 | 7 | 2 |
| 2 | 3 | 8 | 4 | 7 | 6 | 5 | 1 | 9 |
| 1 | 7 | 9 | 2 | 8 | 5 | 3 | 4 | 6 |
| 7 | 8 | 3 | 6 | 5 | 4 | 2 | 9 | 1 |
| 5 | 1 | 6 | 7 | 9 | 2 | 4 | 3 | 8 |
| 9 | 4 | 2 | 1 | 3 | 8 | 7 | 6 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமா கப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# விஜய் விடுத்த கட்டளை

மெர்சல் திரைப்படத்தில் நகைச்சுவை நடிகர் ஜோகி பாபு, திரையில் தோன்றும் நேர அளவை அதிகப்படுத்துமாறு அந்தப் படத்தின் கதாநாயகன் விஜய் படக்குழுவுக்கு கட்டளையிட் டுள்ளார். இந்தத் தகவலை ஜோகி பாவு வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகர்களில் ஒருவரான விஜய், தற்போது நடித்துவரும் படம் மெர் சல். அஜித் நடிப்பில் வெளியாகவுள்ள விவேகம் திரைப்படத்துக்கும், மெர்சல் படத்துக்கும் இடை யிலான போட்டி தற்போது உச்சம் தொட்டுள்ளது. மெர்சல் படத்தில் நகைச்சுவைக் காட்சிகளில் மிகச் சிறப்பாக செயற்பட்டிருக்கிறாராம் ஜோகி பாபு. இவரது நடிப்பு விஜயைக் கவர்ந்துள்ளதை அடுத்து. ஜோகி திரையில் தோன்றும் நேரத்தின் அளவை அதிகப்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளாராம் விஜய். இந்தக் கட்டளையை செயற்படுத்த ஆரம்பித்துள்ளது படக்குழு. "முன்னணி நடிகரான விஜய், நான் திரையில் தோன்றும் நேரத் தின் அளவை அதிகப்படுத்துமாறு உத்தரவிடுவது என்பது அவ் வளவு இலகுவான விடயமல்ல. அவரின் பரிந்துரையால் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளேன்" என ஜோகி பாபு தெரி வித்துள்ளார். (ம)

காரணமே சொல்லா விட்டாலும் பரவாயில்லை ஆனால் பொய்யாய் ஒரு காரணத்தை சொல்லி யாரிடமும் பிரிவைத் தேடாதீர்கள்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நண்பன்



ஓர் ஊரில் ஓர் இளைஞன் இருந்தான். அவன் எப்போதும் கோபப்படும் சுபாவம் கொண்டவன். ஒருமுறை அவனது நண்பன் அவனிடம் ஆணிகள் நிரம்பிய பை ஒன்றைக் கொடுத்து "நீ எப்போதெல்லாம் கோபப்படுகிறாயோ, அப்போதெல்லாம் ஓர் ஆணியை ஒரு குறிப்பிட்ட சுவரில் அடி" என்றான். இளைஞனும் அப்படியே செய்து வந்தான். முதல் நாள் அவன் 35 ஆணிகளைச் சுவரில் அடித்தான். மறுநாள் 30 ஆணி, மறுநாள் 25 ஆணி, இப்படியாக நாளுக்கு நாள் ஆணிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வந்தது. சில நாள்கள் கழிந்தன. அவன் கோபப்படுவதையே நிறுத்தி விட்டான். ஆணிகள் அடிப்பதும் நின்று விட்டன. இதனை அவனது நண்பன் கவனித்து பெருமைப் பட்டான். நண்பனை முழுவதுமாகத் திருத்த ஆசைப்பட்ட அவன் நண்பனிடம் அடித்த ஆணிகளைப் பிடுங்கச் சொன்னான். இளைஞனும் அப்படியே செய்தான். அப்போது நண்பன் "என் நண்பனே! நீ நான் சொன்ன படியே எல்லா வேலைகளையும் செய்தாய். நீ அடித்த ஆணிகளும் பிடுங்கப்பட்டு விட்டன. ஆனால் ஆணி அடித்த இடங்களில் உள்ள ஓட்டைகளைப் பார். இந்தச் சுவர் முன்னர் இருந்த மாதிரியாக இல்லையல்லவா? எல்லா இடங்களிலும் ஓட்டைகள் உள்ளன. அது போலத்தான் நீ கோபத்தில் சொல்லும் வார்த்தைகளும் செயல்களும் ஒரு வடுவை உண்டாக்கி விடும். நீ என்னதான் உன் செயல்களுக்கு மன்னிப்புக் கேட்டாலும், அந்த வடு மட்டும் மாறாது; மறையாது. நீ வார்த்தைகளால் உண்டாக்கும் வடுவிற்கும், செயல்களால் உண்டாக்கும் வடுவிற்கும் எந்த ஒரு வேறுபாடும் இல்லை.

என் நண்பனே! உண்மையைச் சொல்லப் போனால் நண்பர்கள் கிடைத்தற்கரிய பொக்கிஷங்கள். அவர்கள் உன்னைச் சிரிக்க வைப்பார்கள். உன் வாழ்க்கையில் நீ உயர தட்டிக் கொடுப்பார்கள். நீ சொல்வதைக் காது கொடுத்துக் கேட்பார்கள். நீ நல்ல நிலைமைக்கு வரும்போது உன்னைப் பாராட்டி மகிழ்வார்கள். எதையும் இதய பூர்வமாகச் செய்வார்கள். ஆனால் நீ தவறு செய்யும் போது அந்தத் தவறை நீ செய்யாதிருக்க உன்னைக் கண்டிக்கவும் செய்வார்கள். நல்ல வழி காட்டியும் விடுவர். நானும் இவற்றைத் தான் உனக்குச் செய்கிறேன்" என்றான்.

**தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு – குறள் 129**

***பொருள் : தீயினால் சுட்ட புண்ணின் காயம் உடனே ஆறிப் போகும். ஆனால் நாக்கினால் கூறிய வன்மையான சொல்லின் வடு மனதில் எப்பொழுதும் ஆறாது இருக்கும்.***

## ஒரு பொருள் பல சொல்

| | | |
|---|---|---|
| நெருப்பு | - | தீ, அக்கினி, தழல் |
| பாம்பு | - | அரவம், கட்செவி, பணி, ஆலவாய் சர்ப்பம் |
| புழுதி | - | தூசு, பொடி, துகள், தூள் |
| அன்பு | - | பாசம், நேசம், பரிவு |
| உண்மை | - | வாய்மை, சத்தியம், மெய் |
| முத்து | - | நித்திலம், தரளம் |
| மலை | - | குன்று, பர்வதம், கிரி |
| பெண் | - | பாவை, தையல், அணங்கு, வனிதை கோதை, மங்கை |
| போர் | - | அமர் யுத்தம், செரு |
| மகன் | - | புதல்வன், மைந்தன், புத்திரன் |
| மான் | - | நவ்வி, கலை, ஏணம், அரிணம் |
| பூமி | - | ஞாலம், பூதலம், பார், புவனம், தரணி, காசினி |
| வண்டு | - | அளி, மதுகரம், சுரும்பு, அரி, ஆயதம் |
| வயல் | - | கழனி, பழனம், புலம் |
| மேகம் | - | கொண்டல், கார், முகில், மஞ்சு |



## ஒலிம்பிக் பற்றிய துணுக்குகள்

- ஒலிம்பிக் போட்டிகளுக்கு ஆரம்பத்தில் அவ்வளவாக வரவேற்பு இருக்கவில்லை.
- இதற்குக் காரணம் அந்தக் காலத்தில் ஆட்சி செய்த மன்னர்கள்தான். அவர்களுக்கு விளையாட்டில் ஆர்வம் இல்லாமையால் ஒலிம்பிக்கிற்கு பல சிக்கல்கள் எழுந்தன.
- ஆனால் 1896ஆம் ஆண்டு பிரான்ஸை ஆண்ட பியரி கூபர்ட்டின் ஒலிம்பிக் போட்டிகளுக்கு உயர்வு அளித்தார்.
- இந்த ஆண்டில்தான் ஏதென்ஸ் நகரில் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகின.
- 1928ஆம் ஆண்டு பெண்களுக்கான ஒலிம்பிக் போட்டிகளும் அதனைத் தொடர்ந்து சிறப்புத் தேவையுடையவர்களுக்கான ஒலிம்பிக் போட்டிகளும் ஆரம்பமாகின.
- 2008ஆம் ஆண்டு ஒலிம்பிக்போட்டிகள் சீனத் தலைநகர் பீஜிங்கிலும் 2012ஆம் ஆண்டு லண்டனிலும் நடைபெற்றன.
- 2016ஆம் ஆண்டு பிரேசிலில் நடைபெற்றது.
- ஒலிம்பிக்கின் சின்னமான ஐந்து வளையங்கள் ஐந்து கண்டங்களையும் குறிக்கின்றன.
- நீல நிற வளையம் ஐரோப்பாவையும், மஞ்சள் ஆசியவையும், கறுப்பு ஆபிரிக்காவையும், பச்சை அமெரிக்காவையும், சிவப்பு ஆஸ்திரேலியாவையும் குறிப்பதாகும்.

## லியனாடோ டாவின்சி



உலகம் வியந்து போற்றும் மோனலிசா ஓலியத்தை வரைந்த லியனாடோ டாவின்சி 1452ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி இத்தாலியில் பிறந்தார். வழக்கறிஞராக இருந்த இவரது தந்தை செல்வச் செழிப்புடன் வாழ்ந்தார். டாவின்சி தனது பதின்நான்காவது வயதிலேயே மாதிரி வடிவமைப்பில் (Modelling)மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். அவரது ஆர்வத்தை அறிந்து கொண்ட தந்தையார், புகழ் பெற்ற சிற்பக் கலைஞர் ஆந்திரயா டெல் வெரேசியா என்பவரிடம் அவரைப் பயிற்சி பெற அனுப்பினார். அப்பயிற்சியே டாவின்சியைத் தனித்துவம் மிக்க ஓவியராக்கியது. அவர் ஓவியராக மட்டுமல்ல பொறியியலாளர், சிற்பி, உடற் கூற்றியல் அறிஞர், கட்டடவியல் நிபுணர், நகரமைப்பு வல்லுநர், புல்லாங்குழல் மேதை போன்ற பல்துறைப்பரிமாணங்கள் கொண்டவராக பேரறிஞராக இருந்துள்ளார். இவர் உலகப் புகழ்பெற்ற மோனாலிசா போன்ற ஓவியங்களை வரைந்த போதிலும், அதில் மட்டும் திருப்திகாணாது மனிதர்களின் உடலமைப்பை நுட்பமாக அறிந்து கொண்டால்தான் துல்லியமான ஓவியங்களை வரைய முடியும் என நம்பினார். அதனால் மனித உடல் உறுப்புக்களைப் பற்றிய உலகம் தெரிந்திராத பல தகவல்களைக் கேட்டு ஓவியங்களாக நிலை நிறுத்தினார். அறிவியலையும் கணிதத்தையும் படிக்கும் காலத்தில் பயின்றிராத இவர், ஓவியம் மற்றும் சிற்பக் கலை வழியே அவற்றின் நுட்பங்களைத் தெரிந்து கொண்டார். மனிதன் பறவைபோல பறக்க வேண்டும் என்பதற்காக இன்றைய ஹெலிகொப்டர் போன்ற வடிவமைப்பில் ஒரு கருவியை வரைந்து அதற்கு "ஆகாயத் துளைப்பான்" என்று பெயரும் இட்டிருக்கிறார். டாங்கிகள் போன்ற யுத்தக் கருவி, பல திசைகளிலும் சுடக் கூடிய இயந்திரத் துப்பாக்கி என பல்வேறுபட்ட பொறியியல் அதிசயங்களை 15ஆம் நூற்றா ண்டிலேயே முன் வைத்துச் சென்றுள்ளார் அறிஞர் லியனாடோ டாவின்சி.

## நான் விரும்பும் பழம்

1. நான் தினந்தோறும் உணவு உண்ட பின் பழங்கள் உண்பது வழக்கம்.
2. எனக்குப் பழங்கள் உண்பதில் நல்ல விருப்பம் உண்டு.
3. நான் பெரிதும் விரும்பி உண்பது மாம்பழமாகும்.
4. மாம்பழங்களில் பல வகைகள் உண்டு. அவை கறுத்தக் கொழும்பு, செம்பாட்டான், அம்பலவி, விலாட்டு, நீலம், கிளீச் சொண்டு, மல்கோவா இன்னும் பலவாகும்.



5. இவற்றில் கறுத்த கொழும்பு மாம்பழத்தையே நான் பெரிதும் விரும்பி உண்ணுவேன்
6. மாம்பழங்களை அப்பா சந்தையில் வாங்கி வருவார்.
7. மாம்பழங்களை உண்பது உடலுக்கு நல்லது.
8. யாழ்ப்பாணத்தில் இருந்து பெறப்படும் கறுத்தக் கொழும்பான் மாம்பழம் மிகவும் இனிமையானது.

இதனை எல்லோரும் விரும்பி உண்பர்.

9. இவற்றின் இனிமை காரணமாகவே நான் மாம்பழங்களைப் பெரிதும் விரும்புகிறேன்.

யுகர்ணி குணசீலன்,
யாழ் .இந்து ஆரம்பப் பாடசாலை.

இரண்டு படங்களுக்கும் இடையே
ஆறு வித்தியாசங்கள் உள்ளன.
அவற்றைக் கண்டுபிடிப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாதநர்த்தன வர்ணம்" சாவகச்சேரியில் இன்று

சாவகச்சேரி, ஓக. 12

தென்மராட்சி கல்வி வலய அழகியற் பாடப் பிரிவினர் நடத்தும் 'நாத நர்த்தன வர்ணம் 2017' நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு சாவகச்சேரி நகரசபை பொன் விழா மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சி அபிவிருத்திக் கழக பிரிட்டன் கிளையின் தலைவர் மருத்துவர் ஆ.புவிதாசனும் மதிப்புறு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் ரஜிதா சின்னத்துரை, ஓய்வு பெற்ற அதிபர் க.அருந்தவபாலன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம், மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம், எழுதுமட்டுவாழ் சிறிகணேசா வித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், கைதடி நாவற்குளி அ.த.க.பாடசாலை மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள் இணைந்து சாவகச்சேரி டிறிபேக் கல்லூர்ரி முன்றிலிலிருந்து விருந்தினர்களை வரவேற்று விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்வர்.

நிகழ்வில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம், வரணி மத்திய கல்லூரி மாணவிகளின் கீர்த்தனை, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்களின் கரகாட்டம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களின் பாரதியார் பாடல், கொடிகாமம் அ.த.க.பாடசாலை மாணவர்களின் பாம்பு நடனம், மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வி.மாணவர்களின் சப்தம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவிகளின் வர்ணம், கச்சாய் அ.த.க.பாடசாலை மாணவர்களின் குறவன் குறத்தி நடனம், மட்டுவில் கமலாசனி வித்தியாலய மாணவிகளின் குடை நடனம், நாவற்குளி ம.வி.மாணவர்களின் கண்டிய நடனம், மிருசுவில் அ.த.க.பாடசாலை மாணவர்களின் பானை நடனம், மட்டுவில் கமலாசினி வித்தியாலய மாணவர்களின் பொம்மை நடனம், உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களின் வால் நடனம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளின் தில்லானா ஆகியவை இடம்பெறுமென மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ-4 - 9)


குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

## அருளாசான் வேதாத்திரி மகரிஷி

அவர்களின் 106 ஆவது ஜெயந்தி தின விழா - 14.08.2017

"ஏழ்மையில் வாழ்க்கை செய்து மறைபொருள் உணர்த்தி ஞானத்தை உடலாகவும் குருவை உயிராகவும் நின்று யோகக்கலையால் உலகாளும் வேதத்தின் வேந்தன் அருளாசான் வேதாத்திரி மகரிஷி அவர்கள் தசாப்தங்கள் பல கடந்து அகவை நூற்றாறிலே தடம்பதிக்கும் பொன்னான நன்நாள் இன்றாகும்."

அந் நன்நாளிலே ஞாலத்தில் தீதகற்றி மனவளக்கலை யோகா எனும் அருங்கலையை மனித குலத்திற்களித்த அருளாசானின் ஜெயந்தி தினத்தை பக்குவமாய் நினைவேந்தும் நிகழ்வுகள்

காலம் : 14.08.2017 திங்கட்கிழமை பி.ப.4.00 மணி
இடம் : யாழ்.அறிவுத்திருக்கோவில்
வரவேற்புரை : மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி V.பாஸ்கரன்
தலைமையுரை : மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி S.முருகானந்தவேல் (யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை தலைவர்)
பிரதம விருந்தினர் : பேராசிரியர் K.தேவராசா (முன்னாள் பீடாதிபதி, வணிக முகாமைத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்புரை : மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி இந்திரா சண்முகசுந்தரம் (தமிழ்நாடு)
சிறப்பு சொற்பொழிவு தலைப்பு - உடல் நலமும் மன வளமும்.
நன்றியுரை :

அருளாசான் வேதாத்திரி மகரிஷி அவர்களின் ஜெயந்தி தின நிகழ்வில் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

12.08.2017 சனிக்கிழமை பி.ப. 5.00 மணிக்கு மனவளக்கலை பயிற்சியின் புதிய வகுப்பு ஆரம்பமாகின்றது.

வாழ்க வளமுடன்.

யாழ். அறிவுத்திருக்கோவில் அறக்கட்டளை,
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2772

NORTH LANKA IIT

B.Sc in Computer Science Top Up Programme

காலம்: ஒரு வருடம்

தகமை: HND in IT or Two years Diploma in IT

HND in IT இல் referred ஆனவர்கள் வந்து சந்திக்கவும்.அவர்களுக்கு விசேட ஒழுங்கு செய்து தரப்படும்.புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளது

NORTH LANKA IIT
Top Floor, People's Bank Building,
Stanley Road. Jaffna.

அறைகள் வாடகைக்கு

திருநெல்வேலியில் பல்கலைக்கழகத்துக்கு அருகில் அறைகள் வாடகைக்குண்டு. மருத்துவபீட மாணவிகள் விரும்பத்தக்கது.
தொடர்பு - 077 386 7458

விற்பனைக்கு

புதிய iPhone 4S 12 000/= மற்றும் புதிய iPhone 5S, 6,6S விற்பனைக்கு உண்டு. மற்றும் பாவித்த Lap tops 8000/= தொடர்பு-077 717 2325 (www.iway.lk)

அரிசி விற்பனைக்கு

E நாடு விற்பனைக்கு
077 396 2602 (CS 8703) (14)
V.K.T அரிசி ஆலை நீர்வேலி சந்தி, நீர்வேலி

காணி விற்பனைக்கு

நாவற்குழியில் A9 வீதியிலிருந்து 25 அடி பாதையுடன் கூடிய 2ஆவது காணி 8 பரப்பு (United Motors Companyக்கு அருகில்) விற்பனைக்குண்டு. (தொழில் நிறுவனங்களுக்கு பொருத்தமானது Hotel Yard Inn Restaurant)
தொடர்பு - 076 697 2287

வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.
01.பெயின்ரர்
02. மேசன்
03. வெல்டர்
04. தச்சுத்தொழிலாளி
தேவைப்படின் உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
077 958 3944

English Personal Classes
ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புகள்
அனுபவம் மிக்க ஆசிரியரினால் உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
077 658 9443 யாழ்ப்பாணம்

Personal & Group Class
(Science - Gra 6 to Gra 11)
விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரினால் தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் யாழ்ப்பாணத்தின் எப்பாகத்திலும் வந்து கற்பிக்கப்படும்.
078 439 3071


## மரண அறிவித்தல்

மண்ணில் 03 . 11 . 1990



விண்ணில் 10 . 08 . 2017

### பாலரட்ணம் விமல்ராஜ்

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலரட்ணம் விமல்ராஜ் (10.08.2017) வியாழக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் பாலரட்ணம் (பாலா) - தவமணிதேவி (தேவி) தம்பதியரின் அன்புப்புதல்வனும் நிமல்ராஜ், யூட் மோகன்ராஜ் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஜடா நிமல்ராஜ்ஜின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்கச்சடங்கு இன்று (12.08.2017) சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் புனித நீக்கிலார் ஆலயம் மிருசுவிலில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித நீக்கிலார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
கண்டி வீதி, மிருசுவில். 077 844 9138, 077 8582 642

## வலிகாமம் தெற்மேற்கு பிரதேசசபை
## மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை,
## ஆதனபெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம் : 12, ஆதன இல. : 12,
வீதி : சங்கையான் ஒழுங்கை,
கிராம சேவையாளர் பிரிவு : J/135. ஆனைக்கோட்டை.

வட்டாரம் 12, சங்கையான் ஒழுங்கை, ஆதன இல 12 இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை "சங்கையான் வளவு" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குளி 14.14 கொண்ட இவ்வாதனம் நவாலி கிழக்கைச் சேர்ந்த அமிர்தநாதன் பெண் லூர்த்துமேரி ஆகிய இவர்களால் நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழலினால் இடம்பெற்ற இடப்பெயர்வின் போது குறித்த அறுதி உறுதி தொலைந்து விட்டது என்றும் எழுதிய நொத்தாரிசுவின் பெயர் ஞாபகமில்லையென்றும் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி.ஜெயச்தித்திரா ஸ்ரீதரன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 2366ம் இலக்க 19.05.2015ம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் அதன் பின்னர் தமது மருமகனான தனபாலசிங்கம் தபேசன் அவர்களுக்கு 2367ம் இலக்க 19.05.2015ம் திகதிய நொத்தாரிசுவின் பெயர் நொத்தாரிஸ் திருமதி.ஜெயச்தித்திரா ஸ்ரீதரன் அவர்களால் எழுதப்பட்ட நன்கொடை உறுதிமூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.V.T.பாலசுப்பிரமணியம் அவர்களால் வரையப்பட்ட 5658ம் இலக்க 13.04.2013ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "சங்கையான் வளவு" நிலப்பரப்பு 01 குளி 14.14 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரத்திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தனபாலசிங்கம் தபேசன் என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.குறித்த பெயர்மாற்றம் தொடர்பாக ஏதேனும் பிரச்சனைகள் ஏற்படின் அதற்கு வலிகாமம் தென் மேற்கு பிரதேசசபை பொறுப்பேற்காது என்பதை அறியதருகின்றேன்.

செயலாளர்,
வலி. தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

## மரண அறிவித்தல்



### சிவலிங்கம் சந்திரன்

பிரான்பற்று பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் சந்திரன் (10.08.2017) காலமானார்.

அன்னார் சிவலிங்கம் - நாகம்மா தம்பதியரின் அன்புமகனும் செல்வகுமாரியின் அன்புக்கணவரும் வேவிராஜன், இந்திரன், இந்திராணி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2017) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிரான்பற்று இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரான்பற்று,
பண்டத்தரிப்பு.

தகவல்:
சுதன் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### அமரர். ஞா. பிரதீப்குமார் (தீபன்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட ஞா.பிரதீப்குமார்(தீபன்), 10.08.2017 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற வழக்கறிஞர் வே.நாகலிங்கம் (வட்டுக்கோட்டை), காலஞ்சென்ற ஆசிரியர் க. மயில்வாகனம் (வெள்ளாம்போக்கட்டி, சாவகச்சேரி) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற விரிவுரையாளர் ஞானசம்பந்தன் (பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி), இளைப்பாறிய ஆசிரியர் சரஸ்வதி (யாழ் இந்து மகளிர் கல்லூரி) தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற செல்லத்துரை சிவபாலசிங்கம் (தெல்லிப்பளை), தேவி தம்பதிகளின் அன்பு மருகமனும், விஜிதாவின் அன்புக் கணவரும், ஆரூரனின் அன்புத் தந்தையும், சுபனா (U.K.), சாரங்கன் (கனடா), சிறீதா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தயாகரன், துர்க்கரன், ஷகிதா, திருமகன் (U.K.), வசந்தரூபி (கனடா), சிவராஜன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14.08.2017 திங்கட்கிழமை காலை 8.00 மணிமுதல், இலக்கம் 115, டி. எஸ். சேனாநாயக மாவத்த, கொழும்பு 8 என்னும் முகவரியிலுள்ள A. F. Raymond மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, ஈமக்கிரியைகளின் பின்னர் மாலை 4.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழக மாணவ/மாணவிகளுக்கான இடமாற்றம்

2016/17 இல் கற்றல் ஆண்டுக்கான யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் சட்டபீடத்திற்கு தெரிவாகியுள்ள சிங்கள மாணவி கொழும்பு அல்லது பெரதேனியா பல்கலைக்கழக சட்டபீடத்திற்கு மாற்றலாக விரும்புகின்றார். யாராவது கொழும்பு அல்லது பெரதேனியா பல்கலைக்கழக சட்டபீடத்தில் இருந்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு மாற்றலாக விரும்பின் தயவுசெய்து 2017.08.15 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளுங்கள்.


**தொடர்பு - 071 221 0131, 077 225 0152, 071 455 2496**

கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 174
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 11.08.2017
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 97,716,568/-
F 03 04 45 65
01 09 47 74
Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 11.08.2017 | வெற்றி வாரம் 2170 | வர்ணம் சிவப்பு
சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 13 39 50 52
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி ரூ. 23, 23,944/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 01 19 21 43
2017.08.13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## மரண அறிவித்தல்கள்

### தாமோதரம்பிள்ளை கந்தையா




உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் இல. 70/1, ஆஸ்பத்திரி வீதியை தற்போதைய முகவரியாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை கந்தையா நேற்று (11.08.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற லிலிதாதேவியின் அன்புக் கணவரும் கபிலன் (கனடா), கமலன் (கனடா), கலியுகன் (அதிபர், சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம், குருநகர் ஆண்கள் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**70/1, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: கலியுகன் (மகன் - அதிபர்) 077 595 8178**



பிறப்பு 31 . 03 . 1954

இறப்பு 10 . 08 . 2017

### குணரத்தினம் இராசரத்தினம்

(ஜெயா ஹாட் வெயார் முன்னாள் உரிமையாளர்)

குடமியன் வரணியைப் பிறப்பிடமாகவும், 02 ஆம் கட்டை முரசுமோட்டையை வதிவிடமாகவும் கொண்ட குணரத்தினம் இராசரத்தினம் (ஜெயா ஹாட் வெயார் முன்னாள் உரிமையாளர்) கடந்த (10.08.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் குணரத்தினம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் மயில்வாகனம் - யானகியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் வசந்தகுமாரியின் அன்புக்கணவரும் நித்தியா (லண்டன்,) நிஷாந்தி ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜெயப்பிரகாஸ் (லண்டன்), சபேசன் (S.N.P Traders உரிமையாளர்) ஆகியோரின் மாமனாரும் பிரஷ்னவி, சக்ஷபி ஆகியோரின் பாசமிகு பேரனும் நவரட்ணம், செல்வரட்ணம் காலஞ்சென்ற ஜெயகுமாரி, இராசகுமாரி மற்றும் அழகரத்தினம், விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் (S.N.P Traders) இல் நடைபெற்று பூதவுடல் கோரக்கன்கட்டு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**



கொமர்ஷல் வங்கியின் மானிப்பாய்க் கிளையின் அருணலு பரிசளிப்பு விழா அண்மையில் வங்கிக் கிளை மண்டபத்தில் இடம்பெற்றது. கிளை முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் யசோதா உதயகுமார் கலந்துகொண்டார். விழாவில் 17 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (வ)

## முகாமையாளர் தேவை

முகாமைத்துவ துறையில் முன் அனுபவமுள்ள நன்றாக ஆங்கிலம் பேசக்கூடியவர் தேவை. கல்விசார் துறையில் கடமையாற்றியிருப்பின் விரும்பத்தக்கது. சிங்களம் பேசத் தெரிந்திருப்பின் நன்று.

**Bond International School,**
**360A, K.K.S. Road, Maruthanarmadam, Jaffna. 077 784 3729**

நிலஜய
சீட்டிழுப்பு வாரம்: 590 வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 11.08.2017
வெற்றி இலக்கங்கள் 36 51 57 65 Q
30 42 52 54
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 32,112,787/-
Web: www.dlb.lk

## கற்பூரம் ஏற்றுவதற்கு முயன்ற பெண்ணுக்குத் தீக்காயங்கள்

யாழ்ப்பாணம், ஒக.12


நல்லூர் முருகன் ஆலயத்தின் முன்றிலில் கற்பூரம் ஏற்ற முற்பட்ட குடும்பப் பெண் மீது தீப் பற்றியதால் தீக் காயங்களுக்கு உள்ளாகி நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டார்.

நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த தயாபரன் சாந்ததேவி (வயது 51) என்பவரே காயமடைந்தார். அவரது கையிலும், முகத்திலும் தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 7.30 மணியளவில் நடந்துள்ளது. (வ-8,ரி)

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து சுந்தரலிங்கம்



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சுந்தரலிங்கம் 11.08.2017 வெள்ளிக் கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் சரவணமுத்து காலஞ்சென்ற கண்மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிரவேலு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னபூரணத்தின் பாசமிகு கணவரும் துரைவீரசிங்கம், மகாலிங்கம், இராசலிங்கம், திருவிளங்கம், கணேசலிங்கம், சியாமளதேவி, சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகேஸ்வரி, மல்லிகாதேவி, பாலச்சந்திரன் ஆகியோரின் மனைவிவழிமைத்துனரும் ரவிசங்கர் (இத்தாலி), ரவிச்சந்திரன் (திருமாலன் பான்சி புடைவையகம், இணுவில்), சுபாநந்தினி (ஜேர்மனி), ரவிக்குமார் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுமணா (இத்தாலி), ஜெயலட்சுமி (இணுவில்), பிரதீபன் (ஜேர்மனி), சானிகா (மல்லாகம்) ஆகியோரின் அன்பு மாமனும் அனோஜ் (இத்தாலி), வினோஜ் (இத்தாலி), பிரவீனா, பிரியதர்சன், நித்தியா (ஜேர்மனி), பிருந்தா (ஜேர்மனி), பிரசன்னா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 470 5401**

## நீதம்மலர் வெளியீடு இன்று

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கத்தின் வருடாந்த "நீதம்" நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது.

சட்ட மாணவர் சங்கத் தலைவர் அ.றொமல்சன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் கலந்து சிறப்பிக்கிறார். சட்டத்துறை சார்ந்த சகல பேராளர்களையும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு சங்கத்தினர் கேட்டுள்ளனர். (வ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியா...

தொடர்பிலான விசாரணைப் பிரிவின் பொறுப் பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வாவைக் கொலை செய்யத் திட்டமிடப் பட்டுள்ளதாகத் தகவல் கசிந்துள்ளது. வித்தியா படுகொலை வழக்கின் சாட்சியாளர் ஒருவரே இந்தத் தகவலை வெளியிட்டார்''

இவ்வாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு கோட்டை நீதிவான் மன்றுக்கு அறிவித்தனர். இந்தக் கொலை முயற்சி தொடர்பில் விசா ரணை நடத்துமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

2008ஆம் ஆண்டு வெள்ளை வானில் கொழும்பு உள்ளிட்ட சில பகுதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 தமிழர்கள் கடத்தப்பட்டு பின்னர் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் கடற்படை அதிகாரி தசநாயக்க உள்ளிட்ட சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கின் விசாரணைகளை குற்றப்புலனாய்வு பிரிவின் கூட்டுக்கொள்ளை தொடர்பான விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வா மேற்கொண்டு வருகிறார்.

'புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கு விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் 3 மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயம் முன்னிலையில் இடம்பெற்று வருகிறது. அந்த வழக்கில் சாட்சியாளராக இருக்கும் ஒருவர் மூலமாகவே பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வா மீதான கொலைச் சதி தெரியவந்துள்ளது. வெள்ளவத்தைப் பகுதியில் வசிக்கும் அந்தச் சாட்சியாளருக்கு அறிவித்தல் கொடுக்கச் சென்ற போதே இந்த விடயம் நிஷாந்த சில்வாவுக்குத் தெரியவந்தது.

புங்குடுதீவு மாணவியின் வழக்கின் சாட்சியாளர் வேறொரு வழக்கு தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். சுகவீனம் காரணமாக அவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் 11 தமிழர்கள் கடத்தல் சம்பவத்தின் சந்தேகநபர்களில் ஒருவரான நலின் பிரசன்ன விக்ரமசூரிய, பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வாவை கொலை செய்ய திட்டம் தீட்டியமை தொடர்பில் குறித்த சாட்சியாளர் அறிந்துகொண்டுள்ளார்' என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் முன்வைத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வா, வித்தியா படுகொலை வழக்கு சாட்சிக்கான அறிவித்தலை கையளிக்க சென்ற போது, அந்தச் சாட்சியாளர் நீங்களா நிசாந்த சில்வா? எனக் கேட்டுள்ளார். அதற்கு நிசாந்த சில்வா ஆம் எனப் பதிலளித்துள்ளார். இதனையடுத்து தனியாகவா வந்துள்ளீர்கள்? என அந்தச் சாட்சியாளர் கேட்டுள்ளார். அதற்கும் பொலிஸ் பரிசோதகர் ஆம் என பதில் கூறியுள்ளார். இதன் பின்னரே அந்தச் சாட்சியாளர் இந்தக் கொலைச்சதி தொடர்பிலான தகவல்களை நிசாந்த சில்வாவிடம் தெரிவித்தார். அது தொடர்பான வாக்குமூலமொன்றையும் அவர் வழங்கியுள்ளார்' என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''நாங்கள் நான்கைந்துபேர் மாட்டிக் கொண்டோம். எங்களின் மற்றையவர்கள் வெளியே இருக்கின்றனர். பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா இருக்கும் வரையில் நாம் தப்பிக்க முடியாது. வெளியில் உள்ளவர்களிடம் சொல்லி நிசாந்தவுக்கு வேலையைக் காட்ட வேண்டியதுதான்'' என விக்ரமசூரிய கூறியதாக வித்தியா படுகொலை வழக்கின் சாட்சியாளர் வாக்குமூலம் வழங்கியுள்ளார். (வ-5)

## விபத்தில்...

யோகராசா பிருந்தா(வயது - 3) என்ற சிறுமியே உயிரிழந்தார்.

''வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களின் குழந்தைகளுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்து மாவைப் பெற்றுக் கொள்வதற்காக ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு துவிச்சக்கர வண்டியில் சிறுமியை தயார் அழைத்துச் சென்றுள்ளார். கிளிநொச்சி முதன்மை வீதிக்கு சென்ற போது எதிரே வந்த பிறிதொரு துவிச்சக்கர வண்டியுடன் அவர்கள் மோதுண்டுள்ளனர். விபத்தால் சிறுமியும் அவரது தாயாரும் வீதியில் வீழ்ந்துள்ளனர்.

விபத்தில் சிக்கிய மற்றைய துவிச்சக்கர வண்டியில் வந்தவர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார். கீழே வீழ்ந்தவர்கள் காயம் எதுவும் இல்லாததால் ஊட்டச்சத்து மாவைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பியுள்ளனர்.

விபத்து நடைபெற்ற மறுநாள் அதிகாலை தலையில் வலிப்பதாக சிறுமி அழுதுள்ளார். உடனடியாக அவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் பெற்றோரால் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு சிறுமி மயக்கமடைந்துள்ளார். இதனால் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டார். அங்கும் மயக்க நிலையிலேயே சிறுமிக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டது. எனினும் நேற்றையதினம் சிகிச்சை பயனின்றி சிறுமி பரிதாபமாக உயிரிழந்தார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார் விசாரணைகளின் பின்னர் சிறுமியின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-8)

## 20 ஆவது...

துள்ள திருத்த வரைவு நாடாளு மன்றத்துக்கு கொண்டு வரப்படும் போது அதனை எதிர்த்துத் தோற்கடிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு கட்சியின் மையக்குழு தீர்மானித்துள்ளது'' என்று இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட இந்த யோசனைக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் உள்ளடக்கிய கூட்டு அரசின் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. இதையடுத்து இது 20ஆம் திருத்தச் சட்டமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே நாளில் நடத்துவதன் மூலம் இந்த ஆண்டு, அடுத்த ஆண்டு பதவிக் காலம் முடிவடையும் மாகாணசபைகளின் ஆட்சி நீடிக்கப்படும் நிலமை ஏற்பட்டுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் 20ஆம் திருத்தச் சட்டத்துக்கு பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் தமது கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்து வருகின்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழு நேற்றுமுன்தினம் இரவு கூடியது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் அதில் கலந்துகொண்டார்.

இந்தக் கூட்டத்தில் 20ஆம் திருத்த வரைவுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு வழங்குவதில்லை என்ற தீர்மானம், நீண்ட இழுபறியின் பின்னர் எடுக்கப்பட்டுள்ளது. இதனை இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாவும் உறுதி செய்தார். (உ-5)

## ஆற...

ளுக்கு மான தேர்தலை ஒரே நாளில் நடத்தும் யோசனையை உள்ளடக்கிய 20ஆம் திருத்தச் சட்ட வரைவு வர்த்தமானியில் கடந்த வாரம் வெளியிடப்பட்டது. இந்தச் சட்ட வரைவுக்கு, பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகளிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. கூட்டு அரசின் பங்காளிக் கட்சியாகவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இதனை எதிர்ப்பதற்கு முடிவு செய்துள்ளது.

இந்த நிலையில் எதிர்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன? என்று கட்சித் தலைவர் இரா. சம்பந்தனிடம் கேட்டபோது, ''இதனை இன்னமும் முழுமையாகப் படித்துப் பார்க்கவில்லை. நாம் இதனை ஆதரிப்பதா? இல்லையா? என்பதை கூடித் தீர்மானிப்போம். அதுவரையில் இதனைப் பற்றி ஒன்றும் சொல்ல முடியாது'' என்றார். (வ-5,101)

## சத்திய...

சர் சி.வி.விக்னேஸ்வரனால் நேற்று உத்தியோகபூர்வமாக எழுத்தில் பதில் அனுப்பி வைக்கப்பட்டது.

'வடக்கு மாகாண சுகாதார அமைச்சரான தங் களது 6.8.2017ம் திகதிய பதவி விலகல் கடிதம் சார்பாக குறித்த அமைச்சர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவிக்கப்பட்டதன் அடிப்படையிலும் கடந்த சில தினங்களாக நீங்கள் பணிக்குச் செல்லாததன் நிமித்தமும் தங்களது பதவி விலகல் முடிவு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது' என முதலமைச்சரால் நேற்றையதினம் பதில் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் அடுத்த சுகாதார அமைச்சர் தொடர்பில் முதலமைச்சர் அதிக தேடுதல் கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படும் அதேவேளை, தற்காலிகமாக அந்த அமைச்சுப் பொறுப்பை அவரே எடுத்துக்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது. (வ-101)

## சுவாமிநாதனின்...

டாரத்தில் தெரிவிக்கப்படுகின்றது.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் மீள்குடியேற்ற அமைச்சராக டி.எம்.சுவாமிநாதன் நியமிக்கப்பட்டார். இவரது செயலாளராக கடமையாற்றிய திருமதி ரஞ்சினி நடராஜபிள்ளை முதலில் இடமாற்றம் செய்யப்பட்டார். அதன் பின்னர் மேலதிக செயலாளர் ஜெயமுடீன் இடமாற்றப்பட்டார். அமைச்சின் தலைமைக் கணக்காளரும் மாற்றம் செய்யப்பட்டார். அவர் நீதிமன்றத்தை நாடியதைத் தொடர்ந்து மீளவும் நியமிக்கப்பட்டார்.

இதன் பின்னர், மூத்த உதவிச் செயலர், உதவிச் செயலர் ஆகியோர் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்கள். ரஞ்சினி நடராஜபிள்ளை செயலாளர் பதவியிலிருந்து விலகிய பின்னர் நியமிக்கப்பட்ட வே. சிவஞானசோதி 6 மாதங்களுக்கு முன்னர் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

அதன் பின்பு நிர்வாக அதிகாரி இடமாற்றப்பட்டார். இறுதியாகச் செயலாளராகப் பதவி வகித்த விக்கிரமசிங்க கடந்த வாரம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவருடன் அமைச்சின் பணிப்பாளர், மேலதிக செயலாளர் ஆகியோரும் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பொருத்து வீட்டை நிர்மாணிக்கும் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும், அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தமையாலேயே இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதாக அமைச்சு வட்டாரங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

இதேவேளை, அமைச்சின் செயலாளராக தற்போது பொறியியலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அமைச்சுக்களின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவைத் தரத்தைச் சேர்ந்தவர்களே, ஆட்சி மாற்றத்தின் பின்னர் நியமிக்கப்பட்டு வந்தனர். இதற்கு மாறுபாடாக பொறியியலாளர் சேவையிலுள்ள ஒருவர் அமைச்சுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-5)

## சமுர்த்தி...

ரக்கணக்கானோரது பெயர்கள் நீக்கப்பட்டன. வடக்கு கிழக்கில் இதனால் பலர் பாதிக்கப்பட்டனர். இதனை எதிர்த்து பிரதேச செயலகங்களை முற்றுகையிட்டு மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தச் சூழ்நிலையிலேயே, அரச தலைவர் மேற்படி அறிவிப்பை விடுத்தார்.

மகாவலி வலய விவசாயிகளுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு அரச தலைவர் உரையாற்றினார். சமுர்த்தி குறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சமுர்த்தி அனுகூலங்களை குறைப்பதற்கு அல்லது நீக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளாது. சமுர்த்தி நன்மைகளைப் பெறத் தகுதியுடைய ஆனால் அது வழங்கப்படாத பெருந் தொகையானோர் நாட்டில் காணப்படுகின்றனர்.

அவர்களுக்கு புதிதாக அந்த உதவிகளை வழங்குவதைத் தவிர்த்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏற்கனவே நன்மைகளை பெறுபவர்களின் சமுர்த்தி கொடுப்பனவுகள் நிறுத்தப்படாது.

சமுர்த்தி நன்மைகளை இல்லாது செய்வதற்கான நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பல்வேறு அரசியல் தூண்டுதல்கள் இடம்பெறுகின்றன. அவற்றில் எந்தவித உண்மையும் இல்லை. பொதுமக்களின் நன்மைகளைக் கருதியே தற்போதைய அரசு கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்கின்றது - என்றார். (உ-5)

## யாழ்.மாவட்ட...

டிருந்தார் சி.வி.விக்னேஸ்வரன். அது நடந்து ஒரு மாத காலத்திற்குள் செயலாளரைப் பெரிதும் பாராட்டியிருக்கிறார்.

மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் கிட்டுப் பூங்காவில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டார் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். அங்கு அவர் தெரிவித்ததாவது:

பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் கொழும்பு, மாகாணம் என்றோ மாவட்டச் செயலகம், மந்திரிகள் செயலகம் என்றோ நாங்கள் இனம் பிரித்துப் பார்ப்பதில்லை. எமது மக்களின் வருங்காலமே எம் எல்லோருக்கும் முக்கியம். அதை நாடியே மாவட்டச் செயலக நடவடிக்கைகளும் எமது மந்திரிமார்களின் செயற்பாடுகளும் முன்னேறிச் செல்கின்றன. அந்த விதத்தில் யாழ்ப்பாண மாவட்டச் செயலரை நாம் பாராட்ட வேண்டும். மாகாண நிர்வாகத்துடன் சேர்ந்து முன்னேறுவதில் அவர் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார். அவருக்கு எனது பாராட்டுக்கள் உரித்தாகுக! என்று தெரிவித்தார். (உ-5)

## வடமாகாண...

பட்டது. பேரவைச் செயலகத்துக்கு வழங்கப்பட்ட மீண்டு வரும் செலவின நிதி ஒதுக்கீட்டினுள், 2017ஆம் ஆண்டு ஆவணி மாதம் தொடக்கம் வடக்கு மாகாண சபை உறுப் பினர்கள் ஏதாவது ஒரு புதினப் பத்திரி கையைக் கொள்வனவு செய்வதற்காக மாதாந்தம் 650 ரூபாவுக்கு மேற்படாத வாறு புதினப் பத்திரிகைப் படியாக அவர்களது மாதாந்த சம்பளத்துடன் வழங்குவதற்கு ஆளுநரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வடக்கு மாகாண அமைச்சரவை தீர்மானம் மேற்கொண்டுள்ளது. (வ-5)

## புதிய...

லங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மகிந்த அணி ஆகியன குழப்புகின்றன. இந்த நடவடிக்கைகளை பன்னாட்டுச் சமூகம் அனுமதிக்கக்கூடாது''

இவ்வாறு நோர்வேத் தூதுவரிடம் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் எடுத்துரைத்தார்.

இலங்கைக்கான நோர்வே தூதுவர் தோர்பஜோர்ன் கௌச்டாஸ்டெரை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று சந்தித்தார். இந்தச் சந்திப்பு நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

''கூட்டு அரசின் அனைத்து நடவடிக்கைகளும் தாமதம் அடைகின்றன. தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான, அரசியல் தீர்வு உள்ளிட்டவையும் தாமதமாகின்றது. இது தமிழருக்குப் பாதகம் அமையும். பன்னாட்டு சமூகம் இதற்கு அனுமதிக்கக் கூடாது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தை பெரும்பான்மையான முப்பெரும் தரப்பும், (சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, மகிந்த அணி) குழப்புகின்றன. சம உரிமையுடனான தீர்வையே நாம் கேட்கின்றோம்'' என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நோர்வேத் தூதுவரிடம் எடுத்துக் கூறினார். (வ)

## குடாநாட்டில்...

வறட்சி தொடர்பில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வேலணை, நெடுந்தீவு, நல்லூர், சாவகச்சேரி, மருதங்கேணி உள்ளிட்ட பிரதேசசெயலாளர் பிரிவுகளில் வறட்சி கடுமையாகப் பாதித்துள்ளது. அந்தப் பிரதேசங்களில் 19 ஆயிரத்து 166 குடும்பங்களைச் சேர்ந்தோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றுகண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் 13 ஆயிரத்து 586 குடும்பங்களுக்கு தற்போது குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. அந்தப்பணிக்கு மேலும் 5 தண்ணீர் பவுசர்களை வழங்குமாறு இடர் முகாமைத்துவ அமைச்சிடம் அவசரகோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இரண்டு தண்ணீர் பவுசர்களை வழங்க அமைச்சு முன்வந்துள்ளது.

தீவக மக்களுக்கு யாழ்ப்பாண நகரில் இருந்தும் குடிதண்ணீர் அனுப்பி வைக்கப்படுகின்றது - என்றார். (வ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆவரங்கால் மத்தி. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஓக. 12
கைதடி தெற்கு சனசமூக நிலையம் தனது 62ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரண்டு பிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் 'ஏ' பிரிவில் ஆவரங்கால் மத்திய அணி கிண்ணம் வென்றது.
கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் கரப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்தி அணியை எதிர்த்து அச்சுவேலியுத் அணி மோதியது.
ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 25:15, 25:17, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஆவரங்கால் மத்திய அணி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. ஆட்ட நாயகனாக ஆவரங்கால் மத்திய அணி வீரர் சிந்துஜன் தெரிவு செய்யப்பட்டார். (ம-422)

# செந்தமிழ் அணி அரையிறுதிக்குள்

யாழ்ப்பாணம், ஓக. 12
உடுத்துறை பாரதியின் கால்பந்தாட்டத்தில் செந்தமிழ் விளையாட்டுக் கழகம் அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
பாரதியின் மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது காலிறுதி ஆட்டத்தில் செந்தமிழ் விளையாட்டுக் கழகம் மற்றும் விளைபூமி விளையாட்டுக் கழகம் என்பன மோதின. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 5:4 என்ற கோல் கணக்கில் செந்தமிழ் அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
(ம-108)

## ஐக்கியத்தின் கரப்பந்தாட்டம் விரைவில்

யாழ்ப்பாணம், ஓக. 12
இடைகாடு ஐக்கிய விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தத் திட்டமிட்ட 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை குறித்த கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறவுள்ளன.
இந்தத் தொடரில் 6 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன என ஏற்பாட்டார்கள் தெரிவித்துள்ளனர்.
(ம-23)

## திருநாவுக்கரசு மத்தி. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஓக. 12
தென்மராட்சி அபிவிருத்திக் கழக ஏற்பாட்டில் பிரதேச பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அணி முதலாமிடத்தைத் தனதாக்கியது.
மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்தத் தொடர் நடைபெற்ற மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி இரண்டாம் இடத்தையும், வரணி மத்திய கல்லூரி அணி மூன்றாம் இடத்தையும் தமதாக்கின.
வெற்றிபெற்ற அணிகளுக்கான பரிசில்கள் சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் இன்று மாலை நடைபெறும் தென்மராட்சி விழாவில் வைத்து வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது. (ம-9)

## இன்றைய மோதல்கள்



யாழ்ப்பாணம், ஓக. 12

**மகாலிங்கம் ஞாபகார்த்த துடுப்பாட்டம்**

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் மகாலிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான ரி-20 துடுப்பாட்டத் தொடரில் இன்று ஐந்து ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறிகாமாட்சி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**சரஸ்வதி ச.ச.நி. தாச்சித் தொடர்**

நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும் இணைந்து யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி தூர்க்கா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்த சிறி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



வவுனியா தரணிக்குளம் தரணதீபம் விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்ட அணி, டி.எஸ்.ஐ. கிண்ணத்துக்கான தேசிய மட்டத் தொடரில் விளையாடத் தகுதி பெற்றுள்ள நிலையில் அந்தக் கழகத்துக்கு நங்கூரம் விளையாட்டுக் கழகத்தால் ஜேர்சிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. (ம)

## சென். மேரிஸ் அரையிறுதியில்

பாரதியின் கால்பந்தாட்டத் தொடரில் கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
உடுத்துறை பாரதியின் மைதா... தில் தொடரின் ஆட்டங்கள் இ... பெற்று வருகின்றன. நேற்று ந... பெற்ற இரண்டாவது காலிறுதியாட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின்நிறைவுவரை எந்த அணியாலும் கோலெதுவும் பதிவாகவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:2 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# இந்து இளைஞர் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஓக. 12
கைதடி தெற்கு சனசமூக நிலையம் தனது 62ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண அணிகளுக்கு இடையில் இரண்டு பிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் 'பி' பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கிண்ணம் வென்றது.
கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் கரப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணி மோதியது.
ஐந்து செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 25:18, 25:20, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய இந்து இளைஞர் அணி 3:0 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது. (ம-422)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியூ பவர் சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக. 12
தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சிப் பிரதேச துடுப்பாட்ட அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் சங்கத்தானை நியூ பவர் அணி சம்பியனானது.
மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் நுணாவில் வின்டோஸ் அணியை வீழ்த்தியே நியூ பவர் அணி சம்பியனானது. பரிசளிப்பு நிகழ்வுகள் சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இன்று நடைபெறவுள்ள தென்மராட்சி விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது.
(ம-9)

## திருவள்ளுவர் வி.கழகத்தின் கால்பந்தாட்ட முடிவுகள் சில

யாழ்ப்பாணம், ஓக. 12
சரவணை திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் பொன் [illegible]ாவையும், திருவள்ளுவர் விளையாட்டுக் கழகத்தின் 37ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு தீவக ரீதியாக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சின்னமடு ஆலய மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் சில.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வேலணை ஐயனார் விளையாட்டுக் கழக அணியும், அல்லைப்பிட்டி சென். பிலிப் விளையாட்டுக் கழக அணியும் மோதின. இந்த ஆட்டத்தில் [illegible]ண்டு அணியினரும் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்கள் நிறைவில் எதுவித கோல்களையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:2 என்ற கோல் கணக்கில் ஐயனார் அணி வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் நயினாதீவு அண்ணா அணியும், புங்குடுதீவு ஈஸ்ரன் விளையாட்டுக் கழக அணியும் மோதின. இந்த ஆட்டத்தில் நயினாதீவு அண்ணா விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
பிறிதொரு ஆட்டத்தில் புங்குடுதீவு நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியும், மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழக அணியும் மோதின. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணியினரும் தலா ஓர் கோலைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு உதையின் மூலம் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் நண்பர்கள் அணி வெற்றிபெற்றது.
(ம-23)

### கராத்தே தொடர்களில்

# தெற்கு ஆசியாவில் 3 தங்கம் வென்று பாலுராஜ் ஆதிக்கம்




கராத்தே தொடர்களில் தெற்காசிய மட்டத்தில் இலங்கைத் தமிழர் பாலுராஜ் ஆதிக்கம் செலுத்தி வருகிறார். தெற்காசிய மட்டத்தில் இதுவரை மூன்று தடவைகள் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.
கிழக்கிலங்கையின் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சேனைக் குடியிருப்புக் கிராமத்தைச் சேர்ந்தவர் பாலுராஜ். 2014ஆம் 2016ஆம் ஆண்டுகளில் புதுடில்லியில் இடம்பெற்ற கராத்தே தொடரில் தங்கப் பதக்கத்தை வென்றிருந்தார்.
இந்த மாதம் 05ஆம் திகதி கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற தெற்காசிய கராத்தே தொடரில் தங்கப் பதக்கம் வென்றதன் மூலம் தெற்காசிய மட்டத்தில் ஒட்டுமொத்தமாக மூன்று தங்கப் பதக்கங்களை அள்ளியுள்ளார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் கடந்த வருடம் நடைபெற்ற தேசிய மட்டத் தடகளத் தொடரில் பாலுராஜ் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியிருந்தார். "எனது வெற்றிக்குக் காரணம் எனது தாயாரே. நான் எங்கு சென்றாலும் அவரும் என்னுடன் கூடவே வருவார். கராத்தேயில் என்னை எனது தாயார் அதிகம் ஊக்கப்படுத்துகிறார்" என உதயனுக்கு அப்போது வழங்கிய பிரத்தியேக செவ்வியில் பாலுராஜ் தெரிவித்திருந்தார். (ம)

## இலங்கை - இந்தியா இறுதி டெஸ்ட் இன்று

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.
இந்திய அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. முதலிரு ஆட்டங்களிலும் பெரு வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்துள்ளது இந்தியா. இந்த நிலையில் இறுதி டெஸ்ட் ஆட்டம் பல்லேகல மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் அதாவது இலங்கை வெற்றிபெற்றாலும் கிண்ணம் இந்தியாவிடம் இருந்து எடுத்துக் கொள்ளப் படமாட்டாது.
கடந்த இரண்டு ஆட்டங்களிலும் இலங்கை அணியின் பந்துவீச்சுப் பலமாக இருந்த கேரத் இன்று களமிறங்கமாட்டார். இது இலங்கைக்குப் பின்னடைவு. இந்திய அணியின் சகலதுறை வீரரான ஜடேயாவுக்கு இன்றைய ஆட்டத்தில் களமிறங்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அவரது இடத்துக்கு குல்தீப் யாதவ், அக்சர் பட்டேல் இருவரில் எவர் களமிறங்குவது என்ற போட்டி ஏற்பட்டுள்ளது. (ம)

## அஸ்வின், ஜடேயாவுக்கு ஒருநாள் தொடரில் ஓய்வு

இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில், இந்திய அணியின் சகலதுறை வீரர்களான அஸ்வின், ஜடேயா இருவருக்கும் ஓய்வு கொடுக்கப்படலாம் என்று தெரியவருகிறது.




இன்று ஆரம்பமாகும் இறுதி டெஸ்ட் ஆட்டம் முடிந்த பின்னர், எதிர்வரும் 20ஆம் திகதி ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் ஆரம்பமாகிறது. இந்தத் தொடரில் இருந்து ஜடேயா, அஸ்வின் இருவரையும் விடுவிக்க அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்று தெரியவருகிறது. இந்திய அணி அடுத்த மூன்று மாதங்களில் 23 ஆட்டங்களை அதன் சொந்த மண்ணில் எதிர்கொள்ளவுள்ளது. இந்தத் தொடர்களில் கவனம் செலுத்த வேண்டியுள்ளதாலேயே இந்த முடிவு எடுக்கப்படவுள்ளது. (ம)

## யாழ்ப்பாணம் மத்தி. – சென். ஜோன்ஸ் இன்று மோதல்


சென். ஜோன்ஸ் கல்லூரி


யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம், ஓக. 12
இங்கிலாந்து தமிழ் கிரிக்கெட் லீக்கின் அனுசரணையில் யாழ்ப்பாணம் மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் யாழ்ப்பாணம் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில், 17 வயதுப் பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கான இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி இன்று மோதவுள்ளது. யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இறுதியாட்டம் நடைபெறவுள்ளது.
நடப்பாண்டு நடைபெற்ற 13 வயதுக்கு உட்பட்ட பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும், 15 வயதுக்கு உட்பட்ட பிரிவில் சென். ஜோன்ஸ் கல்லூரியும் கிண்ணம் வென்றிருந்தன. இதனால் 17 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டம் பெரிதும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.
(ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு படைக்கும் முனைப்பில் கோக்லி

இலங்கைக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி சில வரலாற்றுச் சாதனைகளைப் படைக்க வாய்ப்புள்ளது.

இந்திய அணி, அதன் டெஸ்ட் வரலாற்றில் எந்த அணியையும் அன்னிய மண்ணில் வைத்து தொடர்ந்து மூன்று ஆட்டங்களை வென்றதில்லை. இதனால் இன்று ஆரம்பமாகும் ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றால் இந்த அடைவை எட்டிய முதல் இந்திய அணியின் தலைவர் என்ற பெயர் கோக்லிக்குக் கிட்டும். அதேபோல் டெஸ்ட் ஆட்டங்களில் மூன்று ஆட்டங்கள் அல்லது அதற்குக் கூடுதலான ஆட்டங்களை உடைய தொடரை இந்தியா இதுவரை அன்னியமண்ணில் முழுமையாகக் கைப்பற்றவில்லை. இதனால் இந்த அடைவையும் கோக்லி நிலைநாட்ட வாய்ப்புள்ளது. (ம)

ST. ANTONY'S
COMPUTER
No.187 K.K.S Road, Jaffna Town.
Tel : 021 222 4865, 075 069 8608
Email - antonyscomputer@gmail.com
HP வடமாகாண முகவர்
மாபெரும் மலிவு விற்பனை
HP Laptop
Quad Core - 47,990/-
Ram - 4GB, Hard disk - 500GB
i3 - 66,990/-
Ram - 4GB, Hard disk - 1000GB
i5 - 84,990/-
Ram - 4GB, Hard disk - 1000GB
1112 Printer இலவசம் 3 வருட உத்தரவாதம்
HP Desktop
Duel Core - 29,990/-
Ram -2GB, Hard disk - 250GB
i3 - 73,990/-
Ram - 4GB, Hard disk - 500GB
i5- 84,990/-
Ram - 4GB, Hard disk - 500GB
#187, K.K.S Road, Jaffna Town.
Tel: 021 222 4865, 075 069 8608
Sale !! Sale !! Sale !!
சகல விதமான Printerகள், Tonerகள், Cartridgesகள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு
நிபந்தனைக்கு உட்பட்டது

## மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 08 . 1941

மறைவு 05 . 08 . 2017

### கந்தையா துரைராஜா

ராசாமாளிகை, பிரம்படிலேன் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா துரைராஜா 05.08.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கச்சிஅம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், வசந்தி (இத்தாலி), மாலா, காலஞ்சென்றவர்களான ஜீவகுமார், தேவகுமார், மற்றும் கிசோக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவராஜா (இத்தாலி), M.S.தீன், குமுதினி (நோர்வே), சாந்தி (லண்டன்) ஆகியோரின் மாமனும், வாசுகி, காந்தீபன் (பிரான்ஸ்), பர்ஹானா, ஜீத், பர்வீன், அன்வர் (இத்தாலி), பஸ்னா, நல்னா, ரபாஸ், சுல்மிஹான், ஸஹானா (நோர்வே), ரிஷாந், டிலானி, (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்த மயானத்துக்கு முற்பகல் 11.00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ராசாமாளிகை
பிரம்படி லேன், கொக்குவில்.


தகவல்
குடும்பத்தினர்.

# இந்தியாவுக்கு எதிராக விளையாடுகிறார் திசர

இந்திய அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் இலங்கை அணியின் சார்பாக, திசர பெரேரா களமிறங்க அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்று தெரியவருகிறது.

இந்திய இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதியாட்டம் பல்லேகலவில் இன்று ஆரம்பமாகிறது. இதைத் தொடர்ந்து எதிர்வரும் 20ஆம் திகதி தம்புள்ளவில் ஒருநாள் தொடர் ஆரம்பமாகிறது. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் ஏனைய நான்கு ஆட்டங்களும் முறையே ஒகஸ்ட் 24, ஒகஸ்ட் 27, ஒகஸ்ட் 31, செப்ரெம்பர் 3 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன.

இந்தத் தொடரில் இலங்கை அணியின் சார்பாக திசர பெரேரா களமிறங்க வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. (ம)





வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் வடமாகாணத்திற்கு உட்பட்ட உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான எறிபந்தாட்ட பயிற்சி முகாம் மன்னார் ஆசிரியர் வள நிலையத்தில் நேற்றும், நேற்றுமுன்தினமும் நடைபெற்றது. (ம-422)

V2 TRAVELS
வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை விசா நீடிப்பு.
PASSPORT
VISA
(VISA EXTENSION)
யாழ்ப்பாணத்திலேயே இப்பொழுது செய்து கொடுக்கப்படும்.
0768227499
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

விநியோகஸ்தர் தேவை
போத்தலில் அடைக்கப்பட்ட சுத்தமான குடிநீர் விநியோகிக்க விநியோகஸ்தர் யாழ், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து தேவை. (19L - 1/2L வரை குடிநீர் தற்போது விநியோகத்தில் உள்ளது)
தொடர்பு - 077 6729 422, 078 233 9110

கணக்குப் பதிவாளர் தேவை
யாழ் நகரில் இயங்கி வரும் பிரபல வர்த்தக நிறுவனத்துக்கு கணக்குப் பதிவாளர் தேவை. ஆண்/ பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
தொடர்பு : 077 905 8252/ 077 074 8999/ 021 226 2941

விற்பனை பிரதிநிதிகள் தேவை
யாழ் நகரில் இயங்கிவரும் பிரபல புடைவை நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. ஆண். பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 074 8999/ 021 222 5571

# ரி-20 ஆட்டங்களை உருவாக்கியது நான்

## இப்படிச் சொல்கிறார் கெய்ல்



ரி-20 ஆட்டங்கள் தனக்காக உருவானவை என்று தெரிவிப்பதை விடுத்து, அவற்றை உருவாக்கியது தானே என்று சொல்கிறார் மேற்கிந்தியத் தீவுகளின் அதிரடி வீரரான கிறிஸ் கெய்ல்.

மேற்கிந்தியத் தீவுகளில் உள்ள ஊடகமொன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய செவ்வியிலேயே கெய்ல் இவ்வாறு குறிப்பிட்டார். "அதிகளவிலான ரி-20 ஆட்டங்களில் நாம் தற்போது விளையாடுகிறோம். இந்த ஆட்டங்கள் எனக்காக உருவாக்கப்பட்டன என்பதை விட ரி-20 ஆட்டங்களை உருவாக்கியது நான் என கூறுவது பொருத்தமாக இருக்கும்" என கெய்ல் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.